# குர்ஆனின் குரல்

جمادى الأولى ١٤٤٤

டிசம்பர் – 2022

₹25/-



# 999® LUNGIES

**இது வெறும் நம்பரல்ல,**
***நம்பிக்கை!***

LOCK BRAND
பூட்டு மார்க்கு

100 ஆண்டுகள் பாரம்பரியம் உறவு

**Customer Care: 89399 97475**

**Shop Online @ www.999lungies.com**

அனைத்து முன்னணி கடைகளிலும் கிடைக்கும்

# நடுநிலை மார்க்கம்

وَكَذٰلِكَ جَعَلْنٰكُمْ اُمَّةً وَّسَطًا لِّتَكُوْنُوْا شُهَدَآءَ عَلَى النَّاسِ
وَيَكُوْنَ الرَّسُوْلُ عَلَيْكُمْ شَهِيْدًا ؕ وَمَا جَعَلْنَا الْقِبْلَةَ الَّتِىْ كُنْتَ
عَلَيْهَآ اِلَّا لِنَعْلَمَ مَنْ يَّتَّبِعُ الرَّسُوْلَ مِمَّنْ يَّنْقَلِبُ عَلٰى عَقِبَيْهِ ؕ
وَاِنْ كَانَتْ لَكَبِيْرَةً اِلَّا عَلَى الَّذِيْنَ هَدَى اللّٰهُ ؕ وَمَا كَانَ
اللّٰهُ لِيُضِيْعَ اِيْمَانَكُمْ ؕ اِنَّ اللّٰهَ بِالنَّاسِ لَرَءُوْفٌ رَّحِيْمٌ ﴿۱۴۳﴾

"இதே முறையில் நாம் உங்களை ஒரு நடுநிலையுள்ள சமுதாயமாக ஆக்கியுள்ளோம்; (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களுக்கு சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், நம் தூதர் உங்களுக்கு சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும்; யார் (நம்) தூதரைப் பின்பற்றுகிறார்கள்; யார் (அவரைப் பின்பற்றாமல்) தம் இரு குதிங்கால்கள் மீது பின் திரும்பிச் செல்கிறார்கள் என்பதை நாம் அறிவிப்பதற்காகவேயன்றி, எதன் மீது (இதுவரை) நீர் இருந்து வந்தீரோ அந்த கிப்லாவை நாம் மாற்றவில்லை; இது அல்லாஹ் நேர்வழி காட்டியோருக்குத் தவிர மற்றவர்களுக்கு நிச்சயமாக ஒரு பளுவாகவே இருந்தது; அல்லாஹ் உங்கள் நம்பிக்கையை வீணாக்கமாட்டான்; நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிகப்பெருங்கருணை காட்டுபவன், நிகரற்ற அன்புடையவன். – அல்குர்ஆன் (2:143)

---

அல்லாஹுதஆலா நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயமாகிய நம்மை நடுநிலைச் சமுதாயமாக ஆக்கியுள்ளான். கொள்கை ரீதியாகப் பார்த்தால் யூதர்கள் உஜைர் (அலை) அவர்களை அல்லாஹ்வின் மகன் என்றார்கள். கிறிஸ்தவர்கள் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ்வின் மகன் என்றும், இல்லை இல்லை இறைவனே ஈஸாவின் உருவில் மனிதராக வருகை தந்துள்ளார் என்றெல்லாம் வரம்பு மீறிப் பேசினார்கள்.

ஆனால், நாமோ ரஸூலை ரஸூலின் அந்தஸ்திலும், அல்லாஹ்வை அவனது உயர் அந்தஸ்திலும் வைத்து சீரிய ஒழுங்கு முறையைப் பேணி வருகிறோம். ஒரு சமுதாயம் கடவுளே இல்லை என்கிறது. இன்னொரு சமுதாயமோ அனைத்தையும் கடவுள் என் கிறது. நடுநிலையாக, இறைவன் ஒருவனே! அவன் சகல சக்தி வாய்ந்தவன் என்கிறது இஸ்லாம்.

யூதர்களின் வேதநூல் அனைத்தும் சட்டங்களையும், அதனை மீறும்பொழுது தரப்பட வேண்டிய தண்டனைகள் பற்றியுமே தன்னுள் கொண்டதாகும்.

கிறிஸ்தவர்களின் வேத நூலான இன்ஜீல் முழுக்க போதனைகளைக் கொண்டதாகும். ஆனால், நமது திருமறை குர்ஆனிலோ, சட்டங்களைச் சார்ந்த வசனங்கள் ஐநூறு மட்டுமே! மற்றவை அனைத்துமே படிப்பினைகள், போதனைகள், உதாரணங்கள், காலம் கடந்த வரலாற்று உண்மைகள், சுபச் செய்திகள், எச்சரிக்கைகள், வாக்குறுதிகள் என ஒரு கதம்பமாக நடுநிலையாகத் திகழ்கிறது.

யூதர்கள் சனிக்கிழமை முழுவதும்; நஸாராக்கள் ஞாயிறு முழுவதும் வணக்கத்தில் ஈடுபட வேண்டும். ஆனால், நாமோ வெள்ளிக்கிழமை தினத்தை பாவங்களின்றி கழிப்பதுடன் ஜும்ஆ தொழுகைக்குரிய பாங்கு சொல்லப்பட்டதிலிருந்து தொழுகை முடியும் வரை ஈடுபட்டால் போதுமானது.

யூதர்கள் தங்களின் சொத்தில் நான்கில் ஒரு பாகத்தை அதாவது நூற்றுக்கு இருபத்தைந்து ரூபாய் வீதம் ஏழை நிதி ஜகாத் தர வேண்டும். நாமோ நூற்றுக்கு இரண்டரை ரூபாய் கொடுத்தால் போதுமானது.

வீட்டைத் துறந்து காடு, வனாந்திரம் எனத் துறவறம் செல்வது மற்ற சமூகத்தில் உள்ளது. ஆனால், நமது மார்க்கத்தில் துறவறமே கூடாது. தொழுகை நேரத்திற்கு பள்ளியில் ஆஜராவதே துறவற நன்மையைத் தரும்.

மற்ற சமூகத்தில் வணக்கஸ்தலம் சென்றே வணங்க வேண்டும். ஆனால், இஸ்லாத்தில் பூமி முழுவதும் பள்ளிதான். எல்லா இடங்களிலும் அவ்விடம் சுத்தமாக இருப்பின் தொழுது கொள்ளலாம்.

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி**

---

**நான்கு விஷயங்கள் முகத்தில் செழிப்பையும், சந்தோஷத்தையும் தரும்.**

1. அல்லாஹ்வின் பய பக்தி (தக்வா).
2. வாக்குறுதியை நிறைவேற்றுவது.
3. (பிறரையும் தன்னையும்) கண்ணியப்படுத்துவது.
4. பெருந்தன்மையுடன் நடப்பது.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

குரல் : 65 ☆ எதிரொலி –12

ஜமாதுல் அவ்வல்–1444 டிசம்பர் - 2022

# ஆளுநர் உடனே பதவி விலக வேண்டும்.

தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்றது முதல், நாள்தோறும் ஏதாவது சர்ச்சைக்குரிய கருத்தைச் சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அதற்குக் காரணம் தமிழகத்தில் தேவையற்ற வீண் சர்ச்சைகளை உருவாக்கி குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கமா? அல்லது தன்னை நோக்கிய கவனிப்பு எப்போதும் இருக்க வேண்டும் என்ற தாகமா? எனத் தெரியவில்லை.

எதுவாக இருந்தாலும் சனாதனம், ஆரியம், திராவிடம், பட்டியலின மக்கள், திருக்குறள் குறித்து அவர் கூறும் கருத்துகள் அபத்தமானவையாகவும், ஆபத்தானவையாகவும் இருக்கின்றன. ஆளுநரின் தனிப்பட்ட ஆன்மிக நம்பிக்கைகள் குறித்து நமக்கு எந்த விமர்சனமும் இல்லை. அதுபற்றி கவலைப்படவுமில்லை. ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆளுநர் பதவியில் இருந்து கொண்டு பழமைவாத நச்சரவங்களை நாட்டில் நடமாட விடுவது அவருக்கும் அழகல்ல, அவர் வகிக்கும் பதவிக்கும் அழகல்ல.

அவர் உதிர்க்கும் அபத்தவகைப்பட்ட கருத்துகளுக்கு எதிராகப் பலராலும் சொல்லப்படும் விளக்கங்களை அவர் ஏற்றுக் கொண்டதாகவும் தெரியவில்லை. தன்னை மாற்றிக் கொண்ட தாகவும் தெரியவில்லை. வழக்கம் போல் தனது பேச்சுகளைத் தொடர்ந்து கொண்டேதான் வருகிறார் ஆளுநர். இந்த வரிசையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமாகவே பேசத் துணிந்து விட்டார் ஆளுநர். அது அவர் எடுத்துக் கொண்ட பதவிப் பிரமாணத்திற்கே எதிரானது என்பதை உணர்ந்துதான் பேசுகிறாரா?

“இந்தியாவை மதச்சார்பற்ற நாடு எனச் சொல்கிறார்கள். எந்த ஒரு நாடும் ஏதாவது ஒரு மதத்தைச் சார்ந்துதான் இருக்க முடியும். அதில் இந்தியா விதிவிலக்கு அல்ல” எனப் பேசியிருக்கிறார் ஆளுநர். அதாவது தன்னைத்தானே இந்திய நாடாளுமன்றமாக, தன்னையே உச்சநீதிமன்றமாக, தானே இந்தியாவின் குடியரசுத் தலைவர் என

இன்னும் சொன்னால் இந்திய நாட்டின் மன்னராகவே அவர் நினைத்துக் கொண்டு பேசத் தொடங்கியிருக்கிறார்.

அவருக்கு உலக வரலாறும் தெரியவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டமும் தெரியவில்லை என்பது இதன் மூலம் தெரிகிறது.

எதுவும் தெரியாமல் எந்த ஒரு நாடும் ஏதாவது மதத்தைச் சார்ந்துதான் இருக்க முடியும் என ஆளுநர் சொல்வது உலகம் அறியாப் பேச்சாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரைக்கு எதிராக ஆளுநர் பேசுவதையும், கருத்து சொல்வதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். மதச்சார்பற்ற நாடு இது என்கிறது அரசியலமைப்புச் சட்டம். ஒரு மதத்துக்கு வக்காலத்து வாங்குபவராக ஆளுநர் தன்னைக் காட்டிக் கொள்கிறார். இதுவே அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது. அனைத்து மதங்களுக்கும் நடுநிலையானவராகவே ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும். அனைத்து மதங்களுக்கும் சமமான உரிமைகள் உண்டு என்கிறது இந்திய அரசியலமைப்புச் சட்டம்.

அனைத்து மதத்தவரும் சமம், மதத்தில் பாகுபாடு கூடாது. அனைவருக்கும் சமமான உரிமையும் விரும்பும் மதத்தைப் பின்பற்றுவதற்கு உரிமையும் உண்டு. தங்களது மதத்தைப் பிரச்சாரம் செய்ய உரிமை உண்டு. மதத்தை வளர்க்க வரி செலுத்தத் தேவையில்லை. அரசு நிறுவனங்களில் மதக் கல்வி கூடாது. சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் நடத்த உரிமை உண்டு. மதம் தாண்டிய இணக்கம், சகோதரத்துவத்தை பரப்புவது ஒவ்வொரு குடிமகனின் கடமை. மத அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் விடுபடுதல் இருக்கக்கூடாது. இவையனைத்தும் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளவை. இவையனைத்திற்கும் எதிராக ஆளுநர் பேசுகிறார்.

அனைத்தும் தெரிந்தே வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தும் எண்ணத்தோடு ஆளுநர் பேசுகிறார்.

ஆளுநர் பொறுப்பில் இருந்து கொண்டு அவர் பேசுவதால்தான் இந்தளவுக்கு இதற்கு முக்கியத்துவம் தர வேண்டியுள்ளது. இதனைவிடப் பெரிய பதவி எதையாவது எதிர்பார்த்து பாரதீய ஜனதா கட்சியின் தலைமையை மகிழ்விக்க ஆர்.என்.ரவி இப்படிப் பேசுவதாக இருந்தால் அவர் தனது ஆளுநர் பதவியை விட்டு விட்டு விலகி, இது போன்ற கருத்துகளைச் சொல்லட்டும். மாறாக, அப்பொறுப்பில் இருந்து கொண்டு பேசுவதை இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டு தர்ஹாக்களில் நடைபெறும் தேவையற்ற அனாச்சாரச் செயல்களை - "மத்ஹபை பின்பற்றத் தேவையில்லை" எனக்கூறுபவர்கள் கண்டிப்பதைப் போன்று, சுன்னத் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் கடுமையாகக் கண்டிப்பதில்லையே! ஏன்? (யாரையும் புண்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல, "ஷிர்க்" போல் பெரும் பாவமாக சில தர்ஹா சடங்குகள் மாறி விட்டதால் தான், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்.)

**தஞ்சாவூரிலிருந்து**
**உமர் ஷரீஃப்**

வீட்டுச்சுவற்று மூலைகளில் படர்ந்திருக்கக் கூடிய நூலாம் படைகளை ஒட்டடைக் குச்சியை வைத்து அகற்றுவதே சரியான அறிவாளியின் செயல் என்று கருதுபவர்கள் தான் நம்மவர்கள். ஆனால் அந்த நூலாம்படைகளை கடப்பாரை போன்ற பெரும் ஆயுதங்களைக் கொண்டு அகற்றுவதற்காக கட்டிடத்தையே அடித்து நொறுக்குவது தான் பொருத்தமான வேலை என்று கருதுபவர்கள்தான் அவாள்கள்.

புர்தா ஓதலாமா? புர்தா ஓதுவதினால் என்ன பயன்கள் கிடைக்கும்?

**சேலத்திலிருந்து**
**அப்துர் ரஹ்மான்**

ஓதலாம்! பொதுவாக புர்தா ஓதுவதால் நோய்கள் இன்ஷா அல்லாஹ் குணமாகும். மற்ற முஸீபத்துகளும் தூரமாகும்.

# பதில்கள்

மவ்லானா முஃப்தீ **மு.முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

தீனைப்பற்றி நன்கு விளங்கிக் கொண்டவர்கள் கூட சோத்துபானைக்கு பூ மாலை போட்டு, சாம்பிராணி புகை காட்டி ஊதுபத்தி கொளுத்தி துஆ ஓதும் பழக்கத்தை இன்றும் கடைபிடித்து வருகிறார்களே; இவர்கள் திருந்துவது எப்போது?

**நாமக்கல்லிலிருந்து**
**முஹம்மது ஜாபர்**

ஷரீஅத்துக்கு புறம்பான தவறான ஒரு குற்றத்தை குற்றம் என்று புரிந்து செய்பவன் இன்ஷா அல்லாஹ் என்றாவது ஒரு நாள் திருந்துவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால், குற்றத்தை குற்றம்என்று புரியாமல் அதையே தீன் என்று

நினைத்துச் செயல்படும் அனாச்சாரப் பிரியர்கள் திருந்துவது மிக மிக கடினம் என்பது நமது சங்கை மிகு பெரியார்களின் சிந்தனை மிக்க கருத்தாகும். அல்லாஹ்வே அவர்களுக்கு ஹிதாயத் செய்ய போதுமானவன்.

☛ ஹஜ் செய்யச் செல்லும் பொழுது வாங்கிய கடனை முழுவதுமாகச் செலுத்தியும், வரவேண்டிய பாக்கியை முழுவதுமாக வசூலித்தும் சென்றால் தான் ஹஜ் நிறைவேறும் என்று சொல்லப்படுகிறதே; அவ்வாறு தான் செய்யணுமா? அது முடியுமா?

**புதுக்கோட்டையிலிருந்து**
**ஹபீப் முஹம்மது**

✍ நிச்சயம் அப்படியெல்லாம் ஷரீஅத் சொல்லவில்லை.

☛ இமாம் ஜமாஅத்தில் பர்ளு தொழுகை தொழுதவுடன் இமாம் அவர்கள் சற்றுநேரம் அமர்ந்து மௌனமாக ஓதியவுடன் அடுத்து சுன்னத்து, நஃபில் தொழுகிறார். அது மாதிரி, நாமும் (பின்னால் நின்று தொழுபவர்களும்) ஃபர்ளு தொழுதவுடன் உட்கார்ந்து சிறிது நேரம் ஓதி விட்டு அடுத்த ரக்அத்துகள் தொழ வேண்டுமா?

**புதுச்சேரியிலிருந்து**
**முஹம்மது தாஹா**

✍ அவசியமில்லை!

☛ மஹல்லாவாசிகள், உறவினர்கள், சகோதரர்கள், நண்பர்கள் பலரோ அல்லது ஒருவரோ அறுப்பதற்கு வசதியாக உள்ளது என்பதற்காக ஒரே இடத்தில் பல மிருகங்களை அறுத்து குர்பானி கொடுப்பது ஆகுமா?

**தேனியிலிருந்து**
**அபூதாஹிர்**

✍ தன்னுடனிருந்த ஒரு ஆடு பலியிடப்படுவது போன்று தானும் பலியிடப்படுவோமோ என்று பயப்படுமளவு அந்த குர்பானிப் பிராணியை மற்ற குர்பானிப் பிராணி முன்பு வைத்துக் கொண்டு அறுப்பது மக்ரூஹாகும். இந்த நிலை இல்லையெனில் பரவாயில்லை.

☛ என் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்துவந்தார். அல்லாஹ்வின் உதவியால் ஹஜ்ஜை முடித்து ஊர் திரும்பியுள்ளார். இப்போது இங்கேயே தொழில் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம். ஹலாலான சம்பாத்தியம் கிடைக்கவும், தொழிலில் முன்னேற்றம் ஏற்படவும், தொழிலில் பரக்கத் ஏற்படவும் இறைவனைத் தவிர வேறு யாரிடமும் கையேந்தாமல் இருக்கவும் தினமும் என்ன ஓத வேண்டும்?

**கம்பத்திலிருந்து**
**அப்துர் ரஊஃப்**

✍ தினமும் காலை ஃபஜ்ரு தொழுதபின் சூரா யாசீன் ஓதியும், மாலை மஃக்ரிபுக்குப் பின்பு சூரா வாகிஆ ஓதியும் நம்பிக்கையோடு துஆ செய்து வாருங்கள். இன்ஷா அல்லாஹ் தங்களின் இந்தப்பிரச்சனைகள் விரைவில் தீர்க்கப்படும்.

☛ இரு பெருநாட்களில் "இஷ்ராக்" தொழுகை தொழக் கூடாது என்று சிலர் கூறுகின்றனர். ஷரீஅத் கூறுவது என்ன?

**முதுகுளத்தூரிலிருந்து**
**பைஜுர் ரஹ்மான்**

✍ இரு பெருநாட்களிலும் ஈத் தொழுகைக்கு முன்பு எந்த நஃபிலான தொழுகையையும் வீட்டிலோ அல்லது பள்ளியிலோ தொழுவது மக்ரூஹாகும். பெரு நாள் தொழுகை முடிந்த பின்பு நஃபிலான தொழுகைகளை பள்ளிகளில் தொழுவது மட்டும் மக்ரூஹாகும். வீட்டில் தொழுவது தவறல்ல.

☛ தினசரி காலண்டர்களில் "குர்ஆன்" வசனங்களின் மொழி பெயர்ப்பை அச்சிட்டு வெளியிடுவதைப்பற்றிஷரீஅத் கூறுவது என்ன? தினசரி சீட்டுகள் கடைசியில் குப்பைகளுக்குத் தானே செல்கின்றன?

**பாளையங்கோட்டையிலிருந்து**
**உதுமான் அலீ**

✍ ஆம்! தினசரி காலண்டர்களில் ஆயத்து அல்லது ஹதீஸ்களை அச்சிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

☛ தற்போது காலத்திற்கேற்ப ஆயுள் காப்பீடு எடுப்பது அதிகரித்து கொண்டுவுள்ளது. பஜாஜ் அலைன்ஸ் என்ற நிறுவனத்தில் பாலிசி எடுத்தால் அந்தத் தொகையை பல்வேறு நிறுவனங்களில் முதலீடாகக் கொடுத்து அதில் வரும் இலாபத்தையே பகிர்ந்து அளிப்பதாகக் கூறுகிறார்கள். ஆகவே அந்த கம்பெனியில் பாலிசி எடுத்தால் 20 வருடம் கழித்து 18 லட்சம் ரூபாய் கிடைப்பதாகக் கூறுகிறார்கள். இதில் எங்கள் பகுதியில் உள்ள அறிஞர் ஒருவர் முகவராகச் செயல்பட்டு நிறைய முஸ்லிம்களைச் சேர்ந்துள்ளார். இதில் பாலிசி போடுவது ஹலாலா! ஹராமா! என்பதற்கு தகுந்த விளக்கம் தேவை.

**சிவகங்கையிலிருந்து**
**இஸ்மாயீல்**

✍ மேற்படி பாலிசிகள் ஹராம் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

☛ இன்னும் எல்லோரும் 1400 வருடங்களுக்கு முன்பு என்று சொல்கிறார்கள், எழுதுகிறார்கள். இன்னும் மாறவில்லையா? 1444 ஆகியும் அந்த 1400ரை மறக்காமல் எழுதுகிறார்களே ஏன்?

**சூத்தாநல்லூரிலிருந்து**
**அப்துர் ரஹீம்**

✍ 1200, 1300 என்று ஏற்கனவே சொல்லியவர்கள் இப்பொழுது 1400 என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். நூறு நூறாகச் சொல்லி ஒரு நூற்றாண்டுடைய "நூர்" எனும் ஒளியை பெற்றுக் கொள்வதற்காகக் கூட இவ்வாறு சொல்லலாமல்லவா? இதற்கு முந்திய காலங்களிலும் கூட 1250 அல்லது 1350 ஆண்டு கள் என்று யாரும் சொன்னதை பெரும்பாலும் யாரும் கேள்விப் பட்டதில்லையே! அதுபோன்று தான் இதுவும்.

தொழுகையில் ஏதாவது தவறுஏற்பட்டுவிட்டால்இருப்பில் ஸஜ்தா ஸஹ்வு செய்கிறோமே! அப்போது 'சுப்ஹான ரப்பியல் அஃலா' என்பதற்கு பதிலாக 'சுபுஹான மன்லாஎனாமு வலா யஹ்சுரு' என்று ஓத வேண்டுமா?

**திண்டுக்கல்லிலிருந்து முஹம்மது நாஸர்**

அப்படி எந்த துஆவும் ஆதாரப்பூர்வமான கிதாபுகளில் இருப்பதாக நமக்குத் தெரியவில்லையே!

புகைப்படம் எடுப்பது ஹராம் என்றும், அதை வீட்டில் வைத்திருந்தால் மலக்குகள் வீட்டிற்குள் வரமாட்டார்கள் என்றும் ஷரீஅத்தில் கூறப்பட்டுள்ளதாக அறிகிறேன். ஆனால் ரேஷன் கார்டு, லைசென்ஸ், பாஸ்போர்ட், வாக்காளர் பட்டியல் போன்ற அவசியத் தேவைகளுக்காக புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம் என்று விதிவிலக்கு இருப்பதாகவும் "குர்ஆனின் குரல்" பதில்கள் பகுதியின் மூலம் அறிந்துள்ளேன். மேற்கண்ட அவசியத் தேவைகளுக்கு பயன்படுத்தியது போக மீதியுள்ள புகைப்படங்களை பின்னால் தேவைப்படும் எனக் கருதி வீட்டில் பெட்டியிலோ, பீரோவிலோ வைத்திருப்பது குற்றம் ஆகுமா? அப்படி உபயோகப் படுத்தாமல் வைத்திருந்தாலும் மலக்குகள் வர மாட்டார்களா?

**பள்ளபட்டியிலிருந்து சதாம் ஹுஸைன்**

அதுவும் ஏதாவது ஒரு அவசிய தேவையைக் கருதியே வைக்கப்பட்டிருந்தால் பரவாயில்லை. உதாரணமாக சிலர் அடிக்கடி பாஸ்போர்ட், விசா, அரசு அலுவல்கள் போன்ற காரியங்களுக்காக தங்களது போட்டோக்களின்பால் தேவையாகிக் கொண்டே இருப்பார்கள். இது போன்ற தேவை இருந்தால் பரவாயில்லை. அப்படி இல்லாத நிலையில் எடுத்து வைப்பதும் நிச்சயம் தடுக்கப்பட்ட காரியமாகும்.

நாம் பெரியவர்களைச் சந்தித்தால் சலாம் கூறி நமக்காக துஆச் செய்யும்படி சொல்வோம். அதே போல் அவுலியாக்கள், ஷஹீதான வலிமார்களின் அடக்கஸ்தலங்களுக்குச் சென்றால், நமக்காக அல்லாஹ்விடத்தில் துஆ செய்ய சொல்லலாமா?

**திண்டிவனத்திலிருந்து முஹம்மது இப்ராஹீம்**

அப்படிச் சொல்லக்கூடாது. மாறாக அது போன்ற அடக்கஸ்தலங்களுக்குச் சென்றால் குர்ஆனின் சூராக்கள், வசனங்களை ஓதி அவர்களின் மறுமையின் நல்வாழ்விற்காக துஆ செய்வதுடன் "அவர்களின் பொருட்டால், அந்த நல்லவர்களின் பரக்கத்தால் யா அல்லாஹ்! எங்களின் இன்ன தேவைகளை நிறைவுபடுத்துவாயாக" என்று அல்லாஹ்விடத்தில் துஆ செய்வதும்தான் ஷரீஅத் சொல்லித் தரும் நல்ல ஒரு வழியாகும்.

# நன்மையைக் கொண்டு தீமைகளை அழிப்போமா?

اِتَّقِ اللّٰهَ حَيْثُ مَا كُنْتَ وَاَتْبِعِ السَّيِّئَةَ الْحَسَنَةَ تَمْحُهَا وَخَالِقِ النَّاسَ بِخُلُقٍ حَسَنٍ

“எங்கிருந்தாலும் அல்லாஹ்வை பயப்படு. ஒரு தீயதை (செய்துவிட்டால்) உடனே அதை அழித்து விடக்கூடிய நன்மையைச் செய்துவிடு. நற்குணத்தைக் கொண்டு மக்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்”

என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள்

(நூல் : திர்மிதீ, மிஷ்காத் பக்கம் 432)

தீமைகளை அழிக்கும் நற்காரியங்களை குர்ஆனின் ஒளியால் மனிதர்களுக்கு வெளிச்சமிட்டு காட்டிக் கொண்டிருக்கும் குர்ஆனின் குரலின் சேவை கியாமத் வரை நிலை பெற துஆ செய்வோம்!


**செய்யது சகோதரர்கள்**

**நாகூர்**

☛ ஓதும்போது ஸஜ்தா ஆயத்து வருகிறது. கண்டிப்பாக ஸஜ்தா செய்யவேண்டுமா? மற்றும் மனனம் செய்யும்போது ஒவ்வொரு முறையும் ஸஜ்தா செய்ய வேண்டுமா? ஸஜ்தாவில் தொழுகையில் ஓதக்கூடிய தஸ்பீஹையே ஓதி ஸஜ்தா செய்தால் போதுமா?

**கொடைக்கானலிலிருந்து முஹையித்தீன்**

✍ குர்ஆன் ஓதும்போது வரக்கூடிய ஸஜ்தா ஆயத்துக்களுக்காக கண்டிப்பாக ஸஜ்தா செய்ய வேண்டும். மனனம் செய்யும் நோக்கிலோ அல்லது வேறு காரணத்திற்காகவோ ஒரே ஆயத்தை திரும்பத் திரும்ப ஒரே இடத்தில் அமர்ந்து அல்லது ஒரே ஹாலுக்குள் உலாவிக் கொண்டே ஓதினால் ஒரே ஸஜ்தா போதுமானது. ஆனால் இடங்கள் இரண்டாகவோ அல்லது மூன்றாகவோ மாறினால் அதற்குத் தகுந்தாற் போல் அத்தனை தடவைகள் ஸஜ்தா கட்டாயமாகிவிடும். மேலும் தொழுகையின் ஸஜ்தாவில் ஓதக்கூடிய தஸ்பீஹ்களே போதுமானது என்றாலும் அதற்கென்று பிரத்யேகமாக கிதாபுகளில் காணப்படுகின்ற துஆவையும் ஓதலாம்.

☛ எனது ஒரு மகள் கொலை செய்யப்பட்டாள். அந்த மகளுக்கு ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ளது. இப்பொழுது கொலை செய்யப்பட்டவளின் பெண் குழந்தைக்கு, அந்த குழந்தையின் தாய், தந்தை சொத்திலிருந்து அவசியம் பங்கு தர வேண்டுமா?

✍ ஆம்! அவசியம்! அவசியம் தரவேண்டும். மறுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை.

☛ இஸ்லாமிய சொத்துரிமைச் சட்டப்படி இன்று இஸ்லாமியர்கள் நடக்கிறார்களா என்ன?

**தஞ்சையிலிருந்து முஹம்மது அலீ**

✍ பலர் அந்தச் சட்டத்தைப் பேணி நடக்கிறார்கள். சிலர் மட்டும் தங்கள் இஷ்டப்படி செய்து கொள்கிறார்கள் என்பது தான் எமது கருத்து.

☛ ஹத்தம், சந்தனக்கூடு, பூப்பெய்துவிழா, வளைக்காப்பு விழா, காது குத்தும் விழா, சுன்னத் விழா மேற்கூறப்பட்ட எல்லா விழாக்களும் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் செய்யப்படவில்லைதான். ஆனால் அதைச் செய்தால் யாராவது பாவம் என்று சொன்னால் விட்டுவிடுகிறேன் என்கிறார் ஒருவர். தயவு செய்து விளக்கம் தருக.

**இராஜபாளையத்திலிருந்து பாத்திமா ரிஜ்வானா**

✍ ஷரீஅத் விரும்பாதவற்றில் செலவுகள் செய்வது வீண் விரயம் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. "வீண்விரயம் செய்பவர்கள் ஷைத்தானின் சகோதரர்கள்" என்று அல்குர்ஆன் குறிப்பிடும் வேகமான

தன்மையை பார்க்கும்போது அதன் வெளிரங்கமும், உள்ரங்கமும் நிச்சயம் ஒரு குற்றச்செயல் என்பதையே காட்டுகிறது. அந்த வகையில் மேற்சொல்லிய ஆடம்பரமான செலவுகளை ஷரீஅத் சொல்லவுமில்லை. ஷரீஅத் அதைவிரும்பவுமில்லை. இப்படிப்பட்ட நிலையில் அந்த விருந்துகளுக்காக செலவு செய்வதும் அவற்றை பெரிதுபடுத்தி விளம்பரப்படுத்தி ஆடம்பரத்துடனும், பெருமைகளுடனும் செய்வதும் நிச்சயம் வீண் விரயம் என்றும், அது ஒரு பாவச்செயல் என்றும் ஏன் சொல்ல முடியாது? இதே போன்று பல இஸ்ராஃபான காரியங்களைச் செய்வதில் நமது சமுதாய மக்கள் முன்னோடியாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். கேட்டால் "அதிலென்ன பாவம் இருக்கிறது? நாம் நல்லதைத் தானே செய்கிறோம். விருந்து என்பது ஒரு நல்ல காரியம் தானே" என்பது போன்ற அலட்சியமான பதில்கள் பெருகிவிட்ட காரணத்தினால் தான் பித்அத்துக்கள் அதிகமாகி நபி (ஸல்) அவர்களின் உயர்தரமான சுன்னத்துக்கள் நசிந்து கொண்டிருக்கின்றன. அல்லாஹ் பாதுகாப்பானாக!

☛ ஈமான் கொண்டவர்கள் மட்டும் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தாவார்கள். மற்றவர்கள் அவர்களின் உம்மத்தவர்களாக ஆகமாட்டார்களா?

**ஓசூரிலிருந்து**
**எம்.ஏ.காதிர்**

✍ அனைவருமே பரிசுத்த நபியவர்களின் உம்மத்தவர்கள் தான் என்பதில் சந்தேகமில்லை.

☛ நாங்கள் ஹலால், ஹராமை பேணி நடப்பவர்கள். யாரிடத்திலும் கடன் வாங்கும் பழக்கம் இல்லாதவர்கள். எங்கள் பெண் பிள்ளைக்கு வயது இருபது. மாப்பிள்ளை வந்தால் கரைசேர்ப்பதற்கு கையில் ஏதும் பணமில்லை. இந்நிலையில் கடையின் பெயரில் பேங்கில் லோன் போட்டு வாங்கி செலவு செய்யலாமா? தனிநபரிடம் கடன் கேட்டாலும் அவர்களும் வட்டி கேட்கிறார்கள். என்ன செய்வது?

**மதுரையிலிருந்து**
**கா.பாத்திமா பேகம்**

✍ பேங்கில் லோன் பெறுவதும் தனிநபரிடம் வட்டிக்கு பணம் வாங்குவதும் ஹராம் என்பதில் சந்தேகமில்லை. முயற்சி செய்தால் இன்ஷா அல்லாஹ் ஹலாலான வழியில் கடன் கொடுப்பதற்கும் ஆட்கள் கிடைப்பார்கள். அப்படி வட்டியின்றி கடன் கொடுக்கும் பைத்துல்மால்களும் இன்று உருவாகிவிட்டன. ஆடம்பரங்களும், வீண் செலவுகளும் பெருத்துவிட்ட இந்தகாலத்திலும் சில திருமணங்கள் எளிமையாக, செலவின்றி நடைபெறுவதை பார்க்கிறோம். எனவே, முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் அதன் வழிகளை இலேசாக்குவான். **துஆ என்பது மிக மிக வலுவான ஒரு ஆயுதம். மறந்து விடாதீர்கள்.**

பஸ்ஸிலோ, ரயிலிலோ பயணம் செய்யும்போது பெரும்பாலும் எந்த வேலையும் இன்றி சும்மாதான் இருக்கிறோம். அந்நேரத்தில் யாசீன் போன்ற மனதில் பதித்து வைத்திருக்கக்கூடிய சூராக்களை ஓதலாமா? அதற்கு ஒளு அவசியமா?

**செங்கோட்டையிலிருந்து**
**ஏ.அப்பாஸ்**

ஒளுச் செய்ய வசதியிருப்பின் ஒளுச் செய்து கொண்டு ஓதுவதுதான் சிறப்பு. ஒளு இல்லாமல் ஓதினாலும் அது ஒரு பாவமான செயலாக ஆகாது.

ஒரு ஊரில் நடைபெறும் நிக்காஹ்வில் மணமகன் வாங்கும் வரதட்சணை தொகைக்கு இத்தனை சதவீதம் பள்ளிவாசலுக்கு கமிஷனாக தந்துவிட வேண்டும் என்று கூறி பள்ளி நிர்வாகிகள் அப்பணத்தை வாங்கி பேஷ் இமாம் மற்றும் பள்ளி நிர்வாகச் செலவுகளுக்கு பயன்படுத்துகிறார்கள். அப்படி செய்ய மார்க்கத்தில் அனுமதியுண்டா?

**கர்நாடகாவிலிருந்து**
**ஏ.அப்துல்லாஹ்**

நிக்காஹ் நடத்துவதற்காக பள்ளிவாசலுக்கு வாடகையாக அல்லது நன்கொடையாக மணமகனுடைய சக்திக்கு தகுந்தவாறு தொகைகளை வசூலிப்பது தவறல்ல. ஆனால், வரதட்சணை என்ற பெயரை சொல்லி கமிஷன் பெறுவது, ஹராமான வரதட்சணையை தடுப்பதற்கு பகரமாக அதை ஊக்குவிப்பதாகவல்லவா ஆகிவிடும். ஒரு முழு ஜமாஅத்தே அதற்கு துணை போவது ஒரு மாபெரும் குற்றச் செயல் என்பதை ஜமாஅத் நிர்வாகிகளும், உறுப்பினர்களும் நிச்சயமாக உணர கடமைப்பட்டுள்ளார்கள்.

பிரயாணத்தில் கஸர் தொழுகும்போது பாங்கும், இகாமத்தும் அவசியம் சொல்ல வேண்டுமா?

**பேரையூரிலிருந்து**
**அ.நைனார் முஹம்மது**

ஆம்! அவசியம் ஒவ்வொரு தொழுகைக்கும் பாங்கும், இகாமத்தும் சொல்ல வேண்டும்.

தினந்தோறும் ஐவேளை தொழுகையில் ஷாபியீ மத்ஹபின்படி பாங்கு சொல்லியதிலிருந்து அந்தந்த தொழுகையுடைய வக்து முடியும் நேரம் எதுவரை நீடிக்கிறது? அதில் களா ஏற்படாமல் இருக்கும் நேரத்தையும் தெரிவிக்கவும்.

**மானூரிலிருந்து**
**ஏ.மன்சூர்**

பொதுவாக ஒவ்வொரு மத்ஹபின்படியும் ஒவ்வொரு தொழுகைக்கும் சூரிய உதயம், சூரியஅஸ்தம் மற்றும் வானிலைகளை கவனித்து நேரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அது வெயில், மழை, குளிர் காலங்களை பொறுத்து மாறிக் கொண்டே


Since 1977-2017
40
Years
Customer Service
ஆடைகளால் ஆனந்தம்
மஹாராஜா
சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்
தஞ்சாவூர்

இருக்கும். அதற்காகவே அல்லாமா அமானீ ஹள்ரத் ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்ற சங்கைமிகு வலிமார்களால் தொகுத்து அளிக்கப்பட்டுள்ள "தொழுகை, நோன்பு கால அட்டவணை" என்ற பெயரில் இஸ்லாமிய புத்தகக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் அவசியமான பொருளாக மாட்டி பாதுகாத்து வைக்கப் பட்டிருக்கிறது. தாங்கள் விரும்பினால் அவைகளை மஸ்ஜிதுகளில் சென்றும் பார்த்துக் கொள்ளலாம். அல்லது தங்களுக்கென்று தங்கள் இல்லத்திலும் வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

☛ எங்கள் ஊர் ஜமாஅத்தை சேர்ந்த ஒருவர் தன்னுடைய மகளுக்கு பதிவு அலுவலகத்தில் திருமணம் செய்துள்ளார். மாப்பிள்ளை வேறு ஊரைச் சேர்ந்தவர். இருப்பினும், இரு வீட்டார்களுமே உறவினர்கள். திருமணச் சான்று எங்களது மஹல்லாவில் கொடுக்கவில்லை. அடுத்த மஹல்லாவில் வாங்கிச் சென்றுள்ளார். இந்த நிலையில் பள்ளி நிர்வாகம் அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும்?

✍ அப்படிப்பட்டவர்களை விட்டும் அவர்களின் செயல்பாடுகளை விட்டும் நாம் ஒதுங்கி கொள்வதே இன்ஷா அல்லாஹ் அவர்கள் திருந்தி மீண்டு வருவதற்கு ஒரு வழியாக அமையும் என்று நம்புகிறோம்.

☛ கணவர் தஃஃவத், தப்லீக் வேலைகளில் ஈடுபடுகிறார். மனைவியோ மார்க்கத்தில் தடுக்கப்பட்டுள்ள அனாச்சாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இதன் காரணம் என்ன?

**கேரளாவிலிருந்து**
**எம்.அப்துல்லாஹ்**

✍ இதற்கு போய் என்ன காரணத்தை தேடுவது? அவரவர்கள் சிறுவயதிலிருந்து பழக்கப்படுத்தப்பட்ட பழக்கங்களும், நடைமுறைகளுமே அவர்களை அந்தந்த திசைகளில் இழுத்துச் செல்கிறது. கணவருடைய தப்லீக் உடைய வேலை மனத் தூய்மையுடனும், பெரியார்கள் சொல்லித்தந்த முறையான வழியுடனும் அமைந்து விடுமானால் இன்ஷா அல்லாஹ் விரைவில் அந்த வேலை இந்த மனைவியையும் தன் பக்கம் ஈர்த்துக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

**குர்ஆனின் குரலின் விற்பனை முகவராக உங்களையும் ஈடுபடுத்தி முழு உம்மத்தும் ஹிதாயத் பெற வழி செய்யுங்களேன்.**

# பல ஆயிரம் ஆதம்கள்!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

மலக்குகளிடம் அல்லாஹ் சொன்னான் : ஆதமுக்கு சஜ்தா செய்யுங்கள் என்று; இப்லீஸைத் தவிர மற்றவர்கள் சஜ்தா செய்தார்கள்.

நெருப்பால் படைக்கப்பட்ட நான், மண்ணால் படைக்கப்பட்ட மனிதனுக்கு சஜ்தா செய்ய முடியாது என்று கூறிவிட்டான் இப்லீஸ். அன்று தொடங்கிய எதிர்ப்புக் கொள்கைகள், சமுதாயத்தில் மட்டுமல்ல, உலகளாவிய அளவு எல்லா இனத்தினிடையிலும், மொழி யினரிடையிலும், ஜாதி மதத்தவரிடையிலும் பரவி விரவி இருந்தாலும் முஸ்லிம் சமுதாயத்தில் பல பிளவுகளையும், குழப்பங்களையும் இப்லீஸ் ஏற்படுத்தி அவை தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஹள்ரத் ஆதம் (அலை) அவர்கள் தோன்றி 6,500 ஆண்டுகள் ஆகிறதென ஒரு கணக்குச் சொல்லப்பட்டாலும், இதற்கு முன் பல உலகங்கள், பல ஆதம்கள் படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் உமது வயது என்ன? என்று கேட்கப்பட்ட போது, 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஒரு நட்சத்திரம் தோன்றும், இதுவரை நான் 72 ஆயிரம் நட்சத்திரங்களைப் பார்த்திருக்கிறேன் என்றார்கள். அப்படியானால் உலகம் தோன்றிய கணக்கு முதல் ஆதம் படைக்கப்பட்டதெல்லாம் ஒரு கணக்கின் வரம்புக்குள் வராது போல் தெரிகிறது.

ஒருவர் கஃபத்துல்லாஹ்வை தவாபு செய்வதாகக் கனவு கண்டார். அப்போது ஒரு முதியவர் இவரிடம், நீர் என் மூதாதையரில் ஒருவர் என்றார்.

தாங்கள் எப்போது வபாத்தானீர்?

40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் என்றார்.

ஆதமின் காலத்தைவிட அதிகமாகத் தெரிகிறதே.

நீர் எந்த ஆதமைச் சொல்கிறீர்? உமக்கு சமீப காலத்தில் கண்ட ஆதமையா அல்லது வேறு ஆதமையா? என்று கேட்டார்.

அப்போதுதான், அல்லாஹ் ஒரு நூறாயிரம் ஆதம்களைப் படைத்திருக்கிறான் என்ற

நபிமொழி நினைவுக்கு வந்தது என ஹள்ரத் இப்னு அரபி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

நூல் : ஃபுத்தூஹாத்துல் மக்கிய்யா 3-ம் பாகம்

இப்படி நம்முடைய ஆதமின் காலத்தில், ஆதமுக்கு சஜ்தா செய்யாத இப்லீஸ், இன் றளவு மட்டுமல்ல, கியாமத் வரை என் வேலையைச் சரியாக செய்து கொண்டிருப்பேன் என்று அல்லாஹ்விடமே சொல்லி விட்டு வந்ததன் காரணமாக பிரிவுகள், பிரிவினைகள், சண்டை, வகுப்பு வெறிகளுக்கு பஞ்சமில்லாமல் நடந்து வரு கின்றன. நாரதர் என்ற பெயரில் வகுப்புவெறியைக் கிளறிவிட்டுக் கொண்டிருப்பவன் தான் இப்லீஸ். நம் சமுதாயத்தில் மனித உருவத்தில் குழப்பங்களை விளைவித்து வருபவன்தான் இப்லீஸ்.

**“ஜின், மனித இனத்திலி ருந்து நரகத்திற்கு அதிகமான வர்களைப் படைத்துள்ளோம், அவர்களுக்கு இதயம் இருக்கும், விளங்கமாட்டார்கள்; செவிகள் இருக்கும், செவிமடுக்க மாட்டார் கள்; கண்கள் இருக்கும் பார்க்க மாட்டார்கள். அவர்கள் கால்நடை களைப் போன்றவர் கள்; மேலும் அவற்றை விட வழி கெட்டவர்கள்”**

- அல்குர்ஆன்

இவர்கள் செய்வது இவர் களுக்கு அநியாயமாக உணர்வ தில்லை. அதனால்தான் இவர் களுக்கு இதயமிருக்கும்; உணர மாட்டார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

இன்றைய ஆதமுடைய மக்களே பலகோடி பேர் இருக் கிறார்கள், இதற்கு முன் நூறா யிரம் ஆதமுடைய மக்களைச் சேர்த்தால் எத்தனை லட்சம் கோடிபேர்? அவர்களில் அதிக மானோர் நரகவாசிகள் என்றால், நரகத்தின் கொள்ளளவும், அதன் எடையும் விவரிக்க முடியாத, விளங்க முடியாத, அறிவுக்கெட் டாத, இறைவனின் பிரம்மாண்ட படைப்பாகயிருக்க வேண்டும்.

**“அல்லாஹ்விடமும், அவனுடைய ரசூலிடமும் போர் செய்பவர்கள், பூமியில் குழப்பம் செய்ய முயற்சிக்கிறார்கள். இவர் களுக்கு மறுமையில் பிரம் மாண்டமான வேதனை உண்டு”**

- அல்குர்ஆன்

இன்று நாட்டில் நடக்கும் பொதுவான குழப்பங்கள், சண்டைகள், கொள்ளைகள், கொலைகள், வன்மங்கள், வெறித் தனங்கள், வெறிப்பேச்சுக்கள், முனாஃபிக்தனங்கள், ஏமாற்று தல், பித்தலாட்டங்கள், பொய்கள் எதுவும் நரகை விட்டும் பாது காப்பதாக இல்லை.

**நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?**

கடவுள்பக்தி, இறைபக்தி என்பது அறியாத ஒன்று போலிருக்கிறது. எந்த மதத்திலும் வன்முறைத் தூண்டுதல் சொல்லப்படாதிருக்கும் போது இவற்றை மதக் கோட்பாடுகள் போல் செய்கிறார்கள்.

படித்தவன் - பாமரன், ஏழை - பணக்காரன் என்ற வித்தியாசமின்றி அறியாமை தாண்டவமாடுகிறது.

நீதி பேசுபவனிடம் நீதி இல்லை, உண்மையாளன் என நம்பப்படுபவனிடம் உண்மை இல்லை. ஈமானுக்கும், வாழ்க்கைக்கும் சம்பந்தமேயில்லாத வாழ்க்கைமுறை.

இவர் இபாதத்தாரி, ஆபித், வணக்கசாலி, ஷைக் என்போரிடம் கூட பிழை காணப்படுகிறது.

ஷைத்தான் தன் வேலையில் ஓய்வெடுத்துக் கொள்ள அவனுடைய வேலைகளை மனித உருவில் செய்யக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

சொத்து, பாகப்பிரிவினை போல், மார்க்கத்தை பிளவுபடுத்தி, விரோதிகளாக, குரோதி களாகப் பிரித்து வைத்து, இதன் மூலம் சிலர் இலாபமடைவதே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்களென்றால், தீன் விலை பேசப்பட்டு விட்டது என்று பொருள்!

போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஒவ்வொரு இயக்கமும் தான் சொல்வது சரி, ஏற்றுக்


**இப்போது மிக வேகமான விற்பனையில்....**

# பிரார்த்தனை செய்வது எப்படி?




ஆசிரியர் : அல்லாமா

**அ.மு.அப்துல் ஜப்பார் பாகவீ** ஹள்ரத் (ரஹ்)

**நூல் விலை : ரூ.25/- மட்டுமே!**

தபால் செலவு தனி!

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**குர்ஆனின் குரல்**

தபால் பெட்டி எண் : 45, 4/25, எழில் நகர்,

மேலமடை, **மதுரை** – 625 020.

வாட்ஸப் மற்றும் அலைபேசி தொடர்புக்கு :

**9442056547, 9486729192**

கொள்ளவில்லையென்றால் போராட்டம்.

மலிவு விலைபோல் போராட்டம், ஆர்ப்பாட்டம். உலக அளவில் பார்த்தால் ஆர்ப்பாட்டமோ போராட்டமோ இல்லாத நாளில்லை.

மது ஒழிப்பு கூடாது என்பதற்கு போராட்டம், விபச்சார விடுதிகள் நடைபெற அனுமதிக்க வேண்டும் என்று போராட்டம்.

இவற்றில் எதுவும் தீனுக்காக போராட்டம் நடப்பது இல்லை.

தொழுகைக்கு வராவிட்டால், நோன்பு வைக்காவிட்டால், தர்மம் செய்யாவிட்டால் போராட்டம் என்று எங்காவது நடந்ததுண்டா?

ஏனென்றால் முழுக்க முழுக்க துன்யாவில் மூழ்கி விட்டதால் மண்ணறை, மறுமை, மரணம் பற்றி அச்சம், பயம் இல்லாமலே போய்விட்டது.

இஸ்லாமிய அடையாளங்களான தொப்பி, புர்கா போன்ற அடையாளங்கள் தூக்கி எறியப்பட்டு, அவற்றை அநாகரீகத்தின் அடையாளங்களாகக் கருதி, முஸ்லிம் யார் என்று கண்டு பிடிக்க முடியாத பிற்போக்குவாதிகள். சுன்னத், ஜமாஅத் அமைப்பினர் அடையாளங்களோடு பவனி வருவதும், அடுத்தவரைப் பார்த்து அவல நிலைக்கு வந்து விட்டார்கள்.

திருமண நிகழ்ச்சி போன்றவற்றில் கூட அடையாளமின்றி அமர்ந்திருக்கும் மணமகன் ஏதோ இது ஒரு பீடை என்று நினைப்பது போல் நடந்து கொள்வதைப் பார்க்கும்போது பெயராவது முஸ்லிம் பெயர் இருக்கிறதே என சந்தோஷப் பட வேண்டியதாயிருக்கிறது.

சொல்லமுடியவில்லை, திருத்த முடியவில்லை, மனம் சங்கடப்பட்டு, சில சமயம் கோபப்பட்டும், வெளிநடப்புச் செய்தால் அது நமக்கு எதிராகப் பாய்கிறது.

ஏனெனில் மார்க்க முரணுக்கே அதிக ஆதரவு, எல்லாம் சகஜம் என்று சொல்லி சமாளிக்கிறார்களே தவிர ஆலிமின் அறிவுரைக்கு தலை சாய்ப்பவர்கள் குறைந்து வரும் விஷயத்தில் தீன் பற்று மிக்கவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

---

## முஸ்லிம் சகோதரனுக்கு கெடுதல் செய்பவர் சாபத்திற்குரியவர் ஆவார்!

“ஒரு முஸ்லிம் சகோதரனுக்கு கெடுதல் செய்பவனும், அவருக்கு எதிராக சதி செய்பவனும் சாபத்திற்குரியவர்கள்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள்

(ஆதாரம் : திர்மிதீ)

# மனிதனின் முத்தான மூன்று சொத்துகள் எவை?

மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

வாழ்வில் முன்னேறத் துடிக்கும் ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்கிறார்கள். ஓய்வின்றி கண்விழித்து பாடு படுகிறார்கள். இரவும் பகலும் உடலை வறுத்திக் கொண்டு, உணவைச் சுருக்கிக் கொண்டு, ஓய்வை நிறுத்திக் கொண்டு உடல்நலம் பேணாமல் பொருளா தாரத்தை மட்டுமே இலக்காக வைத்து தானியங்கி இயந்தி ரத்தைப் போன்று வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பணம், பணம், பணம் என்ற ஆசையில் அடுத்தவரைவிட அதிகம் சொத்து சேர்த்து கெத்தாக வலம் வருவதற்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

கருவறையிலிருந்து கல்லறை வரைக்கும் சில்லரை தேவை என்ற ஒற்றைக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே இயங்கிக் கொண்டிருக் கிறார்கள்.

மனித வாழ்க்கைக்கு பொருளாதாரம் அவசியம்; சொத்து சேர்த்து வைப்பதும் அவசியத்திலும் அவசியம். பொரு ளாதாரம் மட்டுமே வாழ்க்கை அல்ல! சொத்து மட்டுமே வாழ்க்கை அல்ல! இதுவும் தேவை; இதுமட்டுமே தேவை என்பதல்ல!

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அஷ்ஷிக்கீர் (ரளி) அவர்கள் கூறியதாவது:-

**நான் நபி (ஸல்) அவர்கள் ‘மண்ணறைகளைச் சந்திக்கும் வரை அதிகமாக (செல்வத்தை)த் தேடுவது உங்கள் கவனத்தைத் திசை திருப்பிவிட்டது’ (அல்குர் ஆன் 102 : 1, 2) என்ற வசனங் களை ஓதிக் கொண்டிருந்த போது, அவர்களிடம் நான் சென்றேன். அப்போது அவர்கள், ‘ஆதமின் மகன் (மனிதன்) எனது செல்வம், எனது செல்வம்’ என்று கூறுகின்றான். ஆதமின் மகனே! நீ உண்டு கழித்ததை யும், உடுத்திக் கிழித்ததையும், தர்மம் செய்து மிச்சப்படுத்தி யதையும் தவிர உனது செல் வத்தில் உனக்குரியது எது? என்று கேட்டார்கள்.**

நூல் : முஸ்லிம் 5665

"அடியான், 'என் செல்வம், என் செல்வம்' என்று கூறுகின்றான். அவனுடைய செல்வங்களில் மூன்று மட்டுமே அவனுக்குச் சொந்தமானதாகும். அவன் உண்டு கழித்ததும், உடுத்திக் கிழித்ததும், கொடுத்துச் சேமித்துக் கொண்டதும் தான் அவனுக்குரியவை. மற்றவை அனைத்தும் கைவிட்டுப் போகக் கூடியவையும், மக்களுக்காக அவன் விட்டுச் செல்லக்கூடியவையும் ஆகும்" என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (முஸ்லிம் 5666)

நமது சொத்து என்பது நாம் சேர்த்து வைத்தது அல்ல! அது நமது வாரிசுகளுக்கு உரியதாகும். நாம் இறந்ததும் அவற்றை அவர்கள் பங்கு வைத்து, பாகம் பிரித்துக் கொள்வார்கள்.

உண்மையான நமது சொத்து என்பது இதுவரைக்கும் நாம் உண்டு அனுபவித்ததும், உடுத்தி அனுபவித்ததும் தான். மூன்றாவதாக நாம் பிறருக்காகச் செய்த தர்மம் மறுவுலகில் நமக்கு நன்மைகளாக மாற்றப்பட்டு, நமது கணக்கில் சேமித்து வைக்கப்படும்.

மற்றவை நமது கையை விட்டுச் சென்று விடும். நாம் உலகில் வாழும்போது பிறருக்கு உதவிட வேண்டும். நம்மால் இயன்ற அளவுக்கு தான தர்மங்களை, பொருளாதார ரீதியிலான உதவிகளைப் புரிந்திட வேண்டும்.

நாம் இறந்த பிறகு நம்மால் நமது பொருளாதாரத்தை ஆள முடியாது. இறந்த பிறகு நம்மால் நமது சொத்தை கையகப்படுத்தித் தேவையுடையோருக்கு உதவிட முடியாது. நமது உண்மையான சொத்து என்பது நாம் பிறருக்குச் செய்யும் பொருளாதார உதவியும், தானதர்மமும் மட்டும்தான்.

இந்த வாய்ப்பு இந்த உலக வாழ்க்கையில் மட்டுமே வாய்க்கும். மறுவுலகில் வாய்ப்பு கிடைக்காது. பிறருக்கு உதவி செய்யக் கூடிய பாக்கியத்தை அல்லாஹ் நமக்குத் தந்தருள்வானாக!

## அல்லாஹ் யாரை நேசிக்கிறான் விரும்புகிறான்?

"தன்னையே சார்ந்திருப்போரை அல்லாஹ் நேசிக்கிறான்." – அல்குர்ஆன் (3:159)

"நீதி செலுத்துவோரை அல்லாஹ் விரும்புகிறான்" – அல்குர்ஆன்(5:42)

"அல்லாஹ் (தன்னை)அஞ்சுவோரை விரும்புகிறான்" – அல்குர்ஆன் (3:76)

"சகித்து கொள்வோரை அல்லாஹ் விரும்புகிறான்" – அல்குர்ஆன்(3:146)

"திருத்திக்கொள்வோரை அல்லாஹ் விரும்புகிறான்." – அல்குர்ஆன்(2:222)

# அந்த ஆறாம் நாள்!

"ஆலிம் கவிஞர்" மவ்லவீ ஹாஃபிழ் **கா.மு.சித்தீக்** உலவி ஃபைஜி

பித்தர்களின் வெறி
டிசம்பரில்தான்
பிறந்திருக்கிறது!

டிசம்பர் ஆறாம் நாள்
முஸ்லிம்களின்
இதயங்களில்
துக்க நாளாக
பதிவாகி உள்ளது!

ஓட்டுக்காக கூட்டுச் சதி
செய்த கும்பல்களால்
நாட்டின் நல்லிணக்கம்
நடு வீதியில்
நாதியற்றுக் கிடக்கிறது.

பாபரி மஸ்ஜிதை இடித்திட்ட
எத்தர்கள் பக்தர்களாக
பதவி உயர்வு பெற்று
பவனி வருகிறார்கள்.

பாதுகாத்து வந்த
பாரதத்தின்
பண்பாடுகள் மட்டும்
பரிதாபமாகக் கிடக்கிறது!

குண்டு வைத்து
தகர்த்தெறிந்த
கொடியவர்களின்
அடியவர்கள் மீது தடியடி
நடத்தாமல் கை கட்டி
நின்று வேடிக்கை பார்த்த
இராணுவம்!

தொழுகை நடத்த சென்ற
தோழர்கள் மீது தடியடி
நடத்தி ஆட்சியாளரின்
சூழ்ச்சி வலையில்
சுருண்டு படுத்துக்
கொண்டது.

பாபரி மஸ்ஜிதைப் போல்
இன்னும் பல மஸ்ஜிதுகளை
இடிப்போம் என சாதுகள்
என்ற ஷைத்தான்
ஊளையிட்டிருப்பதன் மூலம்
மிஞ்சியிருந்த ஜனநாயக
நெஞ்சத்தில் நஞ்சு
வைக்கப்பட்டுள்ளது.

சிறையில் அடைக்கப்பட
வேண்டிய கிரிமினல்
குற்றவாளிகளை
ஒய்வு விடுதியில்
உறங்க வைத்ததன் மூலம்
நீதியை வீதியில்
வைத்து விலைபேச
முற்பட்டிருக்கிறார்கள்.

நேசம் சூழ்ந்திருந்த இந்த
தேசத்தில் இப்போது
வேஷதாரிகளின் விஷ
வித்துகள் விளைய
ஆரம்பித்திருக்கிறது.
இல்லை; விளையாட
ஆரம்பித்திருக்கிறது.

இந்த தேசத்தின் சுதந்திரக்
கொடி உயர பாடுபட்ட
முஸ்லிம்களின் இதயத்தில்
ஈட்டி பாய்ச்சப்பட்டுள்ளது.

அமைதியை நேசிக்கும்
எங்களுக்கு ஆர்ப்பரிக்கும்
அவசியமும் அவசரமும்
வந்திருக்கிறது!

## நபி (ஸல்) அவர்களிடம் ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறிய செய்தி!

“முஹம்மதே! நீங்கள் எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் உலகில் வாழ்ந்து கொள்ளுங்கள். ஆனால், ஒரு நாள் மரணம் வந்தே தீரும். நீங்கள் (நல்லதோ, கெட்டதோ) எந்த அமலைச் செய்தாலும் அதற்கான பிரதிக் கூலி கிடைத்தே தீரும். உலகில் நீங்கள் யாரை வேண்டுமானாலும் நேசித்துக் கொள்ளுங்கள். கடைசியில் ஒரு நாள் அவர்களை விட்டுப்பிரியவேண்டியதுவரும். மனிதனின்மேன்மை தஹஜ்ஜுத் தொழுகையில் இருக்கிறது. மனிதனின் கண்ணியம் ஜனங்களை விட்டும் தேவையற்று இருப்பதில் இருக்கிறது. என்பதை நல்ல விதமாக மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்”

என்று நபி (ஸல்) அவர்களிடம் ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறிச் சென்றார்கள். (நூல் : மிஷ்காத் பக்கம் : 432)

**தருபவர் :** அல்ஹாஜ் **கே.கே.செய்பது சுலைமான்,**
தென்காசி.

# இஸ்லாம் தடை செய்தது ஏன்?

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
**பீ.ஹாமிது அப்துல் ஹை,** எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

இயற்கை நெறியான அல்-இஸ்லாம், மனித குலத்தின் நல் வாழ்விற்கும், நலவாழ்விற்கும், நல்வழிகாட்டும் தூய நெறியாகும். மனிதன் உலகில் வாழும் குறுகிய காலத்தில் முடிவற்ற மறுமை வாழ்க்கைக்கு தன்னை ஆயத்தப்படுத்தும் குறிக்கோளை கொண்டிருப்பதால், ஈருலகிலும் வெற்றியாளனாகத் திகழ வேண்டும் என்பதையே கருணையாளன் அல்லாஹ் விரும்புகிறான்.

மனிதன் அறியாமை மிக்கவன் என்பதால் இறைத்தூதர்கள் மற்றும் இறைவேதங்கள் மூலமாக வழிகாட்டப்பட்டுள்ளான். சிந்திக்கின்ற ஆற்றல் வழங்கப்பட்ட போதிலும் அதனை நன்கு பயன்படுத்தாமல் வழிகேட்டையே நாடுகிறான். நேர்வழியை மறந்து அழிவிலே உழலுகிறான்.

இறுதிவேதமும், ஏந்தல் நபிகளாரின் வாழ்வும், வாக்கும் மனிதனின் அனைத்து நிலைகளுக்கும் வழிகாட்டி ஒளி சிந்துகின்றன. "செய் அல்லது செய்யாதே" என வரையறுத்துக் கூறுகின்றன. மனிதன் உணர்ந்தானா? செயல்பட்டானா? இல்லை. பேரழிவில் உழலுகிறான். சான்றுகள் ஏராளம்! அல்லாஹ்வின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காதபோது, அவன் பேரழிவைச் சாட்டுகிறான். ஒன்றன்பின் ஒன்றாக அது தொடர்கிறது. மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன.

**"நிச்சயமாக அல்லாஹ் மனிதர்களுக்கு அறவே தீங்கிழைப்பது இல்லை. எனினும் மனிதர்கள் [தீய செயல்களைச் செய்து] தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்."**

- அல்குர்ஆன் (10 : 44)

1. கி.பி.19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பன்றிக் காய்ச்சல் (Swine Flu) உலகம் முழுவதும் பரவியிருந்தது. இன்று வரை இந்நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 10 கோடி.
2. அடுத்த கடுமையான உயிர்க் கொல்லி வைரஸ் நோய் எய்ட்ஸ் (HIV/AIDS). கடந்த 35 ஆண்டுகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை 4 கோடி. (HIV - Human Immuno Deficiency Virus)
3. ஹெச்.பி.வி. (Human Papilloma Virus). வைரஸ் கிருமிகள்,

பெண்களின் கர்ப்பப்பையைத் தாக்கி, அதன் முன்பகுதி (Cervix)யில் புற்றுநோயைத் தோற்றுவிக்கின்றன. விருத்த சேதனம் (Circumcision) செய்து கொள்ளாத ஆண்களுடன் உடலுறவு கொள்வதால், இந்த வைரஸ்கிருமிகள் பரவுகின்றன.

4. ரேபிஸ் (Rabies) வைரஸ் நோய். வைரஸ் கிருமியின் பெயர் லிஸ்ஸா வைரஸ் (Lyssa Virus).

பெரும்பாலும் நாய் கடிக்கும் போது அதன் உமிழ்நீரிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் கொடிய நோய். ஒவ்வோர் ஆண்டிலும் 25,000 முதல் 50,000 பேர் இந்தியாவில் இறக்கின்றனர்.

5. கொரோனா (Covid-19) வைரஸ் நோய். கடந்த 3 ஆண்டுகளாக உலகம் முழுவதும் பரவி மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளது. 6 கோடி பேர் இது வரை கொல்லப்பட்டுள்ளனர்.

6. குரங்கம்மை (Monkey Pox) வைரஸ் நோய். இந்நோய் அண்மையில் பரவி வருகிறது. உலக நலக்கழகம் (World Health Organisation - WHO) இந்நோயை "உலக அவசரம்" (World Emergency) என்று அறிவித்துள்ளது.

இந்நோய்கள் ஏற்படுத்துகின்ற பேரழிவுகளுக்கு முக்கியக் காரணம் : இஸ்லாம் தடை செய்துள்ள செயல்கள் மூலமே தான் ஏற்படுகின்றன என்பதை அறிந்து கொள்வோம்.

## கொடிய நோய்கள் :

1. பன்றிக்காய்ச்சல் : பன்றி மாமிசம் உண்பது.
2. எய்ட்ஸ் மற்றும் ஹெச்.பி.வி. நோய்கள் : வரையறை இல்லாத பால் உறவுகள், ஓரினச் சேர்க்கை, விபச்சாரம், போதைப் பொருட்கள்.
3. கொரோனா வைரஸ் நோய் : உண்பதற்குத் தடைசெய்யப் பட்ட இறைச்சிகள் மூலம்.

கொரோனா நோய் மூலம் அதிகம் இறந்தவர்கள் இரவு கேளிக்கை (Night Clubs) விடுதிகள் அதிகமுள்ள நாட்டினர்களாவர்.

## மற்றொரு புதிய நோய் குரங்கம்மை நோய் :

இந்நோய் இப்பொழுது பல நாடுகளில் பரவி வருகிறது. 18,000 பேர் இந்நோயினால் துன்புறுகின்றனர். இந்நோய் தாக்குவதற்குரிய காரணம் ஓரினச் சேர்க்கையே என்பதை WHO - உலக நலக்கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. ஆப்பிரிக்க நாடுகள் தவிர, மற்ற 27 நாடுகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

New England Journal of Medicine (புதிய இங்கிலாந்து மருத்துவ இதழ்) குறிப்பிடுகிறது. குரங்கம்மை ஓரினச் சேர்க்கை மூலம் பரவுகிறது என்றும், குரங்கம்மை

பாதிப்பு ஏற்பட்டதை உறுதி செய்யப்பட்ட 528 பேர்களில் 95% ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுப வர்கள் என்றும் தெரிவிக்கிறது.

குரங்கம்மை வைரஸ் நோய் உயிருக்கு மிகவும் ஆபத்துவிளை விக்கும் நோயல்ல என்ற போதி லும், பாதிக்கப்பட்டவர்கள் பலவித சிரமங்களுக்கு உட்படுத்தப்பட்டு, படுக்கையிலே பல வாரங்கள் உழல வேண்டிய நிலை ஏற்படும். பொருளாதார இழப்பை ஏற்படுத்தும்.

## கொள்ளை நோய்கள் போன்ற பேரழிவுகளைத் தடுப்பது எப்படி?

பொருளாதார வளத்தைப் பெருக்குவதில் கவனம் செலுத் தும் ஆட்சியாளர்கள், உடல் நலம் பேணுவதில் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. நோயற்ற வாழ்வுதானே, குறைவற்ற செல்வ மாகும்!

விருப்ப சுதந்திரம் (Freedom of Choice) என்ற பெயரில் உலக மக்களிடையே ஒழுக்கக் கேடு கள் மிகைத்து விட்டன. அருவருக்கத்தக்க செயல்களில் ஈடுபடுகின்றனர்.

மது, போதை மருந்துகள் ஆகிய வற்றில் திளைப்பது, காமக் களி யாட்டங்களில் மூழ்கி விடுவது போன்றவை மிகைத்து விட்டன.

ஓரினச் சேர்க்கை, திருமண மின்றி சேர்ந்து வாழ்தல், இரு கணவன்மார்கள் தங்கள் மனைவி மார்களை மாற்றிக் கொண்டு பாலுறவில் ஈடுபடுதல் முதலியன வெட்கமின்றி மேற்கொள்ளப்படு கின்றன. இத்தகைய இழிச்செயல் களுக்கு தடையேதுமில்லை. ஓரினச் சேர்க்கையை அரசுகள் சட்டமியற்றி அங்கீகரிக்கின்ற அவலத்தைக் காண்கிறோம். நீதிமன்றமும் ஒப்புதல் தருகிறது.

மனித மனங்களின் பலவீனத் தைப் பயன்படுத்தி, இழிச்செயல் கள் வாணிபமாக்கப்பட்டு வளம் கொழிக்கின்றது.

முஸ்லிம் நாடுகள், இஸ்லாம் கூறும் நேரான வழிகளை உல கிற்குக் காட்டி, முன்னுதாரண மாகத் திகழ வேண்டும். ஐக்கிய நாடுகள் சபைகளில் பேசும்போது உலக நாடுகளின் தவறான போக்கை எடுத்துக்காட்டி நேரிய பாதைக்கு வருமாறு அழைக்க வேண்டும்.

மது அருந்துவதும், போதை மருந்து உண்பதும், புகைப்பதும், பெண்களை நிர்வாணமாக்கு வதும்தான் நாகரீகத்தின் வெளிப்பாடா?

## இஸ்லாம் வழிகாட்டுகிறது

**“(நபியே!) மதுவைப் பற்றியும், சூதாட்டத்தைப் பற்றியும் அவர் கள் உம்மிடம் வினவுகின்றனர். அவ்விரண்டிலும் பெரும் பாதிப்பும், மக்களுக்குச் சில பயன்களும் உள்ளன என்று கூறுவீராக”**

- அல்குர்ஆன் (2 : 219)

**“இறைநம்பிக்கை கொண் டோரே! மது, சூது, நட்டுவைக்கப்**

பட்ட[சிலை போன்ற]வை [குறி பார்க்கும்] அம்புகள் ஆகியன ஷைத்தானின் அருவருக்கத் தக்க செயல்களாகும். ஆகவே, இவற்றிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். [அதன் மூலம்] நீங்கள் வெற்றி பெறலாம்"

- அல்குர்ஆன் (5 : 90)

"மது மற்றும் சூதாட்டத்தின் மூலம் உங்களுக்கிடையே பகை யையும், குரோதத்தையும் உரு வாக்கவும், அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுக்கவுமே ஷைத்தான் விரும்புகிறான். ஆகவே, [அதிலிருந்து] நீங்கள் விலகிக் கொள்வீர்களா?"

- அல்குர்ஆன் (5 : 91)

"நாங்கள் விலகிவிட்டோம்; நாங்கள் விலகி விட்டோம்" என்று உமர் (ரளி) அவர்கள் கூறினார்கள்.

(திர்மிதீ, அபூதாவூத், நஸாயீ)

அன்று முதல் முஸ்லிம்கள் மதுவின் அருகில் செல்லவே யில்லை.

மதுப்பானைகள் உடைக்கப் பட்டு, மதீனா தெருக்களில் மது ஆறாக ஓடியது.

நபி (ஸல்) அவர்கள் கூறினர் :

"மது சபிக்கப்பட்டது. அதை அருந்துபவர் அதைப் பரிமாறு பவர், அதை விற்பவர், அதை வாங்குபவர், அதைச் சுமப்பவர், யாருக்காகச் சுமந்து செல்லப் படுகிறதோ அவர், அதை பிழிபவர், அதைப் பிழியச் சொன்னவர், அதன் கிரயத்தை உண்பவர் ஆகிய அனைவரும் சபிக்கப்பட்டவர்கள் ஆவர்." (நூல் : முஸ்னத் அஹமத்)

நபி (ஸல்) அவர்கள் கூறினர் :

"நீங்கள் மதுவை விட்டு விலகி விடுங்கள். ஏனெனில் மதுவும், இறை நம்பிக்கையும் [ஏக காலத்தில்] ஒருவரிடம் ஒருபோதும் ஒன்று சேராது. அவற்றில் ஒன்று மற்றொன்றை வெளியேற்றியே தீரும்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துர் ரஹ்மான் பின் அல் ஹாரிஸ் (ரளி) அவர்கள் (நூல் : நஸாயீ )

போதை தரும் பொருட் களையும், அடிமைப்படுத்தும் (addiction) பொருட்களையும் இஸ்லாம் தடை செய்துள்ளது.

## விபச்சாரம்

"நீங்கள் விபச்சாரத்தின் பக்கம் நெருங்க வேண்டாம். நிச்சயமாக அது மானக்கேடான தாகவும் தவறான வழியாகவும் இருக்கிறது."

- அல்குர்ஆன் (17 : 32)

சட்டப்படியான உறவு, அதாவது திருமணம் முடித்த உறவை மட்டுமே, இஸ்லாம் அனுமதிக்கிறது. இது கணவன் - மனைவி இடையிலான பாலுறவாகும்.

இஃதன்றி பலவந்தமான பாலுறவு, கற்பழிப்பு, பணம் பெற்றுக் கொண்டு அல்லது பணம் பெறாமல் மேற்கொள்ளும்

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

பாலுறவு ஆகியன தடை செய்யப் பட்ட விபச்சாரமேயாகும். இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

நமது பண்பாடு, நாகரீகம், குடும்ப அமைதி, உடல் நலம் ஆகியனவற்றை சீரழிக்கும் ஒரு தீய செயலாக விபச்சாரம் உள்ளது.

கருக்கலைப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகியன விபச்சாரத் திற்கு வழியமைக்கின்றன. புகைப் படங்கள், சினிமா, டி.வி. காட்சி கள், அரை நிர்வாண ஆடைக் குறைப்பு ஆகியனவும் விபச்சாரத் திற்குத் துணை போகின்றன.

ஆகவேதான் விபச்சாரத்தின் பக்கம் நெருங்க வேண்டாம் என அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினர் :

**"இணை கற்பித்தலுக்குப்பின், ஒருவர் தமக்கு அனுமதிக்கப் படாத கருப்பையில் தமது விந்தைச் செலுத்துவதை விடப் பெரும் பாவம் அல்லாஹ்விடம் வேறெதுவுமில்லை."**

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹைஸம் பின் மாலிக் (ரஹ்) அவர்கள்.
(நூல் : இப்னு அபித்துன்யா)

ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள் கூறினர் :

நபி (ஸல்) அவர்களிடம் இளை ஞர் ஒருவர் வந்து, "அல்லாஹ் வின் தூதரே! விபச்சாரம் செய்ய எனக்கு அனுமதி தாருங்கள்" என்று கேட்டார். மக்கள் அவரை நோக்கிவந்து "நிறுத்து, நிறுத்து" என்று கண்டித்தனர்.

நபியவர்கள் "அவரை என்ன ருகேவரவிடுங்கள்" என்றுகூறினர். அவர் நபியவர்களை நெருங்கி வந் தார். நபியவர்கள் அவரை அமரச் சொல்ல அவர் அமர்ந்தார்.

நபி (ஸல்) அவர்கள் அவரிடம், "உன் தாய் அதைச் செய்வதை விரும்புவாயா?" என்றார்கள். அவர், "அல்லாஹ்வின் மீதாணை யாக! இல்லை. என்னை அல்லாஹ் தங்களுக்கு அர்ப்பணமாக்கட் டும். மனிதர்கள் (யாரும்) தம் தாய் விபச்சாரம் செய்வதை விரும்ப மாட்டார்கள்" என்று கூறினர்.

நபி (ஸல்) அவர்கள், "உன் மகள், உன் சகோதரி, உன் தந்தை யின் சகோதரி, உன் தாயின் சகோதரி" என்று ஒவ்வொருவரை யும் தனித்தனியாகக் குறிப் பிட்டு கூறியவாறு வினவினர். அந்த இளைஞரும், மேற்கூறிய வாறு கூறி "இல்லை" என்றார்.

நபி (ஸல்) அவர்கள் தமது கையை அவர் மீது வைத்து, "இறைவா! இவரது பாவத்தை மன்னிப்பாயாக; உள்ளத்தை தூய்மைபடுத்துவாயாக; கற்பைப் பாதுகாப்பாயாக" என்று பிரார்த்தனை செய்தனர்.

ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள் கூறினர் :

அதன்பின்னர் அந்த இளைஞர் எந்தத் தீமையின் பக்கமும் திரும்பவேயில்லை.

(முஸ்னது அஹ்மத்) திருகுர்ஆன் விரிவுரை தஃப்சீர் இப்னு கஸீர் - பாகம் 5; அத்தியாயம் 17 : 32 பக்கம் 238, 239)

*(தொடரும்)*

# உண்மை நிகழ்வு!

## நெல்லை மரைக்காயர்

எனது கம்பெனியில் கேரளாவைச் சேர்ந்த மலையாளி... சேல்ஸ்மேனாக வேலை செய்து வந்தார். ஆடம்பரப் பிரியன். நாலு பேர் தன்னை மெச்ச வேண்டும் என்பதற்காக எதையும் செய்யக் கூடியவன்.

ஒருமுறை எனது (அரபி) ஓனரிடம் புதுப்பிப்பதற்காக தனது பாஸ்போர்ட்டைக் கேட்டான். அவனிடம் அவனது பாஸ் போர்ட்டைக் கொடுத்தார் எனது ஓனர். இதையே வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்ட அந்த மலையாளி 60,000 ரியால் (கிட்டத்தட்ட 8 லட்ச ரூபாய்) கம்பெனி பணத்தில் கையாடல் செய்துவிட்டு மறுநாளே கேரளா வும் சென்று விட்டான்.

வியாழன் இரவு டிக்கெட் புக் பண்ணியுள்ளான். வெள்ளிக் கிழமை விடுமுறை. வெள்ளிக் கிழமை கேரளா சென்றுவிட்டான். எனவே யாருக்கும் சந்தேகம் வரவில்லை. அவன் கேரளா சென்று அவனது வீட்டில் சேரும் போதுதான் எங்களுக்கே விபரம் தெரிகிறது.

எனது ஓனரால் இதை நம்பவே முடியவில்லை. இவன் மீது எவ்வளவு நம்பிக்கை வைத் திருந்தேன்! இப்படி நம்பிக்கை மோசடி செய்து விட்டானே! அவசரம் என்று என்னிடம் கேட்டிருந்தால் நானே கடனாகக் கொடுத்திருப்பேனே என்று மிகவும் ஆதங்கப்பட்டார்.

பிறகு என்னிடம் 'மும்பை யில் எனது ஏஜண்டுகள் மூலமாக அவனது காலையோ கையையோ இங்கிருந்து கொண்டே என்னால் எடுக்க முடியும். இறைவன் குர்ஆனில் தீமையின் கூலி அது போன்ற தீமையே! சமாதானமாகச் செல்வோருக்கு அவரது கூலி இறைவனிடத்தில் உள்ளது' (குர்ஆன் 42:40) என்று கூறுகி றான். எனவே அவனது மனைவிக் காகவும், அவனது குழந்தை களுக்காகவும் அவனை அது போல் செய்யாமல் விடுகிறேன். இறை நீதிமன்றமான மறுமையில் எனக்கு அதற்கான கூலி கிடைத்து விடும், என்று கூறியவு டன் நானும் சற்று இந்தியன் என்ற முறையில் வெட்கப்பட்டேன்.

குர்ஆனும், நபி (ஸல்) அவர் களின் வாழ்வும் இந்த அரபி களை எந்த அளவு மாற்றியிருக்

கிறது என்பதை நினைத்து ஆச்சரியப்பட்டேன். அவரிடம் 'நீங்கள் செய்வதுதான் சரி' என்று கூறி அவரைச் சமாதானப் படுத்தினோம்.

பணத்தை மோசடி செய்த அந்த மலையாளி சென்று கிட்டத்தட்ட பதினைந்து வருடங்கள் ஆகிவிட்டன. தவறான வழியில் வந்த பணத்தை தவறாக ஆடம்பரமாகச் செலவு செய்து அனைத்தையும் இழந்துவிட்டான். சில மாதங்களுக்கு முன்பு அவனது உறவினர் மூலமாக அவன் மிகவும் கஷ்டப்படுவதாகவும், அவனுக்கு மூளையில் கட்டி இருப்பதாகவும், ஆப்ரேஷன் செய்தாலும் பிழைப்பது கஷ்டம் என்றும், தற்போது அவனிடம் பண வசதியும் இல்லை என்றும் கேள்விப்பட்டோம். சில கேரள நண்பர்கள் மூலமாகச் செய்தியை உறுதி செய்து கொண்டோம். கம்பெனியில் உள்ளவர்களும், ஒரு சில மலையாளிகளும் சேர்ந்து பணம் வசூல் செய்து அவனது விலாசத்துக்கு அனுப்பி வைத்தோம்.

சில நாட்களுக்கு முன்பு அவனின் தற்போதைய நிலையை எனது ஓனரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். பொறுமையாகக் கேட்டவர், “தவறான வழியில் வந்த பணத்தினால் என்ன சுகத்தை அவன் அடைந்து விட்டான்? இந்த உலகம், இந்த உலகில் உள்ள பொருட்கள் அனைத்தும் மண்ணினால் ஆனவை. மக்கி மண்ணோடு மண்ணாகக் கூடியவை. இதன் அழகில் அவன் மயங்கியதால் கௌரவமான வேலையும் போய் மறுமையிலும் எனக்குக் கடன்காரனாகவும் ஆகி விட்டான்.

பணம் இழந்த நான் பல மடங்கு முன்பைவிடச் சிறப்பாகவே நன்றாகவே இருக்கிறேன் என்று சொன்னவர், “சரி சரி! அவனது அக்கவுண்ட் நம்பரை வாங்கு; அவனது மருத்துவச் செலவுக்கு நான் பணம் அனுப்புகிறேன்” என்று சொன்னவுடன் இந்த அரபியை நினைத்து நெகிழ்ந்து விட்டேன். எப்படிப்பட்ட கல் நெஞ்சக்காரர்களாக இருந்த இவர்களின் மனதை இஸ்லாம் எந்த அளவு பண்படுத்தியிருக்கிறது என்று நினைத்துப் பார்க்கிறேன்.


## குர்ஆனின் குரல்

எமது புதிய தபால் பெட்டி எண் : 45,
மேலமடை, **மதுரை-625020.**

மறுமை என்ற ஒரு வாழ்வை அந்த அரபி நம்பாமல் இருந்திருந்தால் அந்த மலையாளி உயிரோடு இருந்திருக்க முடியாது. எனது ஓனரின் பணம் அவனது வைத்தியச் செலவுக்கு பயன்படுகிறது என்ற செய்தியே கெட்ட நடத்தையுடைய அவனைச் சிறந்த மனிதனாக மாற்றும். செய்த தவறை எண்ணி வருந்தி எனது ஓனிடம் மன்னிப்பும் கேட்டால் ஒருக்கால் இறைவன் அவனை மன்னிக்கலாம் என்று நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம்.

ஆனால் சென்ற ஆண்டு சிகிச்சை பலனளிக்காமல் அந்த மலையாளி இறந்து விட்டார். சேர்த்த பணமெல்லாம் வைத்தியத்திற்கே சென்று விட்டதால் குழந்தைகளை வளர்க்க அவரது மனைவியிடம் பொருளாதார வசதி இல்லை. தற்போது அந்தக் குழந்தைகள் அனாதை ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக அவரது நண்பர் சொன்னார்.

இவருடைய வாழ்வு நமக்கெல்லாம் ஒரு பாடமாக அமையட்டும். துரோகம் வேண்டாம் தோழர்களே! அது அவனையே அழித்துவிடும்!

**"உங்கள் பொருட் செல்வமும், மக்கட் செல்வமும் சோதனையே! இறைவனிடமே மகத்தான கூலி இருக்கிறது."**

- அல்குர்ஆன் (64 : 15)


தமிழ்/ English நாளிதழ்களில் மற்றும்- குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய...

Call- Whatsapp 86952 16016 CityAds

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?

எங்களிடம் கேளுங்கள்- உங்கள் இல்லம் வந்து சேரும்.

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள் தேவைகளுக்கு Call/Whatsapp: 98410 16016

CityAds BOOKS www.cityadsbooks.com

# நுகர்ந்தவை

நூல் : **தென்னகம் தந்த இஸ்லாமிய ஜோதி ஷாதலி ஹள்ரத்**

ஆசிரியர் : "வரலாற்றுப் பேரறிஞர்" **செ.திவான்** M.A.,M.Phil.,

பக்கங்கள்: **254;** விலை: ரூ.**250/-**

வெளியீடு: **ரெகான் - ரய்யா பதிப்பகம்,**
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002.
அலைபேசி : 9080330200

இஸ்லாமியச் சமுதாயம் ஈமானிய எழுச்சியோடு திகழ் வதற்கு முழுமையான காரணம் உலமாபெருமக்கள் செய்த சேவைகள்தான்!

ஆனால், உலமா பெருமக்கள் சாதனை படைத்தும் சரித்திரமே இல்லாமல் போய் விட்டார்கள். இந்நிலையில், தென்பாண்டிச் சீமையில் பிறந்து, சமுதாயச் சேவையில் சாதனைப் படைத்த மவ்லானா அபுல்ஹஸன் ஷாதலி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை "வரலாற்றுப்பேரறிஞர்" செ.திவான் அவர்கள் நமக்குத் தந்துள்ளார்.

இந்நூலில் ஷாதலி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மட்டுமின்றி, அவர்களின் அருமை தந்தையாரும் சமுதாயத்திலிருந்த மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்கு தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட கண்ணியமிகு மி.கி.முஹம்மது அப்துல் காதிர் அவர்களின் வாழ்க்கை வரலாறும் இந்நூலில் உள்ளது. சிறை சென்ற மார்க்க மாமேதை; சுதந்திரப் போராட்டத் தியாகி; முஸ்லிம் லீகின் மூத்த தலைவர்; தென்னிந்திய இஷா அத்துல் இஸ்லாம் சபையின் உயிரோட்டம்; கிறிஸ்தவர்களுக்கு சிம்ம சொப்பனம்; ஜமாஅத்துல் உலமா சபையின் மூத்த தலைவர்; "ஜமாஅத்துல் உலமா" மாத இதழின் நிறுவனர் என பன்முகச் சாதனை செய்தவர்கள் ஷாதலி ஹள்ரத் (ரஹ்) அவர்கள். முன்னோரின் சரித்திரம் பின்னோருக்குப் பாடம். ஷாதலி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாறு உலமா பெருமக்களுக்கு மட்டுமல்லாது, இச்சமுதாயத்திற்கே வழிகாட்டியாகும்.

இந்நூலை உருவாக்க பல்வேறு சிரமங்களை மேற்கொண்டு பல்வேறு இடங்களுக்குச் சென்று தகவல்களை சேகரித்து நமக்குத் தந்துள்ளார் "வாழும் வரலாறு" செ.திவான் அவர்கள். பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்.

இந்நூலை தரமான தாளில் அழகிய முறையில் அச்சிட்டு சமுதாயத்திற்கு வழங்கிய மதுரை "நியூஸ் மேன் பப்ளிகேஷன்ஸ்" நிறுவனத்திற்கு ஒரு சபாஷ்!

* * *

ஆய்வு : **பாவா**

# மரியாதை

மவ்லவீ மு.முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி

وَالسَّابِقُونَ الْأَوَّلُونَ مِنَ الْمُهَاجِرِينَ وَالْأَنْصَارِ وَالَّذِينَ اتَّبَعُوهُمْ بِإِحْسَانٍ رَضِيَ اللَّهُ عَنْهُمْ

**"[புலம்பெயர்ந்த] முஹாஜிர்கள், [அவர்களுக்கு உதவி புரிந்த] அன்சாரிகள் ஆகியோரில் எவர்கள் [இஸ்லாமில்] முதலாவதாக முந்திக் [கொண்டு நம்பிக்கை] கொண்டார்களோ அவர்களையும், நற்செயல்களில் [உண்மையாகவே] இவர்களைப் பின்பற்றியவர்களையும் பற்றி அல்லாஹ் திருப்தியடைகின்றான்"** - அல்குர்ஆன் (9 : 100)

பிற மனிதர்களை இழிவாகக் கருதாமல் அவர்களுக்கு கண்ணியம் அளிக்க வேண்டும் என்று இஸ்லாம் இயம்புகிறது. குறிப்பாக, தகுதி உடையவர்களுக்கு கௌரவம் அளிக்க வேண்டும். பெற்றோர்கள், வயதில் முதிர்ந்தவர்கள், கல்வியாளர்கள், சான்றோர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும். இப்பண்புதான் சிறந்த முஸ்லிம் என்பதற்கான அடையாளமாகும்.

இத்தகைய நற்பண்புகள் முஸ்லிம்களின் முந்தைய தலைமுறைக்கு நற்பலன் அளித்தன. மேற்கூறிய குணங்களை தங்களுக்குள் கொண்ட உயர்ந்த மனிதர்களை உருவாக்கின. முதியவரையும், சான்றோரையும் மதிப்பதில் அவர்கள் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

இப்லீஸ் அல்லாஹுவுக்கு இணைவைக்கக்கூடாது என்ற தெளிவான அறிவாற்றல் உடையவன். ஆனால் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிய வேண்டும் என்ற ஞானம் இல்லாததால் அவன் அல்லாஹுவின் சாபத்தைப் பெற்றான்.

அல்லாஹ் கண்ணியப்படுத்தச் சொல்பவர்களை கண்ணியப்படுத்தத் தவறினால் (அதாவது இறை கட்டளைக்கு அடிபணிய மறுத்தால்) இறை சாபம் ஏற்படக்கூடும் என்ற தகவல் இப்லீஸ் மூலம் கிடைத்ததாகும்.

## தகுதிக்கேற்ற பழக்கம்

**நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள். "மக்களிடம் அவர்களின் பண்புகளுக்கு தகுந்தவாறு பழகுங்கள்".**

நூல் : ஹாகிம்

ஹள்ரத் ஹஸன் (ரளி) அவர்கள் தனது தந்தை ஹள்ரத் அலீ

(ரளி) அவர்கள் மூலமாக அறிவிக்கிறார்கள். "அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சான்றோர்களுக்கு கண்ணியத்தில் முதலிடம் அளித்தார்கள். மார்க்கப் பற்றில் உள்ள அந்தஸ்திற்கு ஏற்ப கண்ணியமளித்தார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் சங்கைக்குரியவராக இருப்பவரை சங்கை செய்தார்கள். அவரையே அக்கூட்டத்தின் தலைவராக வும் ஆக்கினார்கள். அவர்களது சபை நேர்மையான நடத்தையுள்ள சிறந்த இறைநம்பிக்கையாளர்களால் செழிப்படைந்து இருந்தது. அவர்களுக்கு மத்தியில் இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்றத்தாழ்வுஇருந்தது".

நூல் : ஹயாத்துஸ் ஸஹாபா

ஒருமுறை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் பயணத்தில் இருந்தார்கள். காலை உணவை வைக்கும்படி பணியாளர்களுக்கு உத்தரவிட்டார்கள். அப்போது நல்ல ஆடைகள் உடுத்திய ஒரு செல்வந்தர் கடந்து சென்றார். அவரை உணவு உண்ண அழைக்கும்படி ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறினார்கள். அழைக்கப்பட்டதும் அவர் வாகனத்தில் இருந்து இறங்கினார். உணவு உண்டார். அதன் பின் சென்று விட்டார் யாசகர் ஒருவர் வந்தார்.

அவருக்கு ஒரு ரொட்டித் துண்டை கொடுக்கும்படி உத்தரவிட்டார்கள். இந்த வித்தியாசத்தைப் பற்றி கேட்கப்பட்ட போது ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள், "நான் செய்தது போல் செய்யாதவரை இந்தச் செல்வந்தர் நம்மைக் கொண்டு சந்தோஷம் அடைந்திருக்க மாட்டார். இந்த யாசகர் யாசகம் கேட்டார். அவர் திருப்திப்படும் ஒன்றைக் கொடுக்கும்படி கூறினேன். மக்களிடம் அவரவர்களின் தரத்துக்கேற்ப நடந்து கொள்ளுங்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்கு கட்டளையிட்டுள்ளார்கள்" எனக் கூறினார்கள்.

நூல் : அபூதாவூது, கஷ்ஃபுல் ஃகஃபா

## பாத்திரம் அறிந்து பிச்சை இடு! என்பது தமிழ் பழமொழி

தலைவர், தொண்டர், நல்லவர், கெட்டவர், சிறியவர், பெரியவர் அனைவரும் சட்டத்திற்கு முன் சமமானவர்கள் தான். அல்லாஹ் விதித்த வரம்புகளின் விஷயத்தில் எவரிடத்திலும் தயவு தாட்சண்யம் காட்டப்படமாட்டது. ஆனால், பொது நடைமுறைகளில் கல்வியையும், இறை யச்சத்தையும், மற்றுமுள்ள தனிப் பண்புகளையும் கவனத்தில் கொண்டு நடந்து கொள்ளுவது அவசியம். இது பற்றியே இந்த நபிமொழியில் சொல்லப்பட்டுள்ளது.

## பெற்றோர்கள்

**"அவனை அவனுடைய தாய் சிரமத்துடன் சுமந்தாள்.**

சிரமத்துடனேயே அவனை அவள் ஈன்றாள். அவனைச் சுமப்பதற்கும், பால்குடி மறக்கச் செய்வதற்கும் முப்பது மாதங் கள் ஆகும்".

- அல்குர்ஆன் 46:15

நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள் : "ஒருவர் தம் தாயைப் புண் படுத்தி விட்டு மனைவிக்கு அடிபணிந்து நடப்பது, ஒருவர் தன் நண்பருடன் ஒட்டி உறவாடி விட்டு, தந்தையை தள்ளிவைப் பது போன்ற தீய காரியங் களை செய்வார்களேயானால் அவர்கள் மீது [இறைவனின்] சோதனை இறங்கும்".

அறிவிப்பாளர் :
ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்
நூல் : திர்மிதீ 2136

"இறைவனின் அன்பு பெற்றோ ரின் அன்பில் உள்ளது. இறைவ னின் வெறுப்பு பெற்றோரின் வெறுப்பில் உள்ளது" என்கிறது ஒரு நபிமொழி. நூல் : தப்ரானீ

மனிதன் பிறப்பதற்கு இறை வனுக்கு அடுத்து பெற்றோரே காரணம். ஒரு பெண் கர்ப்பம் தரித்தது முதல் பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்த்து ஆளாக்கும் வரை அவள் செலுத்தும் அக்கறை, காட்டும் பாசம், செய்யும் பணி விடைகள், படும் அவஸ்தைகள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. அவள் தனது பிள்ளைகளுக்காகச் செய்யும் தியாகத்திற்கு ஈடு இணை ஏது மில்லை என்கிறது அல்குர்ஆன். எனவே தாயின் தியாகத்திற்கும், அந்தஸ்திற்கும் மனைவி ஈடாக முடியாது. தாயை ஒதுக்கிவிட்டு மனைவியை முன்னிலைப் படுத்துபவன், அவன் நன்றி கெட்டவன் என்பதற்கான அடையாளமாகும்.

குழந்தையின் கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும் ஜீவன் தான் தந்தை. தாம் ஒழுங்காக உண்ணாவிட் டாலும், உடுத்தாவிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் தம்முடைய பிள்ளைகள் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைத்து ஓடாய்த் தேய்ந்து மெழுகாய் உருகுபவர் அவர். பிள்ளைகளின் நிறைவைப் பார்த்து ஏற்படும் கண் குளிர்ச்சி ஒன்றையே பெரும் செல்வமாகக் கருதுபவர். எனவே, தந்தையின் தியாகத்திற்கும், அந்தஸ்த்திற் கும் நண்பன் ஈடாக முடியாது. தந்தையைத் தள்ளிவைத்துவிட்டு நண்பனை முன்னிலைப்படுத்து பவன், அவன் நன்றிகெட்டவன் என்பதற்கான அடையாளமாகும்.

சில சமயங்களில் மனைவி மற்றும் நண்பனின் உறவு முறிந்து போய்விடலாம். ஆனால், பெற்றோரின் உறவு அப்படியல்ல. எந்தக் காலத்திலும் அந்த உறவு முறையை முறிக்கவோ, பிரிக்கவோ முடியவே முடியாது. தாய் தந்தையை விட மனைவி

அல்லது நண்பன் உயர்ந்தவர் களல்லர் என்று விளங்க வேண்டும்.

## மூத்தவர்கள்

ஹள்ரத் ஆயிஷா [ரளி] அவர்கள் கூறியதாவது. "ஒரு முறை அண்ணல் நபி [ஸல்] அவர்கள் தனது தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அண்ணலாரின் அருகில் அபூபக்கர் [ரளி], உமர் [ரளி] ஆகியோரும் அமர்ந்திருந்த னர். அப்போது அப்பாஸ் [ரளி] அவர்கள் அங்கு வந்தார்கள். உடனே அபூபக்கர் [ரளி] அவர்கள் அவருக்காக சற்று நகர்ந்து இடம் கொடுத்தார் கள். அப்பாஸ் [ரளி] அவர்கள் அண்ணலாருக்கும், அபூபக்கர் [ரளி] அவர்களுக்கும் இடையில் அமர்ந்து கொண்டார்கள். பின்பு அண்ணலர் [ஸல்] அவர்கள் அபூபக்கர் [ரளி] அவர்களை நோக்கி, "நிச்சயமாக சிறந்தவர்கள் தான் சிறந்தவர்களின் மதிப்பை விளங்கிக் கொள்வார்கள்" என்று கூறினார்கள்".

நூல்: கன்ஸுல் உம்மால்,
ஹயாத்துஸ் ஸஹாபா
பாகம் 2 பக்கம் 582

நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள் : "ஒரு வாலிபர் ஒரு முதியவருக்கு அவரின் முதுமையைக் கவனித்து கண்ணியம் [பணி விடை] செய்தால் நிச்சயமாக இவரின் முதுமையில் இவருக்கு கண்ணியம் [பணி விடை] செய்யும் ஒரு மனிதரை அல்லாஹ் ஏற்படுத்துவான்"

அறிவிப்பாளர் : ஹள்ரத்
அனஸ் (ரளி) அவர்கள்
நூல் : ஷுஅபுல் ஈமான்,
மிஷ்காத்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எந்த விஷயத்திலும் பெரியவர்களை வயதில் மூத்தவர்களை முற்படுத்துவார்கள். அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவார்கள். அவர்களைக் கண்ணியப்படுத்தவும், அவர்களின் அந்தஸ்துகளைப் பேணவும் வலியுறுத்துவார்கள்.

ஹாரிஸ் பின் ஃபுளைல் (ரஹ்) அவர்கள் கூறியதாவது. "ஜனாதிபதி அபூபக்கர் (ரளி) அவர்கள் யஸீத் பின் அபூசுஃப்யான் (ரளி) அவர்களை ஒரு படைக்குத் தலைவராக்கிய போது கூறியவை : (அந்தப் படையில் அபூஉபைதா (ரளி), முஆது பின் ஜபல் (ரளி) ஆகியோர் படைவீரர்களாக இருந்தனர்). யஸீதே! "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒவ்வொரு சமுதாயத்திலும் நம்பிக்கைக்குரியவர் ஒருவர் இருப்பார். என்னுடைய சமுதாயத்தில் அபூ உபைதா (ரளி) அவர்கள் நம்பிக்கைக்குரியவர் ஆவார்" என்று கூறியுள்ளார்கள். எனவே, அவருடைய சிறப்பையும், அவர் மூத்தவர் என்பதையும் கவனித்து செயல்படுவாயாக! மேலும், முஆத் பின் ஜபல் (ரளி) அவர்கள் அண்ண

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

சென்னை:- 37,77 கிருஷ்ணன் கோயில் தெரு மண்ணடி, சென்னை. Mob:- 95669 92919 / 99942 54304.

லால்பேட்டை:- முபாரக் ஜும்ஆ மஸ்ஜித், காயிதே மில்லத் சாலை லால்பேட்டை. Tel:- 04144-268114 Mob:- 94437 41264.

Email:- ticket.basharath@gmail.com // Web:- Al basharath.com // Fb:- Al basharath lalpet // Youtube:- Al basharath tours & travels

## புனித உம்ரா பயணம் - 2022 & 2023

| எக்கனாமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் |
|---|---|---|---|
| 85,000/- மட்டுமே... | 95,000/- மட்டுமே... | 1,05,000/- மட்டுமே... | 1,25,000/- மட்டுமே... |

## புனித ரமலான் உம்ரா - 2023

| 30 நாட்கள் | முதல் 15 நாள் | இறுதி 15 நாள் |
|---|---|---|
| 1,75,000/- மட்டுமே... | 1,20,000/- மட்டுமே... | 1,45,000/- மட்டுமே... |

## புனித ஹஜ் பயணம் - 2023

35 - 40 நாட்கள் 5,50,000/- மட்டுமே...

முன்பதிவு நடைபெறுகிறது முந்திக்கொள்ளுங்கள்...

## புனித உம்ரா - 2022 & 2023 பயணத் தேதிகள்

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் | 25-12-2022 | ஞாயிறு | 08-01-2023 | ஞாயிறு | 15 நாள் |
| ஜனவரி | 15-01-2023 | ஞாயிறு | 29-01-2023 | ஞாயிறு | 15 நாள் |
| பிப்ரவரி | 12-02-2023 | ஞாயிறு | 26-02-2023 | ஞாயிறு | 15 நாள் |
| மார்ச் | 08-03-2023 | புதன் | 22-03-2023 | புதன் | 15 நாள் |
| மார்ச் | 19-03-2023 | ஞாயிறு | 02-04-2023 | ஞாயிறு | 15 நாள் |

## புனித ரமலான் உம்ரா - 2023 பயணத் தேதிகள்

| பேக்கேஜ் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| முதல் 15 நாள் | 23-03-2023 | வியாழன் | 06-04-2023 | வியாழன் | 15 நாள் |
| இறுதி 15 நாள் | 06-04-2023 | வியாழன் | 23-04-2023 | ஞாயிறு | 15 நாள் |
| முழு 30 நாள் | 23-03-2023 | வியாழன் | 23-04-2023 | ஞாயிறு | 30 நாள் |

## புனித உம்ரா - 2023 (நோன்பு பெருநாள் பிறகு)

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 27-04-2023 | வியாழன் | 11-05-2023 | வியாழன் | 15 நாள் |

மேலும் விபரங்களுக்கு:- அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைபு செல்:- 99942 54304

லாருடன் போரில் கலந்து கொண்டவர். மேலும் அண்ணலார், அவர் மறுமை நாளில் மார்க்க அறிஞர்களில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பார் என்றும் கூறியுள்ளார்கள். எனவே, அவர் விஷயத்திலும் கவனித்துச் செயல்படுவாயாக!".

நூல் : கன்ஸுல் உம்மால்,
ஹயாத்துஸ் ஸஹாபா
பாகம் 2 பக்கம் 151

**ஹள்ரத் அனஸ் பின் மாலிக் [ரளி] அவர்கள் கூறியதாவது : "முதியவர் ஒருவர் நபிகள் பெருமானார் [ஸல்] அவர்களை நாடி வந்தார். ஆனால் மக்கள் அவருக்கு வழி விடுவதில் சுணக்கம் காட்டினர். அப்போது தான் அண்ணலார், நம்முடைய சிறார்களிடம் அன்பு காட்டாதவரும், பெரியவர்களைக் கண்ணியப் படுத்தாதவரும் நம்மைச் சேர்ந்தவர் அல்லர்" என்று கூறினார்கள்.**

திர்மிதீ 1842,
முஸ்னது அஹ்மத்

சிறியவர் மீது அன்பு காட்டுவதும், பெரியவரை மதிப்பதும் பொதுவான மனிதப் பண்புகளில் ஒன்றாகும். சிறார்கள்தான் அடுத்த தலைமுறை, வளரும் தலைமுறை, சக மனிதர்களின் அன்பும், ஆதரவும் இருந்தால் தான், வளரும் தளிர் நற்பயிறாக அமையும். அன்பு காட்டப்படுபவன் நாளை பிறரிடம் அன்பு காட்டும் நல்ல மனிதனாக மாற வழியேற்படும்.

அவ்வாறே, வயதிலோ, கல்வியிலோ மூத்தவர்களாக இருப்போரை மதித்தால்தான் அவர்களின் மனம் குளிரும். மதிக்கப்படும் ஒருவர் நான்குபேர் தம்மை மதிக்கிறார்களே என்பதற்காக வேண்டியாவது அந்தரங்கத்திலும் நல்லவராக வாழ முனைவார். அத்துடன் பெரியவர்களை மதிக்கும்போது நம்மிடம் பணிவும், கனிவும் உண்டாக வழியேற்படும்.

## மார்க்க அறிஞர்கள்

**அண்ணல் நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள். "நரைத்த [வயோதிக] முஸ்லிமுக்கும், குர்ஆனில் வரம்பு மீறாத, அதனை விட்டும் தூரமாகாத குர்ஆன் உடையவர்களுக்கும், [ஹாபிழ்கள், ஆலிம்கள்] அதிகாரமுள்ளவர்களுக்கும் மரியாதை செய்வது அல்லாஹ்வுக்கு மரியாதை செய்வதாகும்".**

அறிவிப்பாளர்: ஹள்ரத்
அப்துல்லாஹ் பின் அப்பாஸ்
(ரளி) அவர்கள்
நூல் : அபூதாவூத்

**நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள். "மூன்று மனிதர்களுக்காகவே சபை விரிவு படுத்தப்பட வேண்டும். வயது முதிர்ந்த பெரியவர், மார்க்க ஞானம் உள்ள அறிஞர், கண்ணியப் படுத்த வேண்டிய ஆட்சியாளர்".**

அறிவிப்பாளர் : ஹள்ரத்
அபூஹுரைரா (ரளி) அவர்கள்
நூல் : ஷுஅபுல் ஈமான்,
மிஷ்காத்

**நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள்: "திருகுர் ஆனைச் சுமப்பவர், இஸ்லாமியக் கொடியை சுமப்பவர் ஆவார். அவரை எவர் கண்ணியப்படுத்துகிறாரோ அவரை அல்லாஹ் கண்ணியப் படுத்துவான். அவரை எவர் இழிவுபடுத்துவாரோ அவர் மீது அல்லாஹ்வின் சாபம் ஏற்படும்"**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள்
நூல் : அல்ஃபிர்தௌஸ்

ஷஅபிய்யி (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "ஒரு முறை ஸைது பின் ஸாபித் (ரளி) அவர்கள் தனது வாகனத்தில் ஏறுவதற்காக வந்தார்கள். அப்போது அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் அந்த வாகனத்தில் கால் வைத்து ஏறும் வளையத்தை பிடித்துக் கொண்டு அவர்கள் வாகனத்தில் ஏற உதவி செய்தார்கள். அப்போது ஸைது (ரளி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரின் சிறிய தந்தையின் மகனாரே! விலகுங்கள்! எனக்காக தாங்கள் இவ்வாறு செய்ய வேண்டாம்" எனக் கூறினார்கள். அதற்கு அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள், இல்லை இவ்விதமாகத்தான் அறிஞர்களையும், பெரியவர்களையும் நாங்கள் கண்ணியப்படுத்துவோம்" என்று கூறினார்கள்.

நூல் : அல்இஸாபா,
தப்ரானீ, ஹயாத்துஸ் ஸஹாபா
பாகம் 2 பக்கம் 596

இஸ்லாம், சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்குமென தனித் தனி அந்தஸ்தை வழங்கியுள்ளது. ஒருவரை அவரது அந்தஸ்துக் கேற்ப மதிக்க வேண்டுமெனில், அவர்களது அந்தஸ்தை அறிந்திருக்க வேண்டும். முதலில் மார்க்க அறிஞர்கள் குர்ஆனை இதயத்திலும், செயலிலும் சுமந்திருப்போர், மேதைகள் மற்றும் சான்றோர்களை முன்னிலைப் படுத்த வேண்டும்.

அல்லாஹ்வின் மார்க்க நெறியில் நம்பிக்கையாளர்களாக இருந்து, சத்தியத்தை உரக்கச் சொல்லி, இஸ்லாமிய அடையாளங்களை பாதுகாப்பதை பணியாகக் கொண்டிருக்கும் அறிஞர்களுக்கு இஸ்லாமியச் சமூகத்தில் பெரும் அந்தஸ்தும், உயர்வும் உண்டு.

ஒரு சபையில் யாரேனும் ஒரு முதியவர் அல்லது மார்க்க அறிஞர் அல்லது ஆட்சியாளர் வந்தால் அவர்களின் வயது, ஞானம், ஆட்சி ஆகியவற்றை கண்ணியம் செய்வதற்காக சபையில் இடமளிக்க வேண்டும்.

## தலைவர்கள்

மக்கா வெற்றியின்போது அப்துல்லாஹ் பின் உமைய்யாவும், அபூஸுஃப்யானும் முஸ்லிம்கள் ஆயினர். அப்போது அப்பாஸ் (ரளி) அவர்கள் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, "நாயகமே! குறைஷிகளின்

தலைவராக விளங்கிய அபூ ஸுஃப்யானுக்கு எதையாவது செய்து அவரை கௌரவப்படுத் துங்கள்" என்று பரிந்துரைத்தார்.

**அப்போது அண்ணலார், "யாரெல்லாம் அபூஸுஃப்யா னின் இல்லத்திற்குள் நுழைந்து கொள் வாரோ அவர்களும், யாரெல்லாம் தம் வீட்டிற்குள் நுழைந்து கொள் வாரோ அவர்களும், ஹரம்எல்லைக் குள் யாரெல்லாம் வந்துவிடுவாரோ அவர்களும் பாதுகாப்புப் பெறுவார் கள்" என்று அறிவித்தார்கள்.**

இது அபூஸுஃப்யானுக்குக் கிடைத்த தனி மனித அங்கீகாரம் மட்டுமல்ல. அபூஸுஃப்யான் ஏற்கனவே தன் மக்களிடத்தில் மதிப்பிற்குரியவராகவும் இருந் தார். அவர் உள்ளம் திருப்தி யடையவே அண்ணலார் இவ்வாறு அவரை கௌரவப் படுத்தினார்கள். முஸ்லிமாக அவர் மாறியதை ஏற்று அவரது முந்தைய தகுதி அப்படியே நீடிப்பதற்கும் அளிக்கப்பட்ட வாய்ப்பாக இது அமைந்தது.

ஹள்ரத் ஜரீர் பின் அப்துல் லாஹ் (ரளி) அவர்கள் கூறிய தாவது: அருமை நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் ஆள் அனுப்பி, என்னை வரவழைத்து "சரி! நீங்கள் எதற்காக வந்தீர் கள்?" என்று கேட்டார்கள். "தங்கள் கரங்களால் முஸ்லிம் ஆவதற்காக" என்றேன். அண்ணலார் என் மீது ஒரு போர்வை போர்த்திவிட்டு, பிறகு நபித்தோழர்களை நோக்கி, "ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த மேன்மக்கள் உங்களிடம் வந்தால் அவர்களைக் கண்ணியப்படுத்துங் கள்" என்று கூறினார்கள்.

நூல் : தப்ரானீ, ஹயாத்துஸ் ஸஹாபா பாகம்1, பக்கம் 158.

தன்னுடைய சமுதாயத்தின ரால் சங்கை செய்யப்படும் சமூகத்தின் தலைவர் போன்றோர் நம்மிடம் வரும்போது அவரை சங்கை செய்ய வேண்டும். அவ்வாறு சங்கை செய்யப்பட வில்லையென்றால், இன்னும் அவர்கள் இஸ்லாத்தை அறியாத வர்களாகவும் இருந்தால், அவர் மற்றும் அவரின் சமூகத்தினர் நம்மீது பகைமை கொள்ளலாம். இன்னும் அவர்களால் துன்பங் களும் நிகழலாம். இருந்தாலும், அவர்களுக்கு சங்கை செய்யும் படியான இக்கட்டான நிலை யில் சங்கை செய்பவரின் தீனில் பாதிப்பு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பது அவசியம்.

## காலத்தால் முந்தியவர்கள்

ஹள்ரத் அபூசயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள் கூறியதாவது: (நபித்தோழர்களான) காலித் பின் வலீது (ரளி) அவர்களுக்கும், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி) அவர்களுக்கும் இடையே ஏதோ (பிரச்சனை) இருந்தது. காலித் (ரளி) அவர்கள் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி) அவர்களை ஏசினார்கள். அப் போது அருமை நாயகம் (ஸல்)

# அல்லாஹ்வின் இல்லத்திற்கு அள்ளி வழங்குங்கள்!

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

இறை இல்லத்தின் விரிவாக்கத்திற்காக 14 சென்ட் இடம் முடிப்பதற்கு சென்ட் ஒன்றுக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 14 சென்டுக்கு 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தங்களால் இயன்ற பொருளுதவியைப் பேருதவியாகச் செய்து மறுமையில் சொர்க்கத்தில் ஒரு மாளிகையைப் பெற அன்புடன் அழைக்கின்றோம். தங்களின் உதவிகளை கீழ்கண்ட பெயரில் செலுத்துங்களேன்!

**பேங்க் விபரம் :**

பெயர் : **SELLUR NEW MOSQUE JAMATH**

பேங்க் : **INDIAN BANK** **Branch : BIBIKULAM**

**A/C எண் : 7070061108**

**IFSC CODE : IDIB000B066 CIF No : 30415785610**

## செல்லூர் புதுப்பள்ளிவாசல் முஸ்லிம் ஜமாஅத்

அஹிம்சாபுரம் மேலத்தெரு விசாலம், **செல்லூர், மதுரை – 2.**

தலைவர் : **K.சுல்தான் அலாவுதீன்** M.A.,B.L., **9842137386**

செயலாளர் : **முஹம்மது அபூபக்கர்** B.Com., **9042450369**

பொருளாளர் : **A.காதர் மைதீன்** **9443732567**



நம்பகமான சேவையில்

நம்பிக்கையான மருந்தகம்

# பாவா மெடிக்கல்ஸ்

**294/1, சாலை தெரு,**

**இராமநாதபுரம் – 623 501.**

போன் : **04567–224500, 228500**

செல் : **9443255158**

அவர்கள் (காலித் (ரளி) அவர்களிடம்) "என் தோழர்களில் யாரையும் ஏசாதீர்கள். உங்களில் ஒருவர் உஹது மலையளவு தங்கத்தை (தர்மமாகச்) செலவிட்டாலும் என் தோழர்கள் (இறைவழியில்) செலவிட்ட இரு கையளவு அல்லது அதில் பாதி அளவுக்குக்கூட எட்ட முடியாது" என்று கூறினார்கள். (நூல் : முஸ்லிம் 4968)

ஹள்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி) அவர்கள் ஆரம்பகால நபித்தோழர். காலித் பின் வலீத் (ரளி) அவர்கள் பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர். அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி) அவர்கள் மற்றும் காலித் (ரளி) அவர்கள் ஆகிய இருவரும் நபித்தோழர்கள் தான். எனினும், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி) அவர்களை மட்டும் "எனது தோழர்" என்று அண்ணலார் நபி (ஸல்) அவர்கள் கூறுவதன் நோக்கம் என்ன? இரண்டு பேருடைய தகுதியும் ஒன்றல்ல. ஒரே காலத்தில் வாழ்ந்த இரு நபித்தோழர்களில் ஒருவர் காலத்தால் முந்தியவர், பல தியாகங்களைச் செய்தவர் என்பதால் அவருக்கு தனிப்பட்ட அந்தஸ்தும், மரியாதையும் இருக்கிறது என்று அண்ணலார் உணர்த்துகிறார்கள்.

நபித்தோழர்களின் காலத்திலேயே ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கும், பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கும் இடையே தகுதியிலும், அந்தஸ்திலும் பெரிய வேறுபாடுகள் இருந்துள்ளதைக் காணலாம்.

## ஆட்சியாளர்

ஹள்ரத் முஆது பின் ஜபல் (ரளி) அது அவர்கள் கூறியதாவது: "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை (கவர்னராக) யமன் நாட்டிற்கு அனுப்பிய போது, எனக்கு அறிவுரை கூறிக் கொண்டே சற்று தூரம் என்னுடன் நடந்து வந்தார்கள். நான் வாகனத்தில் இருந்தேன். அண்ணலார் (எனது) ஒட்டகத்திற்கு அருகில் நடந்து வந்தார்கள்". (நூல் : முஸ்னது அஹ்மத்)

ஒரு மனிதர் ஆட்சியாளராக நியமிக்கப்பட்ட பின்னர் அவருக்குரிய மரியாதையை முறையாக வழங்க வேண்டும் என இஸ்லாம் இயம்புகிறது.

## உபகாரிகள்

ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு முறை நஜ்து தேசத்தின் பெரும் கொடை வள்ளலாக திகழ்ந்த ஹாத்திம் அத்தாயீ என்பவரின் மகளார் ஃஃபானா என்பவரையும், அவரைச் சேர்ந்தவர்களையும் முஸ்லிம்கள் கைதிகளாகப் பிடித்துக் கொண்டு வந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சேர்த்தார்கள். அந்தக் கைதிகளின் தலைவியாக இருந்த ஸஃபானா என்பவர் அண்ணலாரின் கருணை

உள்ளத்தை அறிந்து, "நாயகமே! சிறைப்பட்டவரை விடுவிப்பவ ராகவும், பசித்தவரின் வயிற்றை நிரப்புபவராகவும், ஆடை இல்லா தவருக்கு ஆடை அணிவிப்பவ ராகவும், விருந்தினரை உபசரிப்பவராகவும், தேவையை வேண்டி வருபவரை திருப்பி அனுப்பாதவராகவும் இருந்து வந்த ஒருவரான ஹாத்திம் அத்தாயீயின் மகள் தான் நான். எனவே, நீங்கள் எனக்கு கருணை காட்ட வேண்டும்" என்று வேண்டி நின்றார்.

சஃபானாவின் பேச்சை கவனத்தோடு கேட்டுக் கொண்டி ருந்த அண்ணலார், "பெண்ணே! இது உண்மை யாகவே இறைநம்பிக்கையாளர் களின் பண்பாகும். உன் தந்தை இறைநம்பிக்கையாளராக இருந் திருந்தால் அவருக்கு கிருபை செய்யும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தித்திருப்போம்" என்று கூறினார்கள். தொடர்ந்து, "இவளை விடுவித்து விடுங்கள்! நிச்சய மாக இவள் தந்தை சங்கையான குணங்களை விரும்புபவராக இருந்தார் அல்லாஹ்வும் சங்கை யான குணங்களை நேசிக் கிறான்" என்றார்கள்.

மேலும் அண்ணலார், அவளையும், அவளைச் சேர்ந்த வர்களையும் விடுதலை செய்து விட்டு அவர்களுக்கு அணியும் ஆடைகளையும், பயணிக்க வாகனங்களையும், வழிச்செலவுக்கு தேவையான தொகையையும் கொடுத்து அவர்களைக்கண்ணியத் தோடு வழியனுப்பி வைத்தார்கள்.

நூல் : சீரத் இப்னு ஹிஷாம்,
அல்பிதாயா வந்நிஹாயா

பிற மக்கள் மீது கருணை யுள்ளம் கொண்ட ஒருவரின் மகளை கருணை உள்ளத்தோடு நடத்துவது தான் சிறந்தது என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்கு போதிக்கின்றார்கள்.

ஒருமுறை நபித்தோழி ஹள்ரத் உம்மு ஸலீத் (ரளி) அவர்கள் அரசின் உதவியைப் பெறுவதற்கு வரிசையில் காத்துக் கிடந்தார்கள். இதைக் கண்ட ஜனாதிபதி உமர் (ரளி) அவர்கள் தனது பணியாளரை அழைத்து, "யுத்தக் களத்தில் நாவறண்டு போன பல நபித்தோழர்களுக்கு தண்ணீர் புகட்டி பேருதவி செய்த உம்மு ஸலீத் (ரளி) அவர்கள் அங்கே வெயிலில் காத்துக் கிடக் கிறார்கள். எனவே, அவருக்கு தண்ணீர் கொடுத்து விட்டு, அடுத்த மாதத்திலிருந்து உங்கள் வீடு தேடி உங்களுக்கான அரசின் உதவிகள் வந்து சேரும் எனக் கூறுங்கள்" என்று சொல்லி அனுப்பினார்கள்.

நூல்: குலஃபாஉர் ரசூல் (ஸல்)

மக்களின் தரமறிந்து மரியாதை செய்வதன் மூலம், நாம் அல்லாஹ்விடம் மரியாதையைப் பெறலாம். எனவே, அதற்காக முயற்சிப்போமாக! அல்லாஹ் அருள்பாலிப்பானாக!

# தாடி – சில செய்திகள்

**– அன்வர் ஜீ,** சேலம் – 5.

முஸ்லிம்கள் தாடி வளர்ப்பது நபி வழியாகும். விஞ்ஞானப் பூர்வமாகப் பார்த்தால் உடல் ஆரோக்கியத்தில் தாடி முக்கியப் பங்கு வகிக்கிறது. அதன் காரணமாகத்தான் தாடி வளர்க்கும்படி இஸ்லாம் கட்டளையிடுகிறது.

தாடி நமது முகத்திற்குக் கவசம் மாதிரி, தாடி வைத்திருப்பதால் முகம் எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்கும். கன்னங்களும், தாடையும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. தாடி முகத்தில் படர்ந்திருப்பதால் சபாசியஸ் என்ற சுரப்பி சுரக்கிறது. இந்த சுரப்பியானது முகத்தில் கரும்புள்ளிகள், முகப்பருக்கள் வராமல் பாதுகாக்கிறது.

தாடி வளர்ப்பதால் சூரிய ஒளிக்கற்றைகள் நேரடியாக சருமத்தை அடைவதைத் தடுத்து, தொண்டை, பற்களின் ஈறுகள் சம்பந்தமான பிரச்சனைகள் ஏற்படுவதைத் தவிர்க்கிறது. ஒளிக்கற்றைகள் நேரடியாக முகச் சருமத்தை அடையும்போது தோல் வலுவிழந்து முகத்தில் சுருக்கம் ஏற்பட ஆரம்பிக்கும்.

தாடி வளர்த்தால் சிறிய வயதிலேயே முகத்தில் சுருக்கம் ஏற்பட்டாலும், வயதானத் தோற்றத்தை காண்பிக்காது. முக்கியமாக சுவாசக் கோளாறுகள் ஏற்படாது. இவையனைத்தும் விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் முஸ்லிம்கள் தாடி வளர்ப்பதற்கு முக்கியத்துவம் தருகிறார்கள்.

# நான்கின் மதிப்பு

நான்கு விஷயங்களின் மதிப்பை நான்கு மனிதர்கள்தான் புரிந்து கொள்ள முடியும்.

1. வாலிபத்தின் மதிப்பை வயோதிகர்கள்தான் அறிய முடியும்.
2. சுகத்தின் மதிப்பை துன்பமுள்ளவர்கள்தான் அறிய முடியும்.
3. உடல்நலத்தின் மதிப்பை நோயாளிகள் தான் அறிய முடியும்.
4. வாழ்க்கையின் மதிப்பை இழந்தவர்கள்தான் அறிய முடியும்.

# இஸ்லாம் கூறும் கல்வி

**பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,**
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட முதல் திருமறை வசனமே இக்ரஃ ஓதுவீராக! என்பதுதான். நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலில் இறக்கப் பட்ட வேத வசனங்களில் அல்லாஹ் கல்வியைப் பற்றிதான் கூறுகின்றான்.

**"[யாவற்றையும்] படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக"**

**அலக் என்ற நிலையிலிருந்து மனிதனைப் படைத்தான்.**

**ஓதுவீராக; உம் இறைவன் மாபெரும் கொடையாளி.**

**அவனே எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான்.**

**மனிதனுக்கு அவன் அறியாத வற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்.**

- அல்குர்ஆன் (96 : 1 - 5)

இஸ்லாம் கல்விக்கு முக்கியத்துவத்தை வழங்குகிறது. ஏனென்றால் நல்ல சமுதாயக் கட்டமைப்புக்குக் கல்வி அடிப்படைச் சாதனமாகும்.

நல்ல மனப்பாங்கு, நன் நடத்தை, ஆன்மிக நாட்டம், சிந்தனைத் தெளிவு, சமுதாயத்தின் மரபுகள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியங்களைப் பேணுதல், சுய கட்டுப்பாடு, சமுதாயத்தோடு ஒத்துப்போதல், மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றும் மனப் போக்கு, வாழ்க்கையில் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் திறன், ஆக்கத்திறன், பகுப்பாய்வுத் திறன், தொழில்திறமை, ஆளுமை வளர்ச்சி, பண்பாட்டுப் பக்குவம் ஆகிய பன்முகத் தன்மைகளை மேம்படுத்துவது கல்வியாகும். தான் வாழும் சமூகத்தில் தனக்கென்று ஓர் உரிய இடத்தைப் பெற்றுத் தருவது கல்வியாகும். கல்வி என்பது ஒருவருக்குள் உறைந்திருக்கும் ஆற்றலை வெளியே கொண்டு வரும் சாதனம் என்றும் சொல்லலாம். எடுத்தால் குறைவதில்லை கொடுத்தால் கரைவதில்லை என்ற பழமொழியும் கல்விச் செல்வத்தைப் பற்றிக் கூறுவதாகும்.

கல்வி எங்கு கிடைத்தாலும் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நபி (ஸல்) அவர்கள் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

**"கல்வி என்பது ஒரு ஞானம் நிறைந்தவனின் விழுப் பொருள். அது எங்கு கிடைத்தாலும் அதைப் பெற்றுக் கொள்வது ஏற்றமானது" என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ)

கல்வியைத் தேடிச் செல்பவர்களுக்கு சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை அல்லாஹ் எளிதாக்கி வைக்கிறான் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**"யார் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடக்கிறாரோ அவருக்கு அதன்மூலம் சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை அல்லாஹ் எளிதாக்குகிறான்" [ஸஹீஹ் முஸ்லிம் : 5231] இதை ஹள்ரத் அபூஹுரைரா [ரளி] அவர்கள் அறிவிக்கிறார்கள்.**

கல்வியைத் தேடுவது முஸ்லிம்களாகிய நம்மீது கடமை என்று கூறி, கல்வியின் முக்கியத்துவத்தை நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் (நூற்கள் : அபூதாவூத், திர்மிதீ, இப்னு மாஜா)

கல்வி கற்கும் சபையும் (மஜ்லிஸ்), கல்வி கற்றுக் கொடுக்கும் சபையும் (மஜ்லிஸ்) சிறந்த சபைகளாகும்" என்றும் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தமது பள்ளிவாசலில் குழுமியிருந்த இரண்டு மஜ்லிஸ்களின் அருகில் சென்றார்கள். ஒன்றில் மக்கள், அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து கொண்டும் அவனுடைய அருட்கொடைகளில் ஆர்வம் வெளிப்படுத்திக் கொண்டுமிருந்தார்கள்.

மற்றொன்றில் மக்கள், சட்ட விஷயங்களைக் கற்றுக் கொண்டும், கற்றுக் கொடுத்துக் கொண்டுமிருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :-

**"இந்த இரு அவைகளுமே நன்மையில்தான் உள்ளன. ஆயினும், ஒன்று மற்றொன்றை விடச் சிறந்தது. இந்த மஜ்லிஸில் உள்ளவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து கொண்டும் அவனுடைய அருட்கொடைகளில் ஆர்வம் வெளிப்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். அல்லாஹ் நாடினால் அவர்களுக்குக் கொடுப்பான்; நாடவில்லையெனில் கொடுக்கமாட்டான். இந்த மஜ்லிஸில் உள்ளவர்கள் கற்றுக் கொண்டும் அறியாதாருக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறார்கள். நான் ஓர் ஆசானாகவே அனுப்பப்பட்டுள்ளேன்!" இவ்வாறு கூறியவாறு நேராக அவர்களிடம்**

சென்று அமர்ந்தார்கள் நபி [ஸல்] அவர்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரளி) அவர்கள் (நூல் : தாரமி)

நான் ஓர் ஆசானாகவே அனுப்பப்பட்டுள்ளேன் என்று கூறிய நபி (ஸல்) அவர்கள் கல்வி கற்பது, கற்பிப்பது, அறிவைத் தேடுவது, அதை மற்றவருக்கு வழங்குவது ஆகிய அனைத்தையும் அவர்கள் ஊக்குவித்து வந்தார்கள்.

ஆகவே, கல்வியைப் பயில்வது மிகவும் இன்றியமையாததாகும். கல்வி பயின்று பொருள் ஈட்டுதலும் மிகவும் முக்கியமாகும். வட்டித் தொழில் அல்லாத ஹலாலான எந்தத் தொழிலையும் செய்து பொருள் ஈட்டலாம்.

அவ்விதம் பொருள் ஈட்டினால் தான் இறைவன் திருமறையில் கூறும் ஆணைகளை நம்மால் நிறைவேற்ற முடியும். யார் யாருக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்று ஒரு பட்டியலை அல்லாஹ் திருமறையில் வெளியிட்டிருக்கிறான்.

**"மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள். அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும்,**

*** தாய் தந்தையர்க்கும்,**

*** நெருங்கிய உறவினர்களுக்கும்,**

*** அநாதைகளுக்கும்,**

*** ஏழைகளுக்கும்,**

*** அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும்,**

*** அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும்,**

*** [பிரயாணம், தொழில் போன்றவற்றில்] கூட்டாளிகளாக இருப்போருக்கும்,**

*** வழிப்போக்கர்களுக்கும்,**

*** உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள்.**

**நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை"**

- அல்குர்ஆன் (4 : 36)

தாய் தந்தையர்கள் உட்பட ஒன்பது வகையானவர்களுக்கு உபகாரம் செய்யுமாறு அல்லாஹ் நமக்கு திருமறையில் கட்டளையிட்டிருக்கிறான்.

இவர்களுக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்றால் நிச்சயமாக பொருள் ஈட்டியே தீர வேண்டும். எவ்வளவு உபகாரம் செய்ய வேண்டும் என்று அல்லாஹ் வரையறுக்கவில்லை. ஆகவே அவரவர்களின் பொருளாதார அளவின்படி செய்யும் உபகாரத்தை அல்லாஹ் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்வான். ஒருவர் ஈட்டுகின்ற பொருள் மற்றவர்களுக்கு உபகாரம் செய்வதற்கு உதவும். ஆனால் அதே நேரத்தில் ஒருவர் ஈட்டுகின்ற பொருள்

அவரை யாரிடமும் கையேந்தாமல் கண்ணியமாக வாழ வைக்கும்.

"அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக்கட்டி மூன்று வேண்டும்" என்ற பழமொழிக்கேற்ப இந்த உலகத்தில் தேவைகள் அதிகமாக இருக்கின்றன. இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய யாசிப்பதில் ஈடுபடக் கூடாது. ஏனெனில், யாசிப்பது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது. விறகு வெட்டி விற்றாவது கண்ணியத்துடன் வாழ வேண்டும் பிறருக்கும் தர்மம் செய்ய வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

**"உங்களில் ஒருவர் காலையில் கயிற்றை எடுத்துக் கொண்டு மலைக்குச் சென்று (மலையேறி), விறகு வெட்டி விற்று, தாமும் உண்டு, பிறருக்கும் தர்மம் செய்வதானது, மக்களிடத்தில் யாசிப்பதைவிடச் சிறந்ததாகும்"**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : ஸஹீஹ் புகாரி : 1480)

எனவே, ஹலாலான முறையில் பொருளீட்ட வேண்டும். பொருளீட்டுவதற்கு கல்வி அத்தியாவசியமாகிறது.

கல்வி என்பது கல்லூரிகளில் பயின்று பல்கலைக்கழகங்களில் பட்டங்கள் பெறுவது மட்டும் கல்வி ஆகாது. இதுமுறை சார்ந்த கல்வி எனப்படும் கல்வி வகையில் சேர்ந்ததாகும். கல்வி நிறுவனமயமாக்கப்பட்ட (institutionalized) கால வரிசைப்படி (timelined) தரப்படுத்தப்பட்ட (graded) மற்றும் படிநிலைக் (stage wise) கட்டமைக்கப்பட்ட (structured) கல்வி நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்ட (certified) படிப்புகள் "முறை சார்ந்த கல்வி" என்றழைக்கப்படுகிறது.

இந்தக் கல்வி முறை ஆரம்பப் பள்ளியின் ஆரம்ப ஆண்டுகளிலிருந்து பல்கலைக் கழகத்தின் கடைசி ஆண்டுகள் வரை நீண்டுள்ளது. இதைப்போல் மதரஸாக்களில் பயிற்றுவிக்கும் கல்வியும் முறை சார்ந்த கல்வியாகும்.

முறை சார்ந்த கல்வி என்ற ஒன்று இருப்பதோடு முறை சாராக் கல்வி என்ற ஒன்றும் இருக்கிறது. ஒரு துறையின் அறிவு, திறன்கள், நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்வுகளைக் கொண்டு தன்னிச்சையாக, தன்னார்வத்துடன் அனுபவமாகக் கற்கும் முறைதான் "முறை சாரா கல்வி" என்றழைக்கப்படுகிறது. இது முன்னணிக் களப் பயிற்சி (frontline field training) என்றும் சொல்லப்படுகிறது.

உதாரணமாக சிறுவர்கள் பலசரக்குக் கடையில் வேலைக்கு சேர்கின்றனர். அங்கு அவர்களுக்கு சொல்லித் தர ஆசிரியர்கள் கிடையாது. வகுப்புகள் கிடையாது. பாடப் புத்தகங்கள் கிடையாது. தினந்தோறும் நடக்கும்

# ஹிஃப்ழு மதரஸா நடத்துபவர்களுக்கும், நடத்த விரும்புபவர்களுக்கும், இஸ்லாமிய ஜமாஅத்தார்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு!

பிரியமானவர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி...!

திண்டுக்கல் மாவட்டம், சீலப்பாடி கிராமம் (விரிவாக்கப் பகுதி), பாவா நகரில் அமைந்துள்ள, 2007ஆம் ஆண்டில் வக்ஃபு செய்யப்பட்டு, திறக்கப்பட்டுள்ள "**ஆயிஷா ஜும்ஆ மஸ்ஜித் & ஹாஜியா ரஹ்மத் தம்பி கப்ருஸ்தான்**" பள்ளிவாசலில் ஹிஃப்ழு மதரஸா ஆரம்பிக்க விருப்பமுள்ளவர்களுக்கு இடவசதி தந்து, மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதிகளும் செய்து கொடுத்து, எவருடைய அனாவசியத் தலையீடும் இல்லாத நிர்வாகத்தையும் ஒப்படைத்து தரப்படும்.

மற்றும் ஓதக்கூடிய பிள்ளைகளுக்கும், உஸ்தாதுமார் களுக்கும் சிறு சிறு உதவிகள் அவ்வப்போது செய்து தரப்படும். மாணவர்களுக்கு எண்ணிக்கை பிரகாரம் குர்ஆனும் வழங்கப்படும்.

சமையல் பாத்திரங்கள் ஓரளவுக்கு இருப்பிலுள்ளன. தனியாக அட்டாச் பாத்ரூம் கொண்ட ஒரு ஹாலும் இதனுடன் இருக்கிறது. ஓதக் கூடிய மாணவர்களும், ஆலிம் – உஸ்தாதுகளும் உங்கள் பொறுப்பைச் சார்ந்ததாகும்.

இன்ஷா அல்லாஹ் வாய்ப்புள்ளவர்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**தொடர்புக்கு**

**மவ்லவீ முஹம்மது நூருல் ஹுதா (எ)**
**ஜிந்தா ரப்பானீ மழ்ஹரீ பாவா,**
**அன்ஸார் பப்ளிஷர்ஸ்.**

செல் : **7373071800; 9486071818.** e-mail : sangilibawa@gmail.com.

வியாபாரத்திலிருந்து அவர்கள் சில்லரை வியாபார நெளிவு சுளிவுகளைக் கொஞ்சம் கொஞ்ச மாகக் கற்றுக் கொள்கின்றனர். பல சரக்குகளை எங்கிருந்து எந்த விலைக்கு கடை முதலாளி வாங்குகிறார், அதற்கு பண பட்டுவாடா எவ்வாறு செய்கிறார், சில்லரை வியாபாரத்தில் இலாபம் ஈட்ட எவ்வாறு பலசரக்குகளுக்கு விலைகள் நிர்ணயிக்கிறார்; எந்த விதமான பொருட்கள் வேகமாக விற்பனையாகின்றன; எந்தப் பொருட்களில் இலாபம் அதிக மாக இருக்கின்றது; பலசரக்குகள் எவ்வாறு அடுக்கி வைக்கப்படு கின்றன; சீக்கிரமாக காலாவதி யாகும் பொருட்கள் வாடிக்கை யாளர்களின் கண்களில் படும்படி கடையில் எங்கு வைக்கப்படுகின் றன. எந்தவிதமான பொருட்கள் எந்தவிதமான வாடிக்கையாளர் களுக்குப் பிடிக்கும். எப்படிப்பட்ட வாடிக்கையாளர்களுக்குக் கடன் கொடுக்கலாம்; கடனை கால நேரத்தோடு எவ்வாறு வசூல் செய்வது, எறும்பு, புழு, பூச்சிகள் வராமல் பலசரக்குகளை முதலாளி எவ்வாறு பாதுகாக்கிறார்; முத லாளி வாடிக்கையாளர்களிடம் எவ்வாறு பேசி வியாபாரம் செய் கிறார். அதிகமாக பேரம் பேசும் வாடிக்கையாளர்களை எவ்வாறு சமாளிக்கிறார்; அதிகமாக இலாபம் தரும் பொருட்களை வாடிக்கையாளர்களிடம் எவ் வாறு சாதுரியமாக பேசி விற்பனை செய்கிறார் போன்ற சில்லரை வியாபார யுக்திகளை யும், நுணுக்கங்களையும் கடை யில் வேலை செய்யும் ஊழியர்கள் கொஞ்சம் கொஞ்ச மாக கற்றுக் கொள்கின்றனர். ஐந்து அல்லது ஆறு வருடங்களில் வியாபார யுக்திகளை கற்றுக் கொண்ட பின் கடையில் வேலை செய்யும் ஊழியர்களும் சொந்த மாக பலசரக்குக் கடைகளை திறந்து கொள்கின்றனர். அந்தக் கடை முதலாளியும் சிறுவனாக இருந்தபோது அவருடைய முதலாளியிடமிருந்து இதைப் போலவே வியாபார யுக்திகளை யும், நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டிருந்திருப்பார்.

இவ்வாறு அன்றாடம் நடக் கும் வியாபாரப் பரிவர்த்தனை களிலிருந்து தன்னிச்சையாக, தன்னார்வத்துடன் அனுபவமாகக் கற்கும் கல்வி தான் முறை சாரா கல்வி என்றழைக்கப்படுகிறது.

இதைப் போலவே மெக் கானிக் என்று சொல்லப்படும் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவர்களிடம் வேலைக்கு சேர்பவர்கள் அவருடைய தொழில் நுட்பத்தைக் கொஞ்சம் கொஞ்ச மாக கற்றுக் கொள்கின்றனர். அவர் இயந்திரங்களை எவ்வாறு பிரித் தெடுத்து பழுது பார்க்கிறார். பழுதடைந்த பாகங்களை எவ் வாறு அவற்றில் பொருத்துகிறார். தரம் வாய்ந்த புதிய பாகங்கள் எவ்வளவு காலத்திற்கு இயந்திரங்களில் தாக்குபிடிக்கும். தரம் குறைந்த புதிய பாகங்கள்

எவ்வளவு காலத்தில் தேய்ந்து போகும், புதிய பாகங்கள் எங்கு கிடைக்கும். அவைகளை தயாரிப்ப வர்கள் யார், இயந்திரங்களில் எந்த பகுதிகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். சுத்தம் செய் வதற்கு எந்தவிதமான எண்ணெயை உபயோகிக்க வேண்டும். இயந்திரங்களின் பாகங்கள் தேய்ந்து போகாமலி ருக்க எந்தவிதமான எண்ணெயை (Lubricants) உபயோகிக்க வேண் டும்; எந்தக் கால இடைவெளியில் இயந்திரங்களைப் பராமரிக்க (maintenance) வேண்டும்; தொழிற்சாலையில் பொருட்கள் உற்பத்தியாகின்றபோது திடீரென்று இயந்திரங்கள் நின்று போகாமல் (Breakdowns) இருப் பதற்கு என்ன செய்ய வேண்டும்; இயந்திரங்களின் நிர்ணயிக்கப் பட்ட வேகம் குறையாமலிருக்க (Speed Loss) என்ன செய்ய வேண் டும்; உற்பத்தியாகின்ற போது இயந்திரங்கள் பொருட்களைச் சிதைக்காமல் (Production Rejects) இருக்க என்ன செய்ய வேண்டும்; தரம் (Quality) குறை யாமல் பொருட்களை இயந்திரங் கள் உற்பத்தி செய்ய எந்தவித மான இயந்திரங்களை முடுக்கி விட வேண்டும்; உலக முழுவதும் நிர்ணயிக்கப்பட்ட ஐ.எஸ்.ஓ. தரக் கட்டுப்பாட்டிற்கு (ISO Standards) ஏற்ப எவ்வாறு இயந்திரங் களின் திறனை (Machinery efficiency) மேம்படுத்துவது போன்ற தொழில்நுட்பங்களை மெக்கானிக் என்பவரிடம் வேலை செய்யும் ஊழியர்கள் அனுபவத்தில் கொஞ்சம் கொஞ்ச மாக கற்றுக் கொள்கின்றனர். 10 ஆண்டுகளில் ஊழியர்கள் சிறந்த மெக்கானிக் என்ற நிலையை அடைந்து விடுகிறார்கள்.

இவ்வாறு தன்னிச்சையாக, தன்னார்வத்துடன் அனுபவமாக தொழில் நுட்பங்களைக் கற்கும் கல்வி தான் முறை சாரா கல்வி என்றழைக்கப்படுகிறது.

அறிவில்லாதவர்களை விட்டு விலகியிருக்க வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு திரு மறையில் அறிவுறுத்துகிறான்.

**“இன்னும், அறிவீனர்களை விட்டு விலகியிருப்பீராக!”**

- அல்குர்ஆன் (7 : 199)

அதாவது நாம் எப்போதும் அறிவுள்ளவர்களோடு இணைந்தி ருக்க வேண்டும். கல்லூரிகள், மதரஸாக்கள் போன்றவற்றில் முறை சார்ந்த கல்வியைக் கற்றா லும் அல்லது முறை சாரா கல்வி யைக் கற்றாலும் கல்வி என்பது சிறப்பாக அமைய வேண்டுமென் றால் அந்த அந்தத் துறையைச் சார்ந்த நிபுணர்களுடன் நெருக்க மான தொடர்புகள் வைத்துக் கொள்ள வேண்டும். இதுதான் மேற்கண்ட திருமறை வசனத் தின் தாத்பரியமாகும்.

சிறந்த கல்வியைக் கற்று மேன்மையடைய ஞாபக சக்தி எனப்படும் நினைவாற்றல் மிக வும் அவசியமாக இருக்கிறது. (Memory is the gateway of Educa

tion) நினைவாற்றல் கல்வியின் நுழைவாயில் என்று கல்வியியல் நிபுணர் டாக்டர் ஆன்ஸ்லே கார்லைல் (Dr.Ansley Carlyle) கூறியிருக்கிறார். ஞாபகம் என்பது கற்றவற்றை மூளையில் தக்க வைத்துக் கொள்ளும் செயல்பாடாகும்.

ஞாபகம் அல்லது நினைவாற்றல் என்பது பல வகைப்படும்.

ஐகானிக் ஞாபகம் (Iconic Memory) நாம் சாலையில் போய்க் கொண்டிருக்கும்போது எதிரில் ஒருவரைப் பார்க்கிறோம். அவருடைய முகம் நம் நினைவில் பதிகிறது.

ஆனால், சில வினாடிகளில் அவருடைய முகம் நம் நினைவிலிருந்து போய் விடுகிறது. இதை ஐகானிக் ஞாபகம் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இது தற்காலிக உருவ ஞாபகம் (Temporary Image Memory) ஆகும்.

**எக்கோயிக் ஞாபகம் (Echoic Memory)**

தக்காளி விற்பவர் சாலையில் தக்காளி தக்காளி என்று கூவிக் கொண்டு போகிறார். அவர் கூறியது நம் நினைவில் பதிகிறது. ஆனால், சில வினாடிகளில் அது நம் நினைவிலிருந்து போய் விடுகிறது. இதை எக்கோயிக் ஞாபகம் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இது தற்காலிக ஒலி ஞாபகம் (Temporary Sound Memory) ஆகும்.

**ஹாப்டிக் ஞாபகம் (Haptic Memory)**

நாம் சாலையில் போய்க் கொண்டிருக்கும்போது எதிரில் வருபவர் நம் கையைத் தட்டி விட்டுப் போகிறார். அது நம் நினைவில் பதிகிறது. ஆனால், சில வினாடிகளில் அது நம் நினைவிலிருந்து போய் விடுகிறது. இதை ஹாப்டிக் ஞாபகம் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இது தற்காலிகத் தொடு உணர்ச்சி ஞாபகம் (Temporary Sensory Memory) ஆகும்.

**ஆல்ஃபாக்டரி ஞாபகம் (Ol factory Memory)**

நாம் சாலையில் போய்க் கொண்டிருக்கும்போது சாக்கடை துர்நாற்றம் நம் மூக்கை துளைக்கிறது. அது நம் நினைவில் பதிகிறது. ஆனால், சில வினாடிகளில் அது நம் நினைவிலிருந்து போய் விடுகிறது. இதை ஆல்ஃபாக்டரி ஞாபகம் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இது தற்காலிக வாசனை ஞாபகம் (Temporary Smell Memory) ஆகும்.

**கஸ்டேட்டரி ஞாபகம் (Gustatory Memory)**

நாம் சாலையில் போய்க் கொண்டிருக்கும் போது வழியில் ஒரு வடை வாங்கி சாப்பிடு

**குர்ஆனின் குரல் E-Mail முகவரி : quraaninkural@gmail.com**

# அல்லாஹ்வுக்காக ஓர் வேண்டுகோள்!

அல்லாஹ்வின் பேரருளால் புதுக்கோட்டை காமராஜபுரம் "**மஸ்ஜிதே முஹம்மது இப்ராஹீம்**" ஜும்ஆ பள்ளிவாசல் கட்டிட விரிவாக்க பணிகள் மிக வேகமாக நடந்து வருகின்றன. தங்களின் நல்ல பணங்காசுகளும் அந்தக் கட்டிடத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் இந்த வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**வாருங்கள்! விரைந்து உங்களின் உதவிகளைத் தாருங்கள்.**

அல்லாஹ் தனது உயர்ந்த சொர்க்கத்தை உங்களுக்கு தருவதற்கு காத்திருக்கிறான்.

இப்படிக்கு : **நிர்வாகிகள், "மஸ்ஜித் முஹம்மது இப்ராஹீம்" ஜும்ஆ பள்ளிவாசல், காமராஜபுரம் ஒன்பதாவது தெரு, புதுக்கோட்டை -622 001.**

**வங்கி விபரம் :** **"JUMMA MAZJID KAMARAJAPURAM"**
Current Account No : **510101005523881**
**UNION BANK OF INDIA** IFSC Code : **UBIN0911241**
Micr Code: **622026008** Branch : **PUDUKKOTTAI.**

தலைவர் : ஹாஜி **அப்துல்லாஹ்** - 9715265709
செயலாளர் : ஹாஜி **ஏ.ஆர். முஹம்மது மீரா** - 9443346313
பொருளாளர் : ஜனாப் **பி.எஸ்.எம். முஹம்மது அப்துல்லாஹ்** - 9486265728


*ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!*

# N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

**திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.**

**214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.**
**செல் : 9944001362**

கிறோம். அது மிகவும் காரமாக இருக்கிறது. அந்த வடையின் காரம் நம் நினைவில் பதிகிறது. ஆனால், சில வினாடிகளில் அது நம் நினைவிலிருந்து போய் விடுகிறது. இதை கஸ்டேட்டரி ஞாபகம் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இது தற்காலிக சுவை ஞாபகம் (Temporary Taste Memory) ஆகும்.

## குறுகிய கால ஞாபகம் (Short Term Memory)

நமது மூளை அன்றாடம் ஆயிரக்கணக்கான தகவல்களைப் பெறுகிறது. அத்தனை தகவல்களையும் மூளையிலேயே சேமித்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. அவசியமான காலத்திற்கு மட்டுமே அந்தத் தகவல்கள் மூளையில் சேமித்து வைக்கப்படுகின்றன. பணி முடிந்ததும் அந்தத் தகவல்கள் மறக்கப்பட்டு விடுகின்றன. இதுவே குறுகிய கால ஞாபகம் என்று கூறப்படுகிறது. உதாரணமாக ஒரு பணியின் நிமித்தம் நாம் ஒருவருடைய அலைபேசி எண்ணை வாங்கிக் கொள்கிறோம். அந்தப் பணி நிறைவுறும் வரையில் அந்த எண் நம் நினைவிலிருக்கிறது. அந்தப் பணி முடிந்த பிறகு அந்த நபரின் தொடர்பு நமக்கு இனி தேவையில்லை என்று நாம் முடிவுக்கு வரும்போது சில நாட்கள் அல்லது சில மாதங்களில் அவருடைய அலைபேசி எண்ணை சரியாக நம்மால் நினைவுகூர முடிவதில்லை.

## நீண்டகால ஞாபகம் (Long Term Memory)

நாம் செய்யும் தொழிலுக்குத் தேவையானவை, நம்முடைய மனதை மிகவும் கவர்ந்தவை அல்லது பாதித்தவை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தவை ஆகிய தகவல்கள் நம்முடைய மூளையில் நீண்டகால நினைவுகளாக தங்கி விடுகின்றன. உதாரணமாக முதலிரவில் மனைவியை சந்தித்தது. வாழ்க்கையில் முதல் முறையாக வாங்கிய ஊதியம், உறவினர்கள் அல்லது நெருங்கியவர்களின் இழப்பு, ஒருவர் நம்மை அவமானப் படுத்தியது, வாழ்க்கையில் சந்தித்த வெற்றி அல்லது தோல்விகள் ஆகிய நினைவுகள் நீண்ட கால ஞாபகங்களாக நம் மூளையில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. இந்த ஞாபகங்கள் நம் மனத் திரையில் அவ்வப்போது ஓடிக் கொண்டிருக்கின்றன.

## எக்ஸ்பிளிசிட் ஞாபகம் (Explicit Memory)

தூக்கத்தில் தட்டியெழுப்பினால் கூட என்னால் சொல்ல முடியும் என்று சொல்கிறார்களே.

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

அப்படிப்பட்ட ஞாபகங்கள் தான் எக்ஸ்பிளிசிட் ஞாபகங்கள். யார் கேட்டாலும் கொஞ்சமும் யோசிக்காமல் டக் டக் என்று சொல்வது இந்த வகை ஞாபகங்களாகும். உதாரணமாக மனைவி, குழந்தைகள், உறவினர்களின் பெயர்கள், ஒருவரின் முகவரி, அலைபேசி எண்கள், ஆதார் அட்டை மற்றும் பான்கார்டு எண்கள், அலுவலகத்தில் ஒருவருக்கு கொடுக்கப்பட்ட அடையாள எண்கள், கடைத்தெரு மற்றும் அலுவலகங்களுக்கு செல்லும் வழிகள் போன்ற ஞாபகங்கள் எக்ஸ்பிளிசிட் ஞாபக வகையைச் சார்ந்தவையாகும்.

## டெக்லேரேடிவ் ஞாபகம் (Declarative Memory)

திருமண நாளை நினைவில் வைத்துக் கொண்டு மனைவிக்கு பரிசளித்தல், குழந்தைகளின் பிறந்த நாளை நினைவில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு பரிசளித்தல், வாடகை, மின்சார கட்டணம், கடன் தவணைகள் ஆகியவைகளை செலுத்தும் தேதிகளை நினைவில் வைத்துக் கொள்ளுதல், பாஸ்போர்ட், இன்சூரன்ஸ் ஆகியவைகளை புதுப்பிக்கும் தேதிகளை நினைவில் வைத்துக்கொள்ளுதல் ஆகிய இவையாவும் டெக்லேரேடிவ் ஞாபகம் வகையைச் சார்ந்ததாகும்.

## எபிசோடிக் ஞாபகம் (Episodic Memory)

பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளில் நடந்த ஆண்டு விழாக்கள், நண்பர்களின் திருமண நிகழ்வுகள், சன்மார்க்கச் சொற்பொழிவுகள், மாநாடுகள் மற்றும் பள்ளிவாசல்களில் நடைபெற்ற பொது நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஞாபகங்கள், துக்க சம்பவங்கள் நடந்த இடங்களுக்குச் சென்று வந்த ஞாபகங்கள் ஆகிய இவையாவும் எபிசோடிக் ஞாபகம் வகையைச் சார்ந்தவையாகும்.

## செமண்டிக் ஞாபகம் (Semantic Memory)

பொது அறிவு சம்பந்தமான விஷயங்கள், சொற்கள், அவற்றின் அர்த்தங்கள், வாக்கியங்கள், பொருட்களின் பெயர்கள், ஊர்களின் பெயர்கள் போன்றவற்றை நினைவில் வைத்துக் கொள்வது செமண்டிக் ஞாபகம் வகையைச் சார்ந்தவையாகும்.

நமது ஆதி பிதாவான ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் முதன்முதலாக செமண்டிக் ஞாபகத்தைத்தான் (Semantic Memory) வழங்கினான். எல்லாப் பொருட்களின் பெயர்களையும் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கற்றுக்கொடுத்தான். அப்பொருட்களின் பெயர்களை மலக்குகளுக்கு விவரிப்பீராக என்று அல்லாஹ் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுக்குக் கட்டளையிட்ட போது, அவர்கள் அப்பெயர்களை ஞாபகத்துடன் மலக்குகளுக்கு விவரித்தார்கள். இதை அல்லாஹ் திருமறையில் கூறியிருக்கின்றான்.

"இன்னும், [இறைவன்] எல்லாப் [பொருட்களின்] பெயர்களையும் ஆதமுக்கு கற்றுக் கொடுத்தான்; பின் அவற்றை வானவர்கள் முன் எடுத்துக் காட்டி, நீங்கள் [உங்கள் கூற்றில்] உண்மையாளர்களாயிருப்பின் இவற்றின் பெயர்களை எனக்கு விவரியுங்கள்" என்றான்.

அவர்கள் "[இறைவா!] நீயே தூயவன். நீ எங்களுக்குக் கற்றுக் கொடுத்தவை தவிர எதைப் பற்றியும் எங்களுக்கு அறிவில்லை. நிச்சயமாக நீயே பேரறிவாளன்; விவேகமிக்கோன்" எனக் கூறினார்கள்.

"ஆதமே! அப்பொருட்களின் பெயர்களை அவர்களுக்கு விவரிப்பீராக! என்று [இறைவன்] சொன்னான்; அவர் அப்பெயர்களை அவர்களுக்கு விவரித்த போது "நிச்சயமாக நான் வானங்களிலும், பூமியிலும் மறைந்திருப்பவற்றை அறிவேன் என்றும், நீங்கள் வெளிப்படுத்துவதையும், நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பதையும் நான் அறிவேன் என்றும் உங்களிடம் நான் சொல்லவில்லையா?" என்று [இறைவன்] கூறினான்"

- அல்குர்ஆன் (2 : 31 - 33)

## இம்பிளிசிட் ஞாபகம் (Implicit Memory)

மூளை எப்பொழுதோ நினைவுகளில் சேர்த்து வைத்த விவரங்களை பல கால கட்டத்திற்குப்பின் திடீரென்று மனிதர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வருவதைத் தான் இம்பிளிசிட் ஞாபகம் என்றழைக்கப்படுகிறது. உதாரணமாக நாம் சிறு வயதில் பார்த்த ஒருவரை பல ஆண்டுகளுக்குப்பின் அவரை எங்கேயோ பார்க்கின்றோம்.

பல ஆண்டுகள் கடந்த கால கட்டத்தில் அவருடைய தோற்றம் முழுவதும் மாறி போயிருக்கும். இருந்தாலும் நாம் அவரை திடீரென்று பார்த்ததும் அவரின் முகம் நமக்கு ஞாபகத்திற்கு வந்து விடுகிறது. இப்படிப்பட்ட ஞாபகம் இம்பிளிசிட் ஞாபகம் வகையைச் சார்ந்ததாகும்.

## ப்ரோஸீடரல் ஞாபகம் (Procedural Memory)

ஒன்றை இயக்கக் கற்றுக் கொண்டபின் மீண்டும் அதை தவறில்லாமல் இயக்குவது, உதாரணமாக சிறுவயதில் சைக்கிள் ஓட்ட கற்றுக் கொண்டாலும் வாழ்நாள் முழுவதும் அதை ஓட்டுகின்றோம். இதைப் போல கார், மோட்டார் சைக்கிள், விமானம், ஹெலிகாப்டர், இரயில் இன்ஜின்கள், கப்பல், கணினிகள் போன்றவற்றை இயக்குவதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கற்றிருந்தாலும் எந்தக் கால கட்டத்திலும் அவற்றை நம்மால் கையாள முடியும். இதைப்போல் இயந்திரங்களை இயக்குவதற்கு எந்தக் கால கட்டத்தில் கற்றிருந்த போதிலும் வாழ்நாள் முழுக்க இயக்கும் ஞாபகத்தை மூளை

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்
அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...




எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும்,
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆ பரக்கத்தாலும்

**மதுரை – ஒத்தக்கடை மெயின் ரோடு,**
**உத்தங்குடி அருகில் உள்ள முத்தையா நகரில்**
**புதிதாக கட்டப்பட்டுள்ள**

# JFA லக்கி பேலஸ் திருமண மஹால்

இன்ஷா அல்லாஹ் மென்மேலும் வளர
துஆ செய்கிறோம்.

வஸ்ஸலாம்.

*அன்புடன்,*

**S.ஜெயினுலாபுதீன் மற்றும் உறவினர்கள்,**
மேனாள் பேராசிரியர், வக்ஃபு வாரியக் கல்லூரி,
மதுரை - 625 020.
9486468104



ஜிங்கா
பெய்ன் கேர் ஆயில் TM
ROLL - ON
Jinga TM
Pain Care Oil
ONE SOLUTION FOR ALL PAIN
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உங்கள் அருகில் உள்ள மருந்து கடைகளில் கிடைக்கும் கேட்டு வாங்குங்கள்...
Apollo HOSPITALS
MedPlus
மொத்த வலிக்கும் ஒத்த நிவாரணி SM
ஒரு சொட்டு போதும் வலி பட்டுனு போகும் SM
₹40/- மட்டுமே
Customer Care: 9962 99 4444
Missed Call: 9543006000
மாவட்ட வாரியான உதவிக்கு : • சென்னை : 7823997001, 7823997004, • பாண்டிச்சேரி - விழுப்புரம் : 7823997003, • வேலூர் - திருப்பத்தூர் : 7823997013 • மதுரை திண்டுக்கல் - காரைக்குடி : 7823997002 • சேலம் - ஒசூர் : 7823997005 • கோவை : 7823997007 • ஈரோடு - திருப்பூர் : 7823997006 • திருச்சி - தஞ்சாவூர் - புதுக்கோட்டை : 7823997015 • திருநெல்வேலி - நாகர்கோவில் : 7823997010

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதீ)

என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் – 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"



AL HUSSAM

www.alhussam.in

# AL HUSSAM
## *Travel & Tours India (P) Ltd*

*Experience makes the difference*

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்...

- அல்குர் ஆன் - 2 : 196

**யா அல்லாஹ் ! எங்களுக்கு நிறைவான செல்வத்தையும் நோயற்ற வாழ்வையும் தந்து ஹஜ்ஜை நிறைவேற்றக்கூடிய பாக்கியத்தை தந்தருள்வாயாக !... ஆமீன்**

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail:alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.

ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

தனக்குள் வைத்துக் கொள்கிறது. இப்படிப்பட்ட ஞாபகம் ப்ரோஸீடரல் ஞாபகம் வகையைச் சார்ந்ததாகும்.

## ஆடிட்டரி ஞாபகம் (Auditory Memory)

ஒலிகளை ஞாபகம் வைத்துக் கொள்வது உதாரண மாக நாம் சிறுவர்களாக பள்ளிக் கூடங்களில் படிக்கின்றபோது கரும்பலகையில் ஆசிரியர்கள் 'அ, ஆ, இ, ஈ' என்று எழுதி அந்த எழுத்துக்களை சப்தமாக வாசிப்ப துடன் மாணவர்களையும் சப்த மாக வாசிக்கச் சொன்னார்கள்.

அப்போது 'அ' என்ற எழுத்துக்கான 'அ' என்ற ஒலியை மூளை பதிவு செய்து கொள்கிறது. நாம் வாழ்நாள் முழுவதும் 'அ' என்ற எழுத்தை எந்தப் புத்தகத் தில் பார்த்தாலும் நமது மூளை 'அ' என்ற எழுத்துக்கான ஒலியை நம்முடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது.

க, ச. ட. த, ப, ற வல்லினமாம்; ங, ஞ, ண, ந, ம, ன மெல்லினமாம்; ய, ர, ல, வ, ழ, ள இடையினமாம் என்று தொடக்கப் பள்ளி ஆசிரிய, ஆசிரியைப் பெருமக்கள் சப்தம் போட்டு சொல்லி கொடுத்ததி னால் நம்மையும் சப்தம் போட்டு சொல்ல வைத்ததினால் தமிழி லுள்ள அனைத்து எழுத்துக்களுக் கான ஒலிகளை நம் மூளை பதிவு செய்து கொண்டு நம் வாழ்நாள் முழுக்க நாம் படிக்கின்ற போதெல் லாம் அந்தந்த எழுத்துக்களுக் கான ஒலிகளை நமக்கு ஞாபகப்படுத்தி நம்மைச் சிறந்த தமிழ் வல்லுனர்களாக விளங்க வைக்கும் நம் மூளையின் திறமையை என்னவென்று சொல்வது? அல்லாஹ்வின் படைப்புகளில் மனித மூளை ஓர் அதிசயம் என்று சொன்னால் அது மிகையாகாது.

தொடக்கப் பள்ளி ஆசிரிய, ஆசிரியைப் பெருமக்கள் நம் முடைய மூளை வளர்ச்சிக்கு அடிப்படை காரணமாக இருக் கின்றார்கள் என்பதை எண்ணி அவர்களுக்குக் காலமெல்லாம் நாம் நன்றி செலுத்த வேண்டும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

இதைப் போல், சிறுவர் களுக்கு அரபி அட்சரங்களை சொல்லிக் கொடுத்து அவர்களை திருமறை ஓத வைக்கும் ஆசிரிய ஆசிரியை பெருமக்கள் நம் வாழ்க்கையில் மறக்க முடியாதவர் கள் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் நமக்கு திருமறையை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

அல்லாஹ் அவர்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் நற் பெரும் நன்மைகளைப் பெரிதள வில் வழங்குவான் என்பது உறுதி யாகும்.

எந்த மொழியை நாம் கற் றாலும் அந்த மொழிகளின் எழுத்துக்களை நாம் பார்க்கும் போதெல்லாம் அந்த எழுத்துக் களுக்கான ஒலிகளை மூளை நம்முடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது.

## விசுவல் ஸ்பாஷியல் ஞாபகம் (Visual - Spatial Memory)

உருவங்களை அல்லது படங்களை ஒலியினால் ஞாபகப் படுத்தி கொள்வது, தொடக்கப் பள்ளியில் பயில்கின்ற போது அ - அணில், ஆ - ஆடு, இ - இலை, ஈ - ஈக்கள் என்று ஆசிரிய ஆசிரியை பெருமக்கள் சிறுவர்களுக்கு சொல்லி கொடுக் கும் போது அந்தந்த வார்த்தைகளுக் கேற்ற படங்களையும் காட்டி போதனை செய்கிறார்கள்.

அப்போது அந்தப் படங்களையும், அந்தப் படங்களுக்கான பெயர்களையும் மூளை பதிவு செய்து கொள்கிறது. ஆடு என்று யார் சொன்னாலும் மூளை ஆட்டின் படத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது.

இதைப் போல் ஆட்டின் படத்தைப் பார்க்கின்றபோது ஆடு என்ற வார்த்தைக்கேற்ப ஒலியையும் மூளை ஞாபகத் திற்குக் கொண்டு வருகிறது.

Brain is a bank of memories - மூளை என்பது ஞாபகங்களின் வங்கி என்று கல்வியியல் பேராசிரியை டாக்டர் ஸ்கார்லெட் எமிலியா கூறியுள்ளார். நாம் நிறைய படிக்கும்போது அந்த வங்கி நிறைந்து கொண்டே இருக்கின்றது. எப்போது நாம் படிக்கும் பழக்கத்தை விட்டு விடுகிறோமோ அப்போது மூளை என்ற வங்கி காலியாகி நம் அறிவு திவால் என்ற நிலைக்கு வந்து விடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கற்றலில் பெரு மூளை முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஏனெனில், நினைவாற்றல் மற்றும் பகுத்தறிவு போன்ற உயர் வரிசை செயல்பாடுகள் இங்கு தான் நிகழ்கின்றன. பெரு மூளையின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு செயல்பாட்டில் நிபுணத் துவம் பெற்றது. பார்வை, செவிப்புலன், பேச்சு, தொடுதல், குறுகிய கால நினைவாற்றல், நீண்டகால நினைவாற்றல், மொழி மற்றும் பகுத்தறியும் திறன் ஆகியவை கற்றலுக்கு மிக முக்கியமான அம்சங்களாகும். ஐம்புலன்களிலிருந்து வரும் உணர்வுகள் மூளையை அடைகின்றன. மூளை அவற்றை வகைப்படுத்தி உணர்ந்து கொள் கிறது. இந்த உணர்வுகள் மூளை யிலேயே தங்கியிருந்தால் அவை நினைவுகளாக மாறி விடுகின் றன. தேவை ஏற்படும்போது இந்த நினைவுகளை மூளை மீட்டெடுக்கின்றது.

மூளையின் மிகப் பெரிய பகுதியான பெருமூளை (cere brum) மூளையின் முன் புறத்தில் அமைந்துள்ளது.

மூளையின் மொத்த எடை யில் 85 சதவிகித எடை இந்தப் பெரு மூளையில் (cerebrum) அடங்கியிருக்கிறது. பெரு மூளை இரண்டு பகுதிகளாக அல்லது இரண்டு அரைக்கோளங்களாகப் (hemispheres) பிரிக்கப்பட்டுள்ளது. நமது மூளையின் இரு அரைக் கோளப் பகுதிகளும் பார்ப்பதற்கு

ஒரே மாதிரியாகத் தெரிந்தாலும், இரு பகுதி மூளைகளும் வெவ் வேறு விதமாகச் செயல்படு கின்றன. இருந்தாலும் இந்த இரு பகுதிகளும் ஒன்றிணைந்து செயல்படுகின்றன.

ஓர் அரைக்கோளப் பகுதி இடது புற மூளை (Left Brain) என்றும், இன்னொரு பகுதி வலது புற மூளை (Right Brain) என்றும் அழைக்கப்படுகின்றன. ஒவ்வோர் அரைக்கோளப் பகுதியும் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை மடல்கள் (lobes) என்று அழைக்கப் படுகின்றன. ஒவ்வொரு மடலும் வெவ்வேறு செயல்பாடுகளுக்கு பொறுப்பாகும்.

வலது அரைக்கோளம் உடலின் இடது பக்கத்தையும், இடது அரைக்கோளம் உடலின் வலது பக்கத்தையும் கட்டுப் படுத்துகிறது என்றும் மூளையின் வலது பக்கம் சேதமடைந்தால், இடது கை மற்றும் காலின் இயக்கம், இடது பார்வை மற்றும் இடது காதில் கேட்கும் திறன் ஆகியவை பாதிக்கப்படலாம் என்றும், மூளையின் இடது பக்கத்தில் காயம் ஏற்பட்டால் உடலின் வலது பக்கத்தில் பேச்சு மற்றும் இயக்கத்தை பாதிக்கிறது என்றும் நார்த் ஈஸ்டெர்ன் பல் கலைக்கழக மருத்துவ ஆய்வுக் குழுவினர் ஒரு மருத்துவ ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டுள்ளனர்.

இடது புற மூளை (Left Brain) டிஜிட்டல் (Digital Brain) மூளை என்றும் அழைக்கப்படுகிறது. ஒருவரைக் கல்வியாளராக உரு வாக்குவது இடது புற மூளை தான் கணிதம் மற்றும் விஞ்ஞானத் தில் நிபுணத்துவமடைய இடது புற மூளை உதவுகிறது. நடந்து செல்லுதல் போன்ற பெரிய தசைகளின் இயக்கத்திற்கு இது காரணமாக இருக்கிறது. மகிழ்ச்சி, பெருமை, சந்தோஷம், கோபம் போன்ற உணர்ச்சிகளுக்கும் இதுவே காரணமாக இருக்கிறது. நோய் எதிர்ப்பு மண்டலத்தை (immune system) கட்டுப்படுத்து வதும், செரிமானம், இதயத் துடிப்பு மற்றும் சுவாசம் போன்ற தன்னிச்சையான உடல் செயல் பாடுகளுக்கும் இடது புற மூளை பொறுப்பேற்கிறது.

நுணுக்கமான விவரங்களில் கவனம் செலுத்துவதற்கும், ஒலி களை மொழியாக மாற்றி அத னுடைய அர்த்தத்தை விளங்கிக் கொள்வதற்கும் இடது புற மூளை தேவைப்படுகிறது.

இடது புற மூளை பலத்தால் இவர்கள் பெரும்பாலும் திட்ட மிட்டு வேலை செய்பவர்களாக இருப்பார்கள்.

வழக்கறிஞர்கள், பொருளா தார நிபுணர்கள், மொழிகளில் பாண்டித்யம் பெற்றவர்கள், இஞ்ஜினியர்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சி ஆய்வாளர்கள், அறுவை சிகிச்சை வல்லுநர்கள், கணினி புரோகிராமர்கள், கணக் காளர்கள், வணிக ஆய்வாளர்கள்,

நிருபர்கள், கணினி நெட்வொர்க் நிர்வாகிகள், சொற்பொழிவாளர்கள், கற்பனை இல்லாமல் எழுதும் பத்திரிகையாளர்கள் ஆகியோர் இடது புற மூளை பலம் பெற்றவர்களாக இருப்பார்கள்.

ஆயக் கலைகள் 64 என்று தமிழில் கூறுவது போல் கலைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் வலது புற மூளை (Right Brain) பலம் பெற்றவர்கள் என்று கூறலாம். ஓவியர்கள், இசை, நாடக, நடனக் கலைஞர்கள், சிற்பிகள், மனோ தத்துவ வல்லுநர்கள், கதை எழுதும் எழுத்தாளர்கள், பாடகர்கள், விளையாட்டு வீரர்கள், கற்பனை வளம் நிறைந்தவர்கள், கட்டடக்கலை வல்லுநர்கள் (Architects) ஆகியோர் வலது புற மூளை (Right Brain) பலம் பெற்றவர்களாக இருப்பார்கள்.

பயம், வெறுப்பு ஆகிய உணர்ச்சிகளுக்கு வலது புற மூளை பொறுப்பேற்கிறது. வலது புற மூளை பாதிக்கப்பட்டவர்களால் இடது பக்கத்தில் இருப்பவர்களை அல்லது இருப்பவையைப் பார்ப்பதற்கு சிரமப்படுவார்கள். முன்பு தெரிந்து கொண்ட புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதிலும் சிரமப்படுவார்கள். விஷயங்களை ஞாபகப்படுத்திக் கொள்வதிலும், விஷயங்களைக் கோர்வையாக சொல்வதற்குத் திணறுவார்கள். திட்டமிட்டு செயல்பட இயலாதவர்களாக இருப்பார்கள். பிரச்சனைகள் என்னவென்று புரிய முடியாமல் தவிப்பார்கள். தேதி, நேரம் அல்லது எங்கு இருக்கிறார்கள் என்பதை அறிவதில் சிரமப்படுவார்கள்.

பெண்களின் மூளையை விட ஆண்களின் மூளை 10 சதவிகிதம் பெரியதாக உள்ளது. இதனால் ஆண்கள் பெண்களை விட அறிவாளிகள் என்று சொல்ல முடியாது.

மூளையின் அளவுக்கும், அறிவுக்கும் சம்பந்தம் கிடையாது. உலகத்திலேயே பெரிய மூளை விந்து திமிங்கலத்திற்கு (The Sperm whale) இருக்கிறது. இதனுடைய மூளையின் எடை ஏறத்தாழ 8 கிலோ. யானை மூளையின் எடை ஏறத்தாழ 5 கிலோ.

ஆகவே, மனிதர்களை விட திமிங்கலத்திற்கும், யானைக்கும் அறிவு அதிகம் என்று சொல்ல முடியுமா?

அல்லாஹ் நமக்கு பெரும் கொடையாக கொடுத்திருக்கும் மூளை எனும் உறுப்பை நாம் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். பாதுகாக்கும் முறைகளைத் தெரிந்து கொள்வோம்.

## அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும்

மனிதர்களைத் தவிர்த்து மற்ற உயிரினங்கள் எல்லாமே இயற்கைக்கேற்றபடியான முறைப்படுத்துதல்களோடு

## பேராசையின் வாலிபம்!

"மனிதன் வயோதிகம் அடைகிறான். அவனிலிருந்து இரண்டு வாலிபம் அடைகிறது. ஒன்று : பொருளின் மீது பேராசை. இரண்டு : வாழ்நாளின் மீது பேராசை" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் ( நூல் : புகாரி, முஸ்லிம், மிஷ்காத் பக்கம் – 449)


Successful indeed are the Believers

A.R.M

CEMENT KING

www.armsons.in

சிக்கனமான விலையில் சிமெண்ட், கம்பி வாங்கிட

தமிழகத்தின் Ist 24 மணி நேர சிமெண்ட் கடை

A.R.M Sons

The Cement & Steel Market

வடக்கு ராஜ வீதி
புதுக்கோட்டை.
7373798900
7373798930
04322-221649

ஏர்போர்ட் ரோடு
திருச்சி.
7373798944
7373798942
armsonstrichy@gmail.com

ECR.
கோட்டைப்பட்டிணம்.
7373798911, 7373798912
04371-260260 armsonskpm@gmail.com

நகர் முழுவதும் 10 மூட்டைக்கும், மாவட்டம் முழுவதும் 50 மூட்டைக்கும் சிமெண்ட் இலவச டோர் டெலிவரி

வாழ்கின்றன. சில பறவை யினங்கள் அதிகாலை 3 மணிக்கு எழுந்து விடும். காகம், குயில், குருவி போன்ற பறவையினங்கள் 4 மணிக்கு எழுந்து விடும். பொது வாக அனைத்து உயிரினங்களும் அதிகாலை 3 - 5 மணிக்குள் எழ வேண்டும் என்பதுதான் முறை. ஆகவே தான், அவை ஆரோக்கியமாக இருக்கின்றன.

காலை வேளையில் இதயம் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பிக் கும். அவ்வேளையில் மூளைக்கு வேகமாக இரத்தம் தேவைப்படும்.

அதற்கு ஈடு கொடுக்க நாம் பூமிக்கு செங்குத்தான நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் பூமிக்கு சமாந்தரமாக அதாவது படுத்த நிலையிலிருந்தால் நம் மூளை பாதிப்பிற்குள்ளாகும். இதனைத் தவிர்க்க அதிகாலையிலே விழித்து எழ வேண்டும் என்று 1150 ஆண்டுகளுக்கு முன் பாரசீக நாட்டில் பிறந்த முஹம்மது இப்னு ஜக்கரிய்யா அல்-ராஸி என்ற மருத்துவ வல்லுநர் கூறி யிருக்கிறார். ஆகவே, நாம் சுப்ஹு தொழுகைக்கு எழுந்து தொழுகையை முடித்து விட்டு நம்முடைய அன்றாட காரியங் களை ஆரம்பிப்பது நம் ஆரோக் கியத்திற்கு மிகவும் நல்லதாகும்.

ஹள்ரத் ஈஸா (அலை) அவர் கள் சுப்ஹு தொழுகையைத் தொழுததாக அவர்களுடைய எழுபது சீடர்களுள் ஒருவரான மாற்கு (நற்செய்தியாளர்) என்பவர் அவர் எழுதியுள்ள மார்க் சுவிசேஷம் (Gospel of Mark) என்ற கிரந்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**“விடியற்காலையில், இருட் பாக இருந்த போதே, இயேசு [ஹள்ரத் ஈஸா [அலை] எழுந்து வீட்டை விட்டு வெளியேறி, ஒரு தனிமை யான இடத்திற்குச் சென்றார். அங்கு அவர் கடவுளைப் பிரார்த்தித்தார்”**
(மாற்கு 1 : 35)

ஆகவே அதிகாலையில் எழுந்து இறைவனை வழிபடுவது ஒரு சிறந்த பழக்கமாகும். அதி காலையில் எழுந்திருப்பவர்களின் மூளை அதிக விழிப்புணர்ச்சி யுடன் இருக்கும். அதிக நேரத்தில் செய்யும் வேலைகளை அவர்கள் குறைந்த நேரத்தில் நிறைவேற்றி விடுவார்கள். சிறந்த முடிவுகளை எடுப்பதிலும், திட்டமிடுவதிலும்,

## இணை வைக்காதே!

“அல்லாஹ்விடம் எந்தப் பாவம் மிகப் பெரியது?” என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், “அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க, அவனுக்கு நீ இணை வைப்பது தான் (பெரும் பாவம்)” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள்

நூல் : புஹாரி (4761)

இலக்குகளை அடைவதிலும் மிகவும் திறமையானவர்களாக இருப்பார்கள். மேலும் கல்வியில் மேன்மையடைந்த பெரும் மேதைகள் அனைவரும் அதிகாலையில் எழுந்து படித்த வர்கள் என்று டாக்டர் தியோடோர் கிரேசன் என்ற மன நல மருத்துவ நிபுணர் கூறியிருக்கிறார்.

டெக்சாஸ் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் அதிகாலை யில் எழுந்து படித்த மாணவர்கள் மற்ற மாணவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றார்கள் என்பது தெரிய வந்தது.

அதிகாலையில் எழுந்து படிப்பவர்களுக்கு கவனக் குறைவு ஏற்படுவதில்லை என்று பர்மிங் ஹாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனித மூளை ஆரோக்கிய மையத்தின் இயக்குனர் டாக்டர் எலைஸ் ஃபேசர் என்பவர் கூறி யுள்ளார். அதிகாலையில் மூளை நரம்பு இயக்கங்கள் சீராகச் செயல் படும். மூளை அணுக்கள் சுறுசுறுப் படையும். நினைவுத்திறன் அதிகரிக்கும்.

அதிகாலையில் எழுந்தி ருப்பவர்கள் மற்றவர்களை விட அதிகமாக மனச் சோர்வு (Stress) அடைவதில்லை என்று உள வியல் நிபுணர் டாக்டர் கூப்பர் ஆன்ரியான் கூறியுள்ளார்.

(தொடரும்)


# மணமகன், மணமகள் தேவை

**M.B.B.S., M.D., M.S.,** முடித்து பணிபுரியும் **டாக்டர் மணமகன்கள்/டாக்டர் மணமகள்கள் தேவை.**

**B.D.S., M.D.S.,** முடித்து பணிபுரியும் **டாக்டர் மணமகன்கள்/டாக்டர் மணமகள்கள் தேவை.**

**Software Engineering** முடித்து பெங்களூரு, சென்னை யில் பணிபுரியும் **மணமகன்கள்/மணமகள்கள் தேவை.**

தொடர்பு கொள்ள :

**எம். இப்ராஹீம்,**

**ஜம்ஜம் திருமண அமைப்பாளர்,**

**44, வன்னியர் வீதி, பெரிய அக்ரஹாரம் (P.o.), ஈரோடு-5.**

**செல்: 9965079835**

# வரலாற்றில் ஓர் ஏடு

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

"ஒரு குழந்தை தன் தாயாரிடம் பால்குடித்துக் கொண்டிருந்தது. அப்போது அங்கு அழகிய, விலையுயர்ந்த வாகனத்தில் ஒருவர் சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த தாயார் "இறைவா! இவரைப்போன்று என் மகனை ஆக்கு" என்று வேண்டினார். மார்பகத்தை விட்டு (வாயை) எடுத்த அந்தக் குழந்தை, "இறைவா! இவரைப்போல் என்னை ஆக்கிவிடாதே!" என்றது.

அடுத்து ஓர் அடிமைப்பெண்ணை சிலர் "நீ விபச்சாரம் செய்தாய், நீ திருடினாய்" என்று சொல்லி அடித்துக் கொண்டே சென்றனர். அப்பெண்ணோ, "அல்லாஹ் போதுமானவன், அவனே பாதுகாப்பதில் வல்லவன்" என்று கூறினாள். அப்போது அந்தக் குழந்தையின் தாயார், "இறைவா, இவளைப்போல் என் மகனை ஆக்கிவிடாதே" என்று கூறினார். பால் குடித்ததை விட்ட அக்குழந்தை அவளின் பக்கம் பார்த்து, "இறைவா! இவளைப் போல் என்னை ஆக்கு" என்று கூறியது.

பின்னர் தாயும் மகனும் பேசினர் "(மகனே!) நல்ல தோற்றமுடைய ஒருவர் சென்றார். அப்போது நான், இறைவா! இவரைப் போல் என் மகனை ஆக்கு! என்றேன். ஆனால் நீயோ, 'இறைவா! இவரைப் போல் என்னை ஆக்காதே!' என்றாய். மேலும் ஓர் அடிமைப் பெண்ணை, அவள் விபச்சாரி, திருடி எனக் கூறிக் கொண்டே சிலர் அடித்தவாறு சென்றனர். 'இறைவா! இவரைப்போல என் மகனை ஆக்கி விடாதே' என்று கூறினேன். நீயோ, 'இறைவா! அவளைப் போல் என்னை ஆக்கிவிடு!' என்று ஏன் கூறினாய்?" என்று அந்தக் குழந்தையின் தாய் கேட்டார்.

"(அம்மா!) அந்த மனிதர் (மக்களை) அடக்கி ஆள்பவர். எனவேதான் நான், 'இறைவா! என்னை அவரைப்போல் ஆக்கிவிடாதே' என்றேன். இந்தப் பெண்ணை அவர்கள், அவள் விபச்சாரம் செய்யாதிருந்தும், அவளை விபச்சாரி என்று கூறினர். அவள் திருடாமல் இருந்தும், திருடி என்றனர். எனவேதான் நான், 'இறைவா! அவளைப்போல் என்னை நீ ஆக்கு' என்று கூறினேன்" என்று குழந்தை கூறியது.

ஆதாரம் : ரியாளுஸ்ஸாலிஹீன் ஹதீஸ் எண் 259, புகாரி 3436

தருபவர் : **ப.பீர் இலாஹி** B.Sc., உத்தமபாளையம்

# இறைமறை அறிய இறைத்தூதர் அவசியமே!

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்**

மனிதருக்கு இறைவன் வழங்கிய அருள்களில் இறைத் தூதர்களை அனுப்பி வழிகாட்டியது மகத்தான பேரருளாகும். இறைத்தூதர்கள் அனைவரும் மனிதர்களாகவே மண்ணில் பிறந்து வளர்ந்து இறைநெறியை மனிதர்களுக்குக் காட்டினர். அவர்களில் எவரும் தம்மைக் கடவுளாகவோ, கடவுளின் அவதாரமாகவோ, இறைவனின் மகனாகவோ கூறவே இல்லை. கூறவும் முடியாது. ஏனெனில் இவர்கள் இறைவனின் தூதராகவே வந்தவர்கள். சொந்தபந்தமென்று இறைவனுக்கு எவருமில்லை.

எதை மனிதர்களிடம் அறிவிக்குமாறு இறைவன் கட்டளையிட்டானோ அதை மட்டுமே அறிவித்தார்கள். இறைத்தூதுத்துவம் (நுபுவ்வத்-ரிஸாலத்) என்பது முயன்று உழைத்துப் பெறும் பதவியோ அல்லது மக்களின் செல்வாக்கு ஆதரவின் மூலம் அடைந்திடும் தகுதியோ அல்ல. அது எல்லாம்வல்ல இறைவன் விரும்பித் தேர்ந்தெடுத்துத் தந்ததாகும். எவருக்கு இறைவன் நாடினானோ அவருக்கு மட்டுமே கொடுத்தான். அவனது பார்வையில் பணம், பதவி, படிப்பு, அந்தஸ்து, செல்வாக்கு எதுவும் இருக்காது. எதுமில்லாத ஏழைக்குக் கூட இந்தப் பதவியைத் தந்திருக்கின்றான். எழுத்தறிவற்றவருக்கும் இதை வழங்கி இருக்கின்றான். அறிமுகமில்லாத எளியவருக்கும் இதை அளித்துள்ளான். இறைத் தூதருக்கு நான்கு அம்சங்கள் அவசியமானவையாகும். 1. உண்மை பேசுதல். எப்போதும் அவர் உண்மையே பேச வேண்டும். 2. கூரிய அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும். நுண்ணறிவும், ஆழ்ந்த நோக்கும், தெளிந்த சிந்தனையும் உள்ளவராக இருத்தல் வேண்டும். 3. நம்பிக்கைக்குரிய அடைக்கலம் காப்போராக இருத்தல். இறைச்செய்திகளை ஒளிக்காமல் மறைக்காமல் உரைப்போராக இருத்தல். 4. இறை அறிவிப்புகளை மக்களிடம் சேர்த்தல். இறைநெறி அழைப்புப் பணி செய்தல். கடமை உணர்வுடன் அக்கறை செலுத்தி மக்களிடம் முன்வைத்தல். இது அஞ்சல்காரர் கொடுப்பது போலல்ல.

இறைத்தூதர்களின் பணி, தபால்காரர்களின் சேவை போன்ற தல்ல. பொதுவாக தபால்காரர்கள் கடிதங்களைக் கொடுத்துவிட்டு, போட்டு விட்டு, எறிந்துவிட்டுப் போய் விடுகின்றார்கள். அத்தோடு அவர்களின் பணி முடிந்து விடு கின்றது. மற்றபடி கடித உறையுள் என்ன இருக்கிறது? உள்ளே இருக்கும் செய்தி என்ன? என்ப தெல்லாம் அவர்களுக்குத் தெரி யாது. அது அவர்களின் வேலை யுமல்ல. அது அவர்களுக்கு அவசியமுமல்ல. ஆனால் இறைத் தூதர்கள் அப்படியல்ல, இறை வனால் அறிவிக்கப்பட்ட வேத வசனங்களை ஓதிக்காட்டி விளக்கிக் கூறிச் செயல்வடிவில் முன்மாதிரியாகத் திகழ்ந்து வழி காட்டினார்கள்.

இவ்வாறான இறைத்தூதர் களின் தொடரில் உறுதியாக வந்தவர்கள்தான் அகில மக்களின் அருட்கொடை அண்ணல் முஹம்மத் நபி (ஸல்) ஆவார்கள். இறைத்தூதர்களின் தொடரை நிறைவாக்க வந்தவரும் இவர்கள் தான். இவர்களோடு தூதர்களின் தொடர் முற்றுப் பெற்று விட்டது. தூதர்களை அனுப்பிய இறைவனே, தனது வேதத்திருமறை அல் குர்ஆனில் இதை உறுதிப்படுத்தி விட்டான். "முஹம்மத்" இறைத் தூதர்களின் தொடரில் இறுதி யானவர் (காதமுன்னபிய்யீன்).

"உறுதியாக உங்கள் இறை வனிடமிருந்து ஒளியும், தெளி வான திருவேதமும் வந்து விட் டன" என்று இறைமறை இயம்பு கின்றது. இவ்வசனத்தில் ஒளி (நூர்) என இறைவன் குறிப்பிடு வது அண்ணல் நபி (ஸல்) அவர்களைத்தான் என அருள் மறையில் விரிவுரையாளர் இப்னு அப்பாஸ் (ரளி) கூறுகின் றார்கள். "இறைவனின் அனுமதி கொண்டு வழிகாட்டும் மணி விளக்காக (ஸிராஜும்முனீரா) இருக்கின்றீர்கள்" என இறை மறையின் மற்றொரு வசனம் வள்ளல் நபியை வருணிக்கும்.

இறைமறையைக் கற்றுத் தருபவராகவும், தெளிந்த ஞான விளக்கத்தை (அல்ஹிக்மா) வழங்குகின்றவராகவும் அண்ணலை இறைவன் அமைத் தான். இறைமறையில் இடம் பெற்றுள்ள "அல்ஹிக்மா" என்பது அண்ணல் நபிகளார் வழங்கிய அமுத மொழிகளும், இது இனிய வழிகாட்டுதலுமாகும். அல்ஹதீஸ் எனக் குறிக்கப்பெறுகின்றது. இஸ்லாம் எனும் இறைநெறியின் அடித்தளங்களாக அல்லாஹ் வின் அருள்மறை அல்குர்ஆனும், அண்ணல் நபிகளாரின் அறி வார்ந்த விளக்கமாம் அல் ஹதீஸும் அமைந்திருக்கின்றன. இவை யிரண்டுமே இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களாகும்.

ஒரு புத்தகத்தைப் படிக்க நூலை வாசிக்க வெளிச்சம் அவசியமாகும். வெளிச்சமின்றி

நூலை வாசிப்பது முடியாத ஒன்றாகும். அல்குர்ஆன் எனும் அறிவுஞானப் பேழையான இறைவேதப் புத்தகத்தைத் தெளிவாகப் படிக்க அல்ஹதீஸ் எனும் வெளிச்சம் அவசியத்திலும் அவசியமாகும். ஏனெனில் அருள் மறையின் பல திருவசனங் களுக்கு அண்ணலின் வாழ்வும், வாக்குமே தெளிவான - எளிய விளக்கங்களாக அமைந்திருக் கின்றன. அருள்மறை என்ற இலக்கணத்துக்கு அண்ணலின் பெரு வாழ்வு இலக்கியமாகவே அமைந்திருந்தது.

அண்ணலின் அன்பினிற் கினிய வாழ்க்கைத் துணைவி, அறிவின் செல்வி அன்னை ஆயிஷா (ரளி) அவர்களிடம், "அண்ணலின் பண்புநிறை வாழ்வு எவ்வாறு இருந்தது?" எனக் கேட்டபோது, "அவர்களின் திருவாழ்வு குர்ஆனாகவே இருந்தது" எனக் கூறினார்கள்.

இறைமறையை விளங்கு வதற்கு இறைத்தூதரின் விளக்கம் அவசியமாகும்.

'வஹீ' எனும் இறைச் செய்தி இறைத்தூதருக்கு இருவழிகளில் வந்தது. ஒன்று வானவர் தலை வர் ஜிப்ரீல் வாயிலாக இறைவன் அருளினான். மற்றொன்று அண்ணலின் உள்ளுணர்வில் நேரடியாக உதிக்கச் செய்தான். (இல்ஹாம்) இறைத்தூதர் இதையே பேசினார்கள். மார்க்கம் பற்றிப் பேசும்போது "தன் சுய விருப்பப்படி அந்தத் தூதர் பேச மாட்டார். இறைவனது அறிவிப் பின் அடிப்படையிலேயே பேசுவார்" என்கிறது குர்ஆன்.

தொழுகையை நிலை நிறுத்துங்கள் எனத் திருகுர்ஆனின் பல வசனங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. தொழுகையை எவ்வாறு துவக்க வேண்டும்? என்னென்ன ஓத வேண்டும்? நிலை நிற்றல், குனிதல், பணிதல், அமர்தல் எவ்வாறு இருக்க வேண்டும்? அந்த அம்சங்களில் என்னென்ன மொழிய வேண்டும்? எவ்வாறு தொழுகையை நிறைவு செய்ய வேண்டும்? போன்றவற்றுக்கான எல்லா விளக்கங்களும் அண்ணல் நபிகளாரின் மொழியிலும், வழி யிலுமே அறிய முடிகின்றது. அவர் களின் அமுதமொழி அவசியப்படு கின்றது.

"ஸகாத் (செல்வம் படைத் தோர் ஏழைகளுக்குக் கட்டாயம் கொடுக்க வேண்டிய வரி) கொடுங் கள்" என குர்ஆன் பலவசனங் களில் வலியுறுத்துகின்றது. எந்த அளவு பொருள் இருந்தால் கடமை? எந்தெந்தப் பொருட் களில் கடமை? எப்போது கடமை? போன்ற அனைத்து விபரங்களும் அண்ணல் நபி (ஸல்) அவர் களது பொன்மொழிகள் வழி யாகவே நம்மவர்களுக்குக் கிடைக்கின்றன.

## அண்ணலின் அமுத மொழி அறிவுடையோருக்குப் பேரொளி

ரமளான் மாதம் முழுவதும் நோன்பிருப்பது கட்டாயக் கடமை என குர்ஆன் கூறுகின்றது. அந்த நோன்பை எவ்வாறு துவங்க வேண்டும்? எவ்வாறு துறக்க வேண்டும்? நோன்பிருக்கும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்? எவற்றைச் செய்யலாம்? எவற்றைச் செய்யக்கூடாது? நோன்பைப் புனிதமாகப் பேணுவது எவ்வாறு? எந்தெந்தக் காரணங்களால் நோன்பு முறிந்து விடும்? போன்ற வினாக்களுக்கு எல்லா விளக்கங் களும் இறைத்தூதரின் திருவாழ் விலிருந்தும் அமுத மொழியிலி ருந்தும் (அல்ஹதீஸ்) இறை நம்பிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்றது.

“வசதியும் சக்தியும் உள் ளோர் இறைவனின் புனித முதல் ஆலயமான “கஃபத்துல்லாஹ்” சென்று ஹஜ்ஜு செய்வது கட்டாயக் கடமை” என்று இறை மறை அல்குர்ஆன் கட்டளையிடு கின்றது. ஹஜ்ஜுஎன்பது என்ன? அதுஎவ்வாறு அமைய வேண்டும்? அதற்கு முன் அணிகின்ற இஹ்ராம் ஆடை எப்படியிருக்க வேண்டும்? யார் யார் எங்கெங்கு இஹ்ராம் கட்ட வேண்டும்? “கஅபா” எனும் உலகின் முதல் இறைப் பள்ளியை எவ்வாறு சுற்றி வலம் (தவாஃப்) வர வேண்டும்? எத்தனை முறை சுற்ற வேண்டும்? ஹஜ்ஜு கிரியை ஆற்றுவோர் அடுத் தடுத்து என்ன செய்ய வேண்டும்? போன்ற அனைத்து அம்ச விளக்க மும் அண்ணல் நபிகளாரின் வாய்மொழியிலும், வாழ்விய லிலுமே கிடைக்கின்றது.

இவையனைத்தும் இறைநெறியாம் இஸ்லாத்தின் கடமைகளாகும் (ஃபர்ளு) கலிமா எனும் ஏகத்துவ இறை நம்பிக் கையை உளப்பூர்வமாக உண்மை யாக ஏற்றுக் கொண்ட ஒருவர் அவசியம் தினமும் ஐவேளை இறைவனை முறையாகத் தொழ வேண்டும். பொருளாதார வசதியிருப்பின் ஒவ்வோர் ஆண்டும் இரண்டரை சதவீதம் ஸகாத் வழங்க வேண்டும். ரமளான் மாதம் முழுவதும் நோன்பிருக்க வேண்டும். பண வசதியும் பயண வசதியும், உடல் நலமும் இருப்பின் வாழ்நாளில் ஒருமுறை மக்கா சென்று புனித ஹஜ்ஜை நிறைவேற்ற வேண் டும். இவையனைத்துக்கான தெளிவான விளக்கம் அருள் நபியின் திருவாழ்விலிருந்து பெறப்பட்டிருக்கின்றது.

இவையல்லாமல் மனித வாழ்விற்கான அனைத்துத் துறை களுக்கும் எல்லா மாந்தருக்கும் வழிகாட்டத்தக்க எண்ணற்ற வழிகாட்டல்கள் இறைத்தூதரிடமி ருந்தே கிடைத்திருக்கின்றன. எல்லாம் வல்ல இறைவன் அண் ணல் நபிகளாருக்கு வழங்கியி ருக்கும் உரிமைகள் உன்னத மானவை. இதற்கு முன்

# அனைவருக்கும் ஒரு நற்செய்தி!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

இந்தியக் குடிமகன் என்பதற்கு அடையாளமாக அரசாங்கம் நமக்குத் தந்துள்ள ஆதார் கார்டு, பான் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, பாஸ்போர்ட் போன்ற பல ஆவணங்களைப் பெறுவதற்கு தேவையில்லாமல் மற்றவர்களிடம் பணங்களைச் செலவு செய்து அலைந்து கொண்டிருக்கும் நம் சமுதாய மக்களுக்கு எந்தவித சர்வீஸ் சார்ஜூம் இல்லாமல், நாம் வீட்டிலிருந்தே அவற்றை பெற்றுக் கொள்ளும்வண்ணம் இலவசமாக (அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக) நமது சகோதரர் **முஹம்மது இஸ்மாயீல்** அவர்கள் செய்கிறார்கள். எனவே அரசாங்க ஆவணங்கள் தேவையுள்ளவர்கள் இவரைத் தொடர்பு கொண்டால் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம். இன்ஷா அல்லாஹ்...

உங்களுக்குத் தெரிந்த மற்ற நமது சகோதரர்களுக்கும் இச்செய்தியை எத்தி வையுங்கள். உங்களுக்கும் நன்மை கிடைக்கும்.

தொடர்புக்கு :

**முஹம்மது இஸ்மாயீல்** அலைபேசி எண் : **9176979180**

---


இன்பமான இனிய இல்லறத்திற்கு

பக்க விளைவுகள் கிடையாது

# ஜிங்கா கோல்டு™

CERTIFIED ISO 9001:2008 COMPANY

ஆண்களின் சக்திக்கு
மூலிகை மந்திரம்

CERTIFIED ISO 9001:2008 COMPANY

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**Customer Care - 9962664444**

www.jingagold.com info@jingagold.com

எவருக்கும் அவன் வழங்கி இராதவை. இவ்வுலகின் நிறைவான இறுதித் தூதரல்லவா?

**"[நமது தூதரான] இவர் நன்மை செய்யுமாறு மக்களை ஏவுகின்றார். தீமைகளிலிருந்து அவர்களைத் தடுக்கின்றார். மேலும், அவர்களுக்குத் தூய்மை யானவற்றை ஆகுமாக்குகின் றார். தூய்மையில்லாதவற்றைத் தடை செய்கின்றார். மேலும், அவர் களின் மீதுள்ள சுமையை இறக்கு கின்றார். அவர்களைப் பிணைத் திருந்த விலங்குகளையும் உடைத் தெறிகின்றார். எனவே எவர்கள் இந்தத் தூதர் [நபி] மீது நம்பிக் கைக் கொண்டு இவரைக் கண் ணியப்படுத்தி உதவியும் புரிகின் றார்களோ, மேலும் இவருடன் இறக்கியருளப்பட் [குர்ஆன் என்ற இந்த] ஒளியைப் பின்பற்று கின்றார்களோ அவர்களே வெற்றியாளர்களாவர்.**

-அல்குர்ஆன் (7 : 157)

இறைமறையின் இத்திரு வசனம் இறைத்தூதருக்கு வழங்கப் பட்டிருக்கும் சட்டம் இயற்றும் உரிமையையும், அழைப்புப் பணி யில் வழங்கப்பட்டிருக்கும் அகன்ற அதிகாரத்தையும் பரந்த அளவி லான நபித்துவப் பதவியின் தகுதி யையும் தெளிவாகக் கூறுகின்றது.

**"உங்கள் மீது இறைவன் இறக்கியிருக்கும் வேதத்தை யும், ஞானத்தையும் [அல்ஹிக்மா] கண்ணியப்படுத்துங்கள்" என உங்களுக்கு அந்த இறைவன் நற்போதனை புரிகின்றான்"**

- அல்குர்ஆன் (2 : 231)

"ஹிக்மா" என இறைமறை குறிப்பிடுவது இறைத் தூதர் அண்ணல் நபிகளின் தெளிந்த நெறியாகிய அல்ஹதீஸ் (ஸுன் னாவாகும்) நபி வழியாகும். நபிகளாரின் நன்மொழிகளையும் கண்ணியப்படுத்த வேண்டும் என இறைவன் கட்டளையிடு கின்றான்.

இறைத்தூதருக்கு இறை வன் இருவகையான ஞானங் களை வழங்கினான். ஒன்று : அல்குர்ஆன்; மற்றொன்று : அல்ஹிக்மா (அல்ஹதீஸ்) முன் னதுக்குப் பின்னது விளக்கமா கவும், விரிவுரையாகவும் அமைந் துள்ளது. இவையிரண்டும் மனித குலத்துக்குப் பயன்தரத் தக்கவையாகும். அண்ணலின் அமுத மொழிகளையும் நினைவில் வைக்குமாறு இறைவன் உத்தர விடுகின்றான். நீதர் நபி நிறை வான வழிகாட்டியல்லவா?

**"உங்கள் இல்லங்களில் ஓதப் படும் இறை வசனங்களையும், தெளிந்த ஞானத்தையும் [அல் ஹிக்மா] நினைவில் வையுங் கள். நிச்சயமாக இறைவன் நுண் ணறிவாளனாகவும், யாவற்றை யும் நன்கு அறிந்தவனாகவும் இருக்கின்றான்"**

- அல்குர்ஆன் (33 : 34)

"திருகுர்ஆனும், அதனோடு இணைந்த அதனையொத்த

ஒன்றும் எனக்கு அருளப்பட்டது" என அண்ணல் நபிகளார் ஒரு முறை கூறினார்கள். இறை மறை அல்குர்ஆனை இறைவன், பலகைகளில் பதித்து, மலையிலோ, மண்ணகத்தின் ஓரிடத்திலோ மொத்தமாக இறக்கிடவில்லை. அல்லது பெரிய புத்தகமாகத் தந்துவிடவுமில்லை. தனது திருத்தூதருக்குச் சிறுகச் சிறுக இறக்கினான். மக்களுக்கு விளக்கிக் கூறும் பொறுப்பையும் வழங்கினான். இறையறிவிப்பின் (வஹீ) வருகை அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கே தெரிந்தது. அவர்கள் அறிவித்துத்தான் பின்னர் மக்களுக்குத் தெரிய வந்தது.

இறைவனின் நம்பிக்கைக்குரிய உண்மையாளராக உத்தமத் திருநபி (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள். "இறைவனுக்கும், இறைத்தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்" என இறைமறை இயம்புகின்றது. "[முஹம்மதே] **மக்களுக்கு மார்க்க நெறியை விளக்கிக் கூறும் தூதராக உம்மை நாம் அனுப்பினோம். மேலும் இதற்கு அல்லாஹ்வின் சாட்சியே போதுமானது. யார் அல்லாஹ்வின் தூதருக்குக் கீழ்ப்படிகின்றாரோ அவர் உண்மையில் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிபவராவார்**" (அல் குர்ஆன் - 4 : 80)

"இறைத்தூதருக்குக் கட்டுப்படுவது இறைவனுக்குக் கட்டுப்பட்டதுபோல்" என்கின்றது இத்திருவசனம். ஆம். உண்மை தான்; இறைத்தூதர் காட்டிய நெறி இறைவன் அறிவித்த நெறிதானே! "**இறைவனும், இறைத்தூதரும் ஒரு விவகாரத்தில் கட்டளையிட்ட பின்னர் அவ்விவகாரத்தில் அதற்கு மாறாக வேறு கருத்துக் கொள்வதற்கு இறைநம்பிக்கை கொண்டுள்ள எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிமையில்லை. மேலும், எவன் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் மாறு செய்கின்றானோ அவன் வெளிப்படையான வழிகேட்டில் விழுந்து விட்டான்**" (அல்குர்ஆன் - 33 : 36)

கட்டளையிடவும், தீர்ப்பு வழங்கவும் இறைத்தூதருக்கு முழுமையான அதிகாரமுண்டு. இந்த அதிகாரத்தை எல்லாம் வல்ல இறைவனே அவர்களுக்கு வழங்கியுள்ளான். காரணம் : மனிதர்களுக்கு நேரடியாக வழிகாட்டும் பொறுப்பு நபிகளாரிடம் தரப்பட்டது. இறைவனே நேரில் வந்து வழிகாட்டுவது முரணானது. இறைத்தகுதிக்கு ஒவ்வாதது. கடவுள் அவதாரக் கற்பனைப் பொய்மையை இஸ்லாம் ஏற்பதில்லை. இறைத்தூதராகப் பின்பற்றும்படி இறைமறை கட்டளையிடுகிறது.

**குர்ஆனின் குரல்**
எமது புதிய தபால் பெட்டி எண் : **45**,
மேலமடை, **மதுரை-625020.**

## கொள்கையில் ஒன்று பட்டோரே வாழ்க்கையில் ஒன்றுபட முடியும்

இறைவனின் அறிவிப்பு, கட்டளை - சட்டங்களை அண்ணல் நபிகளார் மக்களிடையே எடுத்துரைத்துச் செவ்வனே செயலாற்றினார்கள். துளியும் சுயநலம் கலவாத இறைச் சட்டத்திற்கேற்ப மக்கள் தங்கள் வாழ்க்கையை முறைப்படுத்திக் கொண்டார்கள். இறைச்சட்டம், எல்லாக் காலத்திற்கும் ஏற்ற - எல்லாரின் உயிர் - உடைமை - உடல்நலம் - உளநலன் - பண்பு நலன்களுக்குப் பாதுகாப்பானதாக இருக்கின்றது.

அகழ்ப்போர் நடந்து முடிந்திருந்தது. அதையொட்டி விஷமத்தனங்கள் செய்து வந்த யூதக் கோத்திரமான பனூ குரைளாக்கள் முற்றிலும் துடைத்தகற்றப் பட்டிருந்தனர். சில மாதங்கள் கழிந்திருந்தன. அரபுக் குறைஷியர் தம் பொருளாதாரத்தை அதிக மதிகம் பெருக்கிக் கொள்வதற்கு அடிப்படைக் காரணமே அண்ணலையும், அவர்களது இறைநெறியை ஏற்றோரையும் அடியோடு அழித்தொழிப்பதற்காகத்தான். வர்த்தகத் திறனும், நம்பிக்கையும் மிக்க சிலரிடம் ஒப்பந்தம் பேசி, சிரியாவின் (ஷாம்) வாணிபச் சந்தைக்கு அவர்களை அனுப்பி முதலீடு செய்து இலாபம் திரட்டிக் கொண்டிருந்தனர். இந்த இலாபத்தில் அதிகமான ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருந்தனர். மதீனத்து முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த யுத்த ஆயத்தங்களை மதீனாவின் மக்களாட்சித் தலைவர் மாநபியவர்கள் அறிந்தே இருந்தனர்.

முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் தொடுக்க, பெரும் பொருட் செல்வங்களைச் சுமந்து கொண்டு குறைஷிய வர்த்தகக் குழுவினர் சிரியாவிலிருந்து வந்து கொண்டிருக்கும் செய்தி ஒற்றர்கள் மூலம் ஆட்சித் தலைவராம் அண்ணலுக்குக் கிடைத்தது. ஹள்ரத் ஸைத் (ரளி) அவர்களின் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட குதிரைப்படை வீரர்களை அங்கு அனுப்பினார்கள். சென்ற அவ்வீரர்கள் அவர்களில் பலரை சிறைப் பிடித்து வந்தனர். சிலர் தப்பியோடிவிட்டனர். அப்படித் தப்பியவர்களில் அண்ணலின் மகளார் ஸைனப் (ரளி) அவர்களின் கணவர் "அபுல் ஆஸ்" என்பாரும் ஒருவர். அவர் இறைநெறியைத் தழுவாததால் இருவருக்குமிடையிலான இல்லற ஒப்பந்தம் இப்போது இல்லாதிருந்தது.

திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளும் இருவருக்கிடையில் ஒத்த கருத்துடைய இறைநெறிக் கொள்கை அவசியம் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. கணவன் - மனைவி என இரண்டறக் கலந்து ஒன்றித்துப்

போகும் தம்பதிகளுக்கிடையே கடவுள் கொள்கையும் ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பது நிபந்தனையாகும். எனவே, இருவரில் ஒருவர் மதம் மாறிவிட்டால் இல்லற பந்தம் முறிந்து போய் விடும் என்பது இஸ்லாத்தின் தீர்ப்பாகும். "மதம் எப்படியும் இருக்கட்டும். நம் மனம் ஒன்றாக இருந்தால் போதும்" என்று வெற்று வேதாந்தம் பேசி குடும்பம் நடத்திக் காலம் தள்ளுவதை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

"தாம்பத்தியம்" என்பது புனிதமானது. உண்மையானது., உணர்வுப் பூர்வமானது... அந்த இனிய இன்பத்தில் திளைக்கும் இருவரிடமும் இறைநம்பிக்கை ஒன்றாக இருத்தல் வேண்டுமல்லவா? இது அபுல்ஆஸிடம் இல்லாததால், ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொள்ள அவர் முன்வராததால் ஸைனபிற்கும் அவருக்குமிடையிலான உறவு இல்லாதிருந்தது.

தப்பிய அவர், மதீனைவைக் கடந்து செல்ல நேரிட்டது. அப்போது அவரது உள்ளத்தில் பழைய நினைவுகள் பசுமையாக முளைத்தன. தன் அன்பு மனைவி ஸைனபையும், பாசமிகு செல்ல மகள் உமாமாவையும் கண்டு விட வேண்டும் எனும் எண்ணம் நெஞ்சத்தில் துடித்துத் துடித்துத் தட்டியது. அவரது ஆர்வம் அதிகமாகியது. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? எங்கும் காரிருள் கவிழ்ந்திருந்த நேரம்.. ஒரே கும்மிருட்டு... எப்படியோ தட்டுத்தடுமாறி காடு, தோட்டம் எனக்கடந்து, வழியில் வந்த ஓரிருவரிடம் வீட்டின் அடையாளம் கேட்டுத் தெரிந்து ஸைனபின் இல்லக்கதவைத் தட்டினார் அபுல்ஆஸ்.

இரவின் இறுதிப் பகுதி கழிந்து, விடியல் அடிவானத்தில் வெளிறிய கோலத்தைப் பூசிக் கொண்டிருந்தது. உறங்கிக் கிடந்த கூட்டுப் பறவைகள் துயில் கலைத்துக் கரைந்துகொண்டு சிறகடித்துக் கொண்டிருந்தன. அதிகாலைத் தொழுகைக்கான (ஸுபுஹ்) வேளை அது. மாநபியின் இறைப்பள்ளியிலிருந்து தொழுகைக்கான அழைப்பொலியை (அதான்) ஹள்ரத் பிலால் முழங்கிக் கொண்டிருந்தார். "அஸ்ஸலாத்து கைரும் மினன்னவ்ம்" (தூக்கத்தைக் காட்டிலும் இறைவனைத் தொழுவது மிக்க மேலானது.)

அதிகாலை வேளையில் வீட்டின் கதவு தட்டப்படும் ஓசை கேட்டு, யாரது? எனக் கேட்டுக் கொண்டே அண்ணலின் அன்பு மகளார் ஸைனப் (ரலி) கதவைத் திறந்தார். அபுல்ஆஸைக் கண்டதும் அப்படியே உறைந்து நின்றார். செய்வதறியாது திகைத்தார். அன்புப் பாசத்தில் அபுல்ஆஸ் உருகி நின்றார். கண்நிறைந்த தனது கணவரின் கோலங்கண்டு

கண்ணீர் சிந்திய ஸைனப் இல்லத்தினுள் நுழைவதற்கு அனுமதித்தார்.

அபுல்ஆஸை இல்லத்தில் இருக்கச் செய்துவிட்டு அக்கணமே அதிகாலைத் தொழுகைக்குப் பள்ளிக்குச் சென்றார். அண்ணலின் தலைமையில் (இமாமத்) தொழுகை துவங்குவதற்காக அனைவரும் சீராக அணிவகுத்து (ஸஃப்) நின்ற வேளையில் “இஸ்லாமிய சகோதர சகோதரிகளே! உங்களனைவருக்கும் ஒன்றை முன்னதாகவே கூறிக் கொள்கிறேன். அபுல்ஆஸ் பின் ரபீஆவுக்கு நான் அடைக்கலம் அளிக்கிறேன் என அவசர அவசரமாகக் கூறினார். தொழுகை துவங்கியது. கலந்து கொண்டார்.

எல்லாரும் இந்த அறிவிப்பைச் செவியேற்கட்டும் என்பதற்காகவே இந்த இடத்தில் இந்த நேரத்தில் பரபரப்புடன் கூறினார். அபுல்ஆஸ் மக்காவின் பகைவர் கூட்டத்தைச் சார்ந்தவர். மதீனாவில் எவரது கண்ணிலாவது பட்டுவிட்டால் அவரது உயிருக்கே ஊறு ஏற்பட்டுவிடும் என்பது ஸைனபுக்குத் தெரியும் என்பதால் முன்னேற்பாட்டுடன் இதைச் செய்து அபுல் ஆஸுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொண்டார். அரபுக் கோத்திரத்தைப் பொறுத்தவரை இதுவொன்றும் புதிய மரபல்ல. தொன்று தொட்டு அவர்களிடம் நிலவி வந்ததாகும்.

என்னதான் வேண்டாதவராக - பகைவராக இருந்தாலும் தனதூரைச் சார்ந்த ஒருவர் அவருக்கு அபயம் தருகிறேன் என்று பகிரங்கமாகச் சொல்லிவிட்டால் அவரை மதித்து, எதிரியை எதுவும் செய்யாது இருப்பர்.

தொழுகையை நிறைவாக்கிய நபிகளார் “மக்களே! ஓர் எளியவரும் பிறருக்குப் பாதுகாப்பளிக்க முடியும். அதனை மதித்து நாம் நடப்போம்' எனக் கூறினார்கள். “மகளே ஸைனப்! அவரை வரவேற்று நீ சிறப்பிக்கலாம். ஆனால் உன் கணவராக அல்ல; ஒரு விருந்தினராகத் தான் அவர் இருக்க முடியும். ஏனெனில் இறைச்சட்டப்படி அவர் உன்னுடையவரல்லர்” என்றார்கள். அறிவார்ந்த மகளும் அதை ஏற்றுக் கொண்டு தலையசைத்தார்கள்.

மக்கத்து அரபுக் குறைஷிகளின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்த அபுல்ஆஸ் பெருமளவு பொருட்களை சிரியா வர்த்தகத்தில் போட்டுப் புரட்டி வந்தார்.

## மனமாற்றத்தை ஏற்படுத்திய இறைநெறி

மக்கத்துக் குறைஷியருக்குச் சொந்தமான பொருட்களையே “அபுல்ஆஸ்” முஸ்லிம் வீரர்களிடம் இழந்திருந்தார். அப் பொருட்கள் இல்லாது மக்காவுக்குச் செல்வது. மக்காவாசிகள் தன் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சிதைத்து விடும் என்றெண்ணிப் பெரிதும் உள்ளம் கலங்கினார்.

பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மானிர்ரஹீம்
எல்லாப் புகழும் இறைவனுக்கே!

# இஸ்லாமிய மணமகன், மணமகள் தகவல் மையம்

**35 வயதுக்கு மேற்பட்ட மணமகன், மணமகள் தகவல்களை பதிவிடவும், தகவல்களை தெரிந்து கொள்ளவும் இந்த சேவை துவங்கப்பட்டுள்ளது**

## 35plusnikkah

35 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் சுய விரக் குறிப்புடன் **35plusnikkah@gmail.com** என்ற மெயிலில் பதிவு செய்யவும்.

மணமகன் – மணமகள் தரப்பினர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களின் மெயில் வந்தவுடன் உங்கள் பகுதி ஜமாஅத்தை விசாரித்தபின் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளப்படும்.

பதிவு செய்ய கட்டணம் இல்லை.

**தொடர்புக்கு :**

**35plusnikkah@gmail.com**

http://www.35plusnikkah.com

**8148463579**

தவறான தகவல்களுடனும், தவறான நோக்கத்துடனும் பதிவிட வேண்டாம். உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஸைனபிடமும் இதைத் தெரிவித்தார். பொதுவாகப் போரில் பறிக்கப்பட்டு எடுக்கப்படும் பொருட்கள் எடுத்தவருக்கே சொந்தம். இது அக்கால போர் மரபு. தனது முன்னாள் கணவருக்கு எவ்வாறு உதவுவது எனத்தெரியாமல் ஸைனப் (ரளி) உள்ளம் பிழிந்து வேதனைப்பட்டார். எதற்கும் இறைத்தூதரிடம் முறையிடுவோம் என எண்ணி அண்ணலிடம் வந்தார்.

மகளின் மனவேதனையைத் தெரிந்த மாநபி, தோழர்களிடம் நிலைமையை விளக்கினார்கள். இது உங்களின் உரிமை. நீங்கள் விரும்பினால் அவரிடம் பறித்திட்ட உடைமைகளைக் கொடுத்து அவரை நம்பிக்கையாளராக ஆக்கலாம். இது எனது விருப்பமே தவிர கட்டளையல்ல. ஒரு நாட்டின் அதிபர் - இறைவனின் திருத்தூதர் - அவரது கட்டளை எதுவாயினும் அக்கணமே அடிபணிந்து செயலாற்ற அணியமாயிருக்கும் தோழர்களிடம் இந்த அளவு கனிவாக - மென்மையாக - பணிவுடன் விருப்பத்தை வெளியிடுகின்றார்களென்றால் இங்குதான் அண்ணலின் அரும் பண்பை அகிலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

எந்நாளும் பதவியைத் தம் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தாத ஏந்தலே அந்த மக்காளாட்சித் தலைவர். மக்களின் சேவை - நன்மைக்காகவே அந்தப் பதவிப் பொறுப்பை அர்ப்பணித்தார்கள். "எந்த மனிதர் என் சமுதாய மக்களின் விவகாரங்களுக்குப் பொறுப்பாளராக (அதிகாரி) ஆகிய பின்னர் தன்னையும், தன் குடும்பத்தாரையும் எவ்வாறு பாதுகாக்கின்றாரோ அவ்வாறே பிறமக்களையும் பாதுகாக்கத் தவறினால் அந்த மனிதர் சொர்க்கத்தின் சுகந்தத்தைக் கூட நுகர்ந்திடமாட்டார்" என அண்ணலார் எச்சரித்திருக்கின்றார்கள்.

"மக்களின் விவகாரங்களுக்குப் பொறுப்பேற்றுள்ள ஒருவர் அப்பொறுப்பைத் தவறாகப் பயன்படுத்தி மக்களுக்குத் துரோகம் செய்தால் அவர் நரகில் நுழைந்து உழல்வார்" எனவும் நபிகளார் கூறினார்கள். எனவேதான் எவரிடம் எந்தப்பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றதோ அவர் அந்தப் பொறுப்பை நேர்மையாக சரியாகச் செய்ய வேண்டும்.

அண்ணலின் விருப்பத்தைத் தெரிந்து கொண்ட அன்புத் தோழர்கள் அபுல் ஆஸிடமிருந்து எடுத்துக் கொண்ட அனைத்துப் பொருட்களையும் ஒன்று விடாமல் திரும்பக்கொடுத்தனர். அபுல் ஆஸுக்கோ பெரும் வியப்பு. தன் வாழ்வில் எங்கும் கண்டிராத புதுமையாக இருந்தது. தலைவரின் விருப்பத்தை அறிந்த மாத்திரத்தில் அப்படியே அடி

பணியும் திருக்கூட்டம். துளியும் பேராசை இல்லாமல் திரும்பத் தந்த பரந்த மனம் இந்தக் காட்சியை எந்த அவையிலும் கண்டதில்லையே என எண்ணி யது நெஞ்சம்.

அபுல் ஆஸிடம் மனமாற்றம் தோன்றியது. உத்தமத் தூதரின் உண்மை நெறியை அசை போட்டார். இதுவரைக்கும் தனது மாமனாராகப் பார்த்த அவருக்கு அண்ணலை இறைத் தூதராகப் பார்க்கும் உணர்வு உள்ளத்தில் உருவானது. பொங்கிவந்த உண்மை ஒளியூற்றை சிரமப் பட்டு அடக்கிக் கொண்டு மக்கா புறப்பட்டுப் போனார்.

மதீனாவில் கண்ட காட்சி அவருள் பெரும் மாற்றத்தை உண்டாக்கியது. வேற்றுமை இல்லாத ஒற்றுமையுடன் கூடிய மதீனத்து முஸ்லிம்களின் அடக்கமான வாழ்வு, இறை வணக்கம், இறைத்தூதருக்கு இனிதாகக் கட்டுப்படும் அரும் பண்பு, சகோதரத்துவ சமத்துவம், பேராசையின்மை இன்ன பிற அனைத்தும் அபுல்ஆஸைக் கவர்ந்திருந்தன.

இம்மாபெரும் சமுதாயத் தைப் பண்படுத்தி அவர்களுக்குத் தலைமைப் பொறுப்பேற்றிருந்த மதீனத்து அதிபதியிடம் காணப் பட்ட பணிவு - புன்னகை - அதிகார அகந்தையற்ற ஆளுமை - அழகிய நிலவு முகத்தில் வீசிய பேரொளி. அண்ணலின் மீது அவருக்கிருந்த மதிப்பையும், மரியாதையையும் அதிகரித்தன. உரியவர்களின் பொருட்களை முறையாக ஒப்படைத்து, நம்பிக்கை நாணயத்தினைக் காப்பாற்றிய அபுல்ஆஸ் எவருக்கும் தெரியாமல் மீண்டும் மதீனா புறப்பட்டு வந்து இறைத்தூதரின் கரம்பற்றி இதயப்பூர்வமாய் இறை நெறியை ஏற்றார். ஸைனப் - அபுல் ஆஸ் இருவரின் இல்லற வாழ்வு மீண்டும் தளிர்த்தது. அந்தத் தாம்பத்தியச் சோலையில் மலர்கள் மணம் வீசின.

மக்கத்தவரை அச்சம் பற்றிக் கொண்டது. இனி கிழக்குப் பகுதி வழியே வணிகத்துக்குப் புறப்பட முடியாது. மேற்றிசை வழியே செல்ல ஏற்பாடு செய்யலாம் என்றெண்ணி செங்கடலின் ஓரக்கரைகளில் வாழ்ந்து வந்த தம் நட்புக்கோத்திரத்தாரான "பனூமுஸ்தலிக்" குழுவினரை மதீனாவைத் தாக்குமாறு தூண்டி னர். அவர்களும் அதற்கான ஆயத்தங்களில் இறங்கினர். ஒற்றரின் மூலம் செய்தியை அறிந் திட்ட அண்ணலார் அறப்போர் வீரர்களைத் திரட்டி அக்கணமே மக்காவை அண்மியிருந்த பனூ முஸ்தலிக் பகுதிக்குப் புறப் பட்டுச் சென்றார்கள். இது ஓர் அரிய சந்தர்ப்பம். இறைநெறி ஏற்றோர் பலமிழந்து விடவில்லை என்பதைக் காட்டும் சரியான வாய்ப்பு. துணிச்சலுடன் துவண்டு விடாமல் தூதர் நபிகளாரின்

தலைமையில் தோழர்கள் பன்னாட்கள் பயணப்பட்டு செங்கடலின் ஓரக்கரையில் முகாமிட்டார்கள்.

மக்கத்துக் குறைஷிகளின் ஆதரவாளர்களான “பனூமுஸ்தலிக்” கோத்திரத்தினர் போருக்கான ஆயத்தத்தை இன்னும் சரியாகச் செய்யாத நிலையில் அறப்போர் வீரர்களின் வருகையைப் பார்த்து அதிர்ந்து விட்டார்கள். அவர்கள் வசித்து வந்த கூடாரங்கள் முஸ்லிம் வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டிருந்ததைப் பார்த்த போது கொஞ்ச நஞ்சம் எஞ்சியிருந்த வீரமும் வேகமும் அப்படியே அடங்கி ஒடுங்கிப் போயின. அஞ்சிப் பதுங்கினர்.

சில கத்துக்குட்டிகள் துள்ளி சிறுசிறு எதிர்ப்பைக் காட்டின.. மான ரோஷமுள்ள சில வீரர்கள் ஆர்ப்பரித்துச் சண்டையிட்டனர். ஒருசிலர் மடிந்தனர். பின்னர் அதிவிரைவில் அனைவரும் சரணடைந்தனர். எல்லாரும் சிறைப்பிடிக்கப்பட்டனர். இப்போரின் மூலம் நிறைய செல்வ வளங்கள் கிடைத்தன. அவற்றைக் காட்டிலும் மக்கத்துக் குறைஷியரின் முதுகெலும்பை முறித்து பலத்தைக் குன்றச் செய்ததே மகத்தான வெற்றியாகும். ஏனெனில், மேற்றிசையின் செங்கடல் ஓரத்தில் இந்த பனுமுஸ்தலிக் கோத்திரத்தார் அரபுக் குறைஷியருக்கு பெரும் பலமாய் விளங்கினர்.

அண்ணலாரைப் பொறுத்தவரை மக்கள் அமைதியாக வாழ வேண்டும். உலகில் - உண்மை - சாந்தி - சமாதானம் - சகோதரத்துவம் நிலவ வேண்டும். மனித நேயம் மலரவேண்டும். மனிதப் பண்பு செழிக்க வேண்டும் என்பதே அவர்களின் இலட்சியக் குறிக்கோளாக இருந்தது. இவற்றுக்கு எதிரான எல்லா சக்திகளையும், அன்பு - அடக்கமாகவும் ஒடுக்கப் பார்த்தார்கள். போர்ப் பிரகடனம் செய்து துடைத்தொழித்தார்கள்.

தம் மக்களிடையே சிறு சிறு பூசல்கள் - கருத்து வேறுபாடுகள் தோன்றுவதையும் தூதர் நபிகளார் விரும்பவில்லை. மிகவும் கவனத்துடன் வழி நடத்தினார்கள். போர்க்களத்திலும் அந்த வழிகாட்டல் தொடர்ந்தது.

(தொடரும்)

## தூங்கி எழுந்தவுடன் என்ன செய்ய வேண்டும்?

எழுந்தவுடன் மூன்று முறை “அல்ஹம்துலில்லாஹ்” என்று கூற வேண்டும். அதற்குப்பின் கலிமா தய்யிப்பாவை (லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்று கூற வேண்டும். அதற்குப்பின் தூங்கி எழுந்தவுடன் ஓதக்கூடிய துஆவை اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ ஓத வேண்டும்.

# மழைக்கால நோய்கள் கவனம்

தமிழகத்தில் பருவமழை தொடங்கி விட்டது. இந்த காலத்தில் பெரும்பாலான நோய்கள் நம்மை எளிதாக தாக்கக்கூடும்.

பொதுவாகவே நாம் அருந்தும் குடிநீர் மூலமாகத் தான் நோய்கள் அதிகமாக தாக்குகிறது. அது மட்டுமில்லாது வீட்டை சுற்றி நீர் தேங்கி இருப்பின் அதில் கொசுக்கள் உருவாகின்றன.

நாளடைவில் தேங்கியிருக்கும் நீர் சாக்கடை போல் மாறி விடுகின்றது. வேறு வழியின்றி வீட்டிற்கு வெளியில் அந்த சாக்கடை நீரில் நடந்து செல்கிறோம். இவ்வாறு இருக்கும் போது வைரஸ் கிருமிகள் எளிதில் பரவி நோய்களை ஏற்படுத்துகிறது.

சுகாதாரம் இல்லாத குடிநீர் மூலம் காலரா, வாந்தி, ப்ளூ காய்ச்சல், மஞ்சள் காமாலை ஆகிய நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரையும் தாக்கும்.

மழை நீர் தேங்கிய பகுதியில் உருவாகும் கொசுக்கள் மூலம் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, மூளை காய்ச்சல், யானைக்கால் ஆகிய நோய்கள் வரலாம். மழைக் காலத்தில் தான் வழக்கத்தைவிட அதிகம் பேர் நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

இதுபோன்ற நோய்கள் நம்மை தாக்காமல் இருக்க எளிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வரலாம்.

காய்ச்சல், ஜலதோஷம், இருமல் ஏற்படும்போது மருத்துவரிடம் சென்று தகுந்த மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம்.

சரியாகி விடும் என்று வீட்டிலேயே ஏதேனும் மாத்திரை போட்டுக் கொள்வதை தவிர்க்கவும்.

தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் காய்ச்சல் நீடிக்கும் பட்சத்தில் ரத்தப் பரிசோதனை செய்து என்ன கிருமி தாக்கியுள்ளது என்பதை தெரிந்து கொண்டு அதற்கு தகுந்தபடி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கு மழை காலத்தில் கதகதப்பான ஆடைகளை அணிவிக்க வேண்டும். மழைக்காலத்தில் குடிக்கும் தண்ணீரை காய்ச்சி வடிகட்டி குடிக்க வேண்டும்.

கூடுமானவரை பள்ளி, கல்லூரிகள், அலுவலகங்களுக்கு செல்பவர்கள் வீட்டில் காய்ச்சிய தண்ணீரை கொண்டு சென்று குடித்தால் மழைக்கால நோயில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மழைக் காலத்தின் போது சுத்தமாக இருக்கும் கழிவறைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

வீட்டைச் சுற்றி கொசுக்கள் உற்பத்தியாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெளியே சென்று வீடு திரும்பியதும் கை, கால்களை நன்கு சோப்பு போட்டு கழுவ வேண்டும்.

செருப்பு, ஷூ ஆகியவற்றை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

உணவு சாப்பிடும் முன்பு கட்டாயம் கைகழுவி விட்டு சாப்பிடுவது நல்லது.

வீட்டை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும். குழந்தைகள் அவர்களுக்கே அறியாமல் கீழே இருப்பதை வாயில் எடுத்து வைத்துக் கொள்வர்.

எனவே, குழந்தைகள் இருக்கும் இடத்தை சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியம்.

---

## நிந்தித்தவரையே சென்றடையும் நிந்தனை!

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் : “மற்றவரை ஒருவர் நிந்திக்கும் போது அது வானத்திற்குச் செல்கின்றது. அங்கே வானத்தின் கதவுகள் மூடி இருக்கின்றன. பின்பு அது உலகத்திற்கே திரும்புகிறது. உலகத்திலும் கதவுகள் மூடி இருக்கின்றன். பின்பு அது வலபுறம் இடபுறம் அலைந்து திரிகின்றது. எங்குமே அதற்கு இடமில்லாமல் அது – எவர் நிந்தித்தாரோ அவரிடமே வந்து சேருகிறது”

(ஆதாரம் : அபூதாவூத்)

## மதுரை M.I.W.S. பைத்துல்மாலின் திருமண விழா

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அளப்பெரும் பேரருளாலும், எங்களின் உஸ்தாதுமார்கள், ஷைகுமார்கள், சமுதாய வழிகாட்டிகளின் துஆ பரக்கத்தாலும் **குர்ஆனின் குரல் நிறுவனர்களில் ஒருவரும், மதுரை J.M.S. அரபு கல்லூரி மற்றும் M.I.W.S . பைத்துல்மால் நிறுவனருமான "அஸ்அதுல் மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத் கிப்லா** (ரஹ்) அவர்களால் உருவாக்கப்பட்டு கடந்த 1982ஆம் ஆண்டு முதல் மதுரை இஸ்லாமிக் வெல்ஃபேர் சொஸைட்டி (M.I.W.S .) பைத்துல்மால் இன்று வரை பன்னூறு ஏழைக்குமர்களுக்கு நிக்காஹ் செய்து வைத்து அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியுள்ளது.

M.I.W.S . பைத்துல்மால் சேவையின் தொடர்ச்சியாக...

கடந்த 13.11.2022 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10.30 மணியளவில் மதுரை **J.M.S.** அரபு கல்லூரி வளாகத்திலுள்ள **"அஸ்அதுல் மில்லத்" ஹள்ரத் (ரஹ்) அவர்களின் நினைவரங்கத்தில் ஏழு குமர்களுக்கான திருமணங்கள்** மிகச் சிறப்புடன் நடைபெற்றன.

விழா நிகழ்ச்சிக்கு -

**J.M.S.** அரபு கல்லூரி & **M.I.W.S** . பைத்துல்மாலின் தலைவர் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் **S.ஸபூர் முஹ்யித்தீன்** மிஸ்பாஹி ஹள்ரத் அவர்கள் தலைமை வகித்து திருமண விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். **J.M.S.** அரபுகல்லூரி **& M.I.W.S** . பைத்துல்மாலின் நிர்வாகக் குழு உறுப்பினர்களும், தமிழகத்தின் முக்கியப் பிரமுகர்களும், சமுதாய முன்னோடிகளும் முன்னிலை வகித்தனர்.

சேலம் நூருல் இஸ்லாம் அரபு கல்லூரி பேராசிரியர் மவ்லானா **முஹம்மது நூர் சிராஜி** ஹள்ரத் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

நிறைவாக, மதுரை **J.M.S.** அரபு கல்லூரியின் முதல்வர் மவ்லானா அஷ்ஷைஹ் அல்ஹாஜ் **M. முஹிப்புல்லாஹ்** ஹள்ரத் கிப்லா தாமத் பரகாதஹும் அவர்கள் மணமக்களை வாழ்த்தி துஆ செய்தார்கள்.

மணமக்களுக்கு **M.I.W.S .** பைத்துல்மால் சார்பாகவும், நல்லுள்ளம் கொண்ட சமுதாயப் பிரமுகர்கள் சார்பாகவும் பல்வேறு பரிசுப் பொருட்களும், பண முடிப்புகளும் வழங்கப்பட்டன.

திருமண விழாவினைக் கண்டுகளிப்பதற்காகவருகைதந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் பைத்துல்மாலின் இந்தத் திருமணத்தை மெத்த மகிழ்ச்சியோடு பாராட்டி விடைபெற்றனர். அல்ஹம்து லில்லாஹ்!

## குஜராத் தேர்தலில் பிரியும் முஸ்லிம் வாக்குகள்!

குஜராத்தில் 27 ஆண்டுகளாக பாரதீய ஜனதா ஆட்சி நடைபெறுகிறது. இக்கட்சியில் முதன்முறையாக 1998-ல் அப்துல் கனி குரைஷி எனும் முஸ்லிம் வேட்பாளருக்கு ஒரு தொகுதியில் வாய்ப்பளிக்கப்பட்டது.

இவர் காங்கிரஸின் முஸ்லிம் வேட்பாளரான இக்பால் படேலிடம் சுமார் 26,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். அப்போது முதல் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு பாரதீய ஜனதா வாய்ப்பு அளிக்கவில்லை. உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், உத்தரகாண்ட், சத்தீஸ்கர், இமாச்சல் ஆகிய மாநிலங்களைப் போல, குஜராத்திலும் பாரதீய ஜனதா சார்பில் முஸ்லிம்கள் போட்டியிடாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், முஸ்லிம்களுக்கு காங்கிரஸில் மட்டுமே போட்டியிடும் வாய்ப்புகள் கிடைத்தன. இதன் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து கடந்த 2017 தேர்தலில் 6-ல் 3 முஸ்லிம்கள் மட்டும் வெற்றி பெற்றனர். இருப்பினும், முஸ்லிம்களின் வாக்குகள் தொடர்ந்து காங்கிரஸுக்குக் கிடைத்தன. இந்த முறை முஸ்லிம் வாக்குகளைப் பறிக்க ஆம் ஆத்மி மற்றும் அகில இந்திய மஜ்லிஸ்-யே-இத்திஹாதுல் முஸ்லிமின் (ஏ.ஐ.எம்.ஐ.எம்.) ஆகிய கட்சிகள் போட்டியில் உள்ளன. இவற்றில் டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலின் கட்சி, 3 தொகுதிகளில் முஸ்லிம்களுக்கு வாய்ப்பளித்துள்ளது. ஹைதராபாத் எம்.பி.யான அசாதுதீன் ஒவைசியின் ஏ.ஐ.எம்.ஐ.எம்., 40 தொகுதிகளில் போட்டியிட திட்டமிட்டுள்ளது.

குஜராத்தின் சிறுபான்மையினரில் அதிக எண்ணிக்கையாக சுமார் 10% முஸ்லிம் வாக்காளர்கள் உள்ளனர். இங்கு மொத்தமுள்ள 182 தொகுதிகளில் சுமார் 25-ல் முஸ்லிம்கள் கணிசமாக இருந்தனர். இவர்களும் 2002 கோத்ரா கலவரத்துக்குப் பிறகு தங்கள் தொகுதிகளிலிருந்து இடம் மாறிவிட்டனர். இவர்களதுவாக்குகளும், இந்தத் தேர்தலில் காங்கிரஸ், ஆம் ஆத்மி மற்றும் ஏ.ஐ.எம்.ஐ.எம். ஆகிய கட்சிகளுக்குள் பிரியும் சூழல் உருவாகியுள்ளது.

இந்நிலையில், பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பில்கிஸ் பானு வழக்கில் விடுதலையானவர்களை "கலாச்சாரமான பிராமணர்கள்" எனப் புகழ்ந்த சந்திரசிங் ரவுஜிக்கு கோத்ரா தொகுதியில் பாரதீய ஜனதா வாய்ப்பளித்துள்

ளது. இவர் பில்கிஸ் பானு வழக்கில் 11 கைதிகள் விடுதலைக்கான குழுவிலும் இடம் பெற்றவர். இதேபோல, 2002 கலவரத்தில் பாத்தியாவில் 97 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இவ்வழக்கில் சிக்கிய 16 பேரில் ஒருவர் மனோஜ் குல்கர்னி, தற்போது ஜாமீனிலுள்ள மனோஜின் மகளான பாயல் குல்கர்னிக்கு பாரதீய ஜனதா சார்பில் அகமதாபாத்தின் நரோடா தொகுதியில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாப் உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

"15 வயதைத் தாண்டிய முஸ்லிம் சிறுமியின் திருமணம் சட்டப்படி செல்லும். அது குழந்தைத் திருமணச் சட்டத்தின் கீழ் வராது" என பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரியானா மாநிலத்தைச் சேர்ந்த ஜாவேத் (26) என்பவர் கடந்த ஜூலை மாதம் 16 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்து கொண்டார். சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் அடிப்படையில், வழக்குப்பதிவு செய்யப்பட்டு மைனர் பெண் என்பதால் சிறுமி பஞ்ச்குலா சிறார் காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டார்.

இதற்கிடையே தனது மனைவியை மீட்டுத் தரக் கோரி ஜாவேத் தரப்பில் பஞ்சாப் - அரியானா நீதிமன்றத்தில் ஹேபியஸ் கார்பஸ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி விகாஸ் பால் அளித்த தீர்ப்பில், "இஸ்லாமியர்களின் ஷரீஅத் சட்டப்படி 15 வயதுப் பூர்த்தி அடைந்தாலே அந்த பெண் திருமணம் செய்து கொள்ளலாம். அதன்படி 15 வயதுக்கு மேற்பட்ட முஸ்லிம் சிறுமியின் திருமணம் சட்டப்படி செல்லும்.

அதைக் குழந்தை திருமணச் சட்டத்தின்கீழ்க் கொண்டு வர முடியாது. பெற்றோரின் சம்மதமில்லாமல் கூட திருமணம் செய்து கொள்ளலாம். எனவே, சிறுமியைக் காப்பகத்திலிருந்து விடுவித்து அவரைக் கணவருடன் அனுப்பி வைக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்தார்.

## வக்ஃபு வாரியத் தலைவர் எம்.அப்துல் ரஹ்மானுக்கு "அப்ஸலுல் உலமா" பட்டம்!

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு அரங்கில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில முதன்மை துணைத் தலைவரும், தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவருமான எம்.அப்துல் ரஹ்மானுக்கு "அப்ஸலுல் உலமா" பட்டம் வழங்கப்பட்டது.

பட்டம் பெற்ற 96 பேரில் எம்.அப்துல் ரஹ்மான் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து எம்.அப்துல் ரஹ்மான் தனது முகநூலில் தெரிவித்துள்ளதாவது :

"அப்ஸலுல் உலமா" பட்டம் பெறுகிற அரிய பாக்கியத்தை வழங்கிய வல்ல இறைவனே! உனக்கே புகழனைத்தும்!

'என் இளமைப் பருவத்தில் நான் பயிலும் பள்ளிக்கூடம் உலகக் கல்வியோடு மார்க்கக் கல்வியும், அரபி மொழி அறிவும் ஒரு சேரப் பயிற்றுவிக்கும் கல்விக் கூடமாக இருக்க வேண்டும்" என்ற என் தந்தையாரின் தேடலுக்கேற்ப அரபியை முதன் மொழியாகக் கொண்ட ஆக்கூர் ஓரியண்டல் அரபு உயர் நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டு, முழுமையான பள்ளிப் படிப்பை முடித்தேன். தொடர்ந்து திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் மேற்படிப்பை அரபியுடனேயே முடிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

இளமைப் பருவம் இஸ் லாமிய நன்னெறியோடு வளர்த் தெடுக்கப்பட வேண்டிய அவசியத்தை அவர்கள் என்மீது அழுத்தியபோது கொஞ்சம் கடின மானதாகத்தான் உணர்ந்தேன். ஆனாலும், அதுதான் ஒழுக்க விழுமியங்களையும், மார்க்க சிந்தனைகளையும், அரபு மொழி ஆர்வத்தையும் இன்றுவரை என் னுடன் இணைத்து பயணிக்கச் செய்கிறது. இதனை எண்ணி யெண்ணி மகிழ்கிறேன். வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி எத்தனை ஆண்டுகள் ஸுஜூதில் கிடந்தாலும் போதாதே என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை பல்கலைக்கழகத்தில் அரபி மொழி சிறப்புப் பாடப் பிரிவான "அப்ஸலுல் உலமா" பட்டப் படிப்பை முடித்து பட்டம் பெற வேண்டும் என்கிற எனது நீண்டகால ஆவலை வல்ல இறைவனின் பேருளால் நிறைவேற்ற முடிந்தது.

அதன் பட்டமளிப்பு விழா சென்னை பல்கலைக்கழக நூற் றாண்டு அரங்கில் நடைபெற் றது. பல்கலைக்கழகத் துணை வேந்தர் மாண்புமிகு முனைவர் எஸ்.கௌரி அவர்களால் "பல்கலைக் கழகத்தில் இன்று பட்டம் பெறும் 96 பேரில் முதல் மதிப்பெண்கள் பெற்ற அப்ஸலுல் உலமா பட்ட தாரி" என அறிவிக்கப்பட்டு, பட்டம் அளிக்கப்பட்ட நெகிழ்வான நிகழ்வை என் மீது நேசம் கொண்ட உங்கள் அனைவருக் கும் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அப்ஸலுல் உலமா பட்டம் பெற்ற எம்.அப்துல் ரஹ்மானுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



السلام عليكم

## A.சலீம்



# RAHMAAN BUILDERS

Property Developers & Real Estate




# KASSIM HAJJ, UMRAH, ZIARAH
## TOURS, TRAVELS & AGENCIES

## வீடு, இடம் வாங்க - விற்க அணுகவும்

45D, ராமசாமி பிள்ளை தெரு, மருதமலை மெயின் ரோடு,
வடவள்ளி (அஞ்சல்), கோயம்புத்தூர் - 641041.
தொடர்புக்கு :

**99767 78597, 93632 20624, 99943 23977**


"(தர்மம் செய்யக்கூடிய) உயர்ந்த கை, (வாங்கக்கூடிய) தாழ்ந்த கையை விடச் சிறந்ததாகும்." என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹகீம் பின் ஹிஷாம் (ரளி) அவர்கள் (நூல் : புகாரி)


# பாவா மெடிக்கல்ஸ்

## 53/4, பெரிய தெரு,
## பட்டுக்கோட்டை - 1.

**04373-254354; 253339; 99444 54354**

## மக்கள் சேவகன் ஹுசைன் மெஹ்பூப்!

குஜராத் மோர்பி பாலம் இடிந்து விழுந்ததும் அங்கு தண்ணீரில் தத்தளித்த மக்களை ஒற்றை ஆளாக நின்று 50-க்கும் மேற்பட்ட உயிரைக் காப்பாற்றியவர் தான் இந்த ஹுசைன் மெஹ்பூப்.

எந்த குஜராத்தில் இரண்டாயிரம் முஸ்லிம்களைச் சங்கிகள் படுகொலை செய்தார்களோ அதே குஜராத்தில் பில்கீஸ் பானுவை 11 சங்கிகள் கூட்டு பலாத்காரம் செய்து அவரது கண்முன்னால், பிறந்த பிஞ்சுக் குழந்தையை தரையில் ஓங்கி அடித்து கொலை செய்து பில்கீஸ் பானுவின் தந்தையையும், தாயையும் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து எந்தச் சங்கிகள் கொலை செய்தார்களோ அதே குஜராத்தின் வாரிசு தான் இந்த ஹுசைன் மெஹ்பூப்.

"**ஒரு மனிதரை வாழ வைத்தவர் ஒட்டு மொத்த மனிதர்களையும் வாழ வைத்தவர் போலாவார்**" என்று அல்குர்ஆன் (5:32) கூறு கிறது. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்று திருக்குறள் கூறுகிறது.

முஸ்லிம் என்றால் காலை முதல் இரவு வரை சங்கிகளால் திட்டித் தீர்க்கப்படும் சமுதாயத்தினரான தவ்பீக், ராஜுகான், ஹுசைன் பதான் ஆகியோர், குழந்தைகள், பெண்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோரரை ஆற்றில் குதித்துக் காப்பாற்றி மருத்துவமனை கொண்டு சென்றுள்ளார்கள்.

## உய்குர் முஸ்லிம்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் குறித்து ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படாதது அநியாயக் காரர்களை பாதுகாப்பதாக அமைந்துள்ளது

சீனாவின் ஜிங்கியாங் பகுதியில் உய்குர் முஸ்லிம்கள் பல இலட்சம் பேர், கம்யூனிஸ்ட்டு சீன அரசாங்கத்தால் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள் என்று தொடர்ந்து அமெரிக்காவும், அதன் ஆதரவு நாடுகளும் குற்றம் கூறி வருகின்றன.

ஐ.நா.மனித உரிமை கவுன்சிலில் 47 உறுப்பினர் நாடுகள் உள்ளன. ஜிங்கியாங் பகுதியில் உய்குர் முஸ்லிம்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் குறித்து ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்க வந்த தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

மனித உரிமை கவுன்சில் உறுப்பினர் நாடுகள் 47இல் 36 நாடுகள் மட்டுமே வாக்கெடுப்பில் கலந்து கொண்டன. இவர்களில் 17 நாடுகள் மட்டுமே ஜிங்கியாங் பகுதியில் நடக்கும் மனித உரிமை மீறலைப் பற்றி விவாதிக்க ஆதரவு தெரிவித்தன. கலந்து கொண்ட நாடுகளில் 19 நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இதனால் சீனா

வின் மனித உரிமை மீறல் பற்றி விவாதிக்க ஆதரவு இல்லாமல் ஆகியிருக்கிறது.

ஜிங்கியாங் பகுதியில் உய்குர் முஸ்லிம்களுக்கு எதிராக சீன அரசு நடத்தும் அடக்குமுறை குறித்தும், மனித உரிமை மீறல் குறித்தும் ஐ.நா. மனித உரிமை கவுன்சில் எவ்வித விவாதமும் நடத்தக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்த நாடுகள் பின்வருமாறு :

பொலிவியா, காமரூன், சீனா, கியூபா, எரிட்டிரியா, காபோன், இந்தோனேசியா, ஐவரிகோஸ்ட், கஜாகிஸ்தான், மாரிடேனியா, நாம்பியா, நேபாள், பாகிஸ்தான், கத்தார், செனிகல், சூடான், ஐக்கிய அரபு அமீரகம், உஸ்பெகிஸ்தான் மற்றும் வெனிசுலா ஆகிய 19 நாடுகளாகும்.

அர்ஜென்டீனா, ஆர்மீனியா, பெனின், பிரேசில், காம்பியா, இந்தியா, லிபியா, மலேசியா, மெக்சிகோ, உக்ரைன் ஆகிய 8 நாடுகள் வாக்கெடுப்பைப் புறக்கணித்து விட்டன.

ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் சீனாவின் ஜிங்கியாங் அடக்குமுறைக் குறித்து விவாதிக்கக் கோரிய தீர்மானத்தை முன்மொழிந்த நாடுகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, நார்வே, சுவீடன், துருக்கி மற்றும் நாடுகள் 17 ஆகும்.

ஐ.நா. மனித உரிமை கவுன்சில் ஜிங்கியாங் உய்குர் முஸ்லிம்கள் அடக்குமுறையைப் பற்றி விவாதிக்க வந்த தீர்மானம் நிறைவேற்றப்படாதது குறித்து சர்வதேச ஆம்னெஸ்ட்டி - சர்வதேச பொதுமன்னிப்பு நிறுவனமும், மனித உரிமைகள் வாட்சு நிறுவனமும் கண்டித்துள்ளன. இந்தத் தீர்மானம் ஜிங்கியாங் உய்குர் முஸ்லிம்களுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் என்று கண்டித்திருக்கின்றன.

இதுகுறித்து சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனத்தின் தலைமைச் செயலாளர் அக்னஸ் கல்லாமர்டு கூறுகையில், "இன்றைய தீர்மானம் அநீதமிழைக்கப் பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு பதில் மனித உரிமை மீறலில் ஈடுபட்டவர்களுக்கு அரணாக அமைந்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தால் கண்டறியப்பட்ட உண்மைகளை கேலிக்கூத்தாக்கும் செயல்" என்று கூறினார்.

## வெறுப்புப் பேச்சுகள் பேசுவோர் மீது உச்சநீதிமன்றம் வழிகாட்டியதுபோல் போலீஸ் நடவடிக்கை எடுக்கட்டும்

இந்தியா மதச்சார்பற்ற நாடு; இங்கே வெறுப்புப் பேச்சுக்களை பேசுவோர் மீது உச்சநீதிமன்றம் வழிகாட்டியுள்ளதுபோல் போலீஸார் தாமாகவே முன்வந்து நடவடிக்கை எடுக்கட்டும் என்று தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவரும், கஷ்மீர் முன்னாள்

முதல்வருமான ஃபரூக் அப்துல்லாஹ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று "வெறுப்பைத் தூண்டும் பேச்சுக்களை பேசுபவர்கள் மீது காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கா விட்டால், அவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப் படும்" என்று உச்சநீதிமன்றம் தனது உத்தரவில் தெரிவித்திருந்தது.

உச்சநீதிமன்ற உத்தரவு விவரம்: நாட்டில் வெறுப்புச் சூழல் நிலவி வருவதால் புகார் மிகவும் தீவிரமானது. இதுகுறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும். அடிப்படை உரிமைகளையும், சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்க வேண்டிய கடமை நீதிமன்றத்திற்கு இருக்கிறது. வெறுப்பு பேச்சுக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக டெல்லி, உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட் காவல் துறை டி.ஜி.பி.க்கள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

வெறுப்புப் பேச்சுக்களை பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகாருக்காக காத்திருக்காமல், காவல் துறை தானாக முன்வந்து வழக்குப் பதிவு செய்ய வேண்டும். நாட்டின் மதச்சார்பின்மை தன்மையை பாதுகாக்கும் நோக்கில், தேவையான உத்தரவுகளை பிறப்பிக்கவும், நடவடிக்கைகளை எடுக்கவும் காவல்துறை முன்வர வேண்டும். ஜனநாயகமும் மத நடுநிலையும் கொண்ட நாடான இந்தியாவில் இதுபோன்ற பேச்சுக்கள் மிகவும் கண்டிக்கத்தக்கவை.

ஃபரூக் அப்துல்லாஹ் கருத்து: இதனைச் சுட்டிக்காட்டிப் பேசிய ஃபரூக் அப்துல்லாஹ் உச்சநீதி மன்றத்தின் நிலைப்பாட்டை நான் வரவேற்கிறேன். இந்தியா மதச்சார்பற்ற நாடு; இங்கே வெறுப்புப் பேச்சுக்களைப் பேசுவோர் மீது உச்ச நீதி மன்றம் வழிகாட்டியுள்ளதுபோல் போலீஸார் தாமாகவே முன்வந்து நடவடிக்கை எடுக்கட்டும்.

நாட்டை வலுப்படுத்த வேண்டுமானால் பன்முகத் தன்மையை வலுப்படுத்த வேண்டும். அதற்கு வெறுப்புப் பேச்சுக்கள் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

## பென்சிலில் தீட்டிய ஓவியம்!

பென்சிலைக் கொண்டு எழுதலாம். பென்சிலில் எழுத முடியுமா? முடியும் என நிரூபித்து தம் கலைச் சாதனையை நிகழ்த்தியுள்ளார் புதுச்சேரி மாணவி சுல்பிஹா பேகம்.

திருக்குர்ஆன் 114 அத்தியாயங்களைக் கொண்டது. ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒரு பெயர் உண்டு. அந்த 114 பெயர்களையும் அரபி மொழியில் பென்சிலின் முனையில் செதுக்கியிருக்கிறார் சுல்பிஹா. இந்தச் சாதனையைப் பாராட்டி இந்தியா

# பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டுவதற்கு உதவி செய்யுங்கள்

"யாரொருவர் பள்ளிவாசல் கட்டுவதற்கு உதவி செய்கிறாரோ அவருக்கு மறுமையில் சொர்க்கத்தில் ஒரு வீட்டை அல்லாஹ் கட்டுகிறான்." "பள்ளிவாசல் கட்டுபவர்களுக்கு உலகத்தின் எல்லா தேவைகளையும் அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கிறான்"

அன்புள்ளம் கொண்ட சகோதர, சகோதரிகளுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

சென்னை முகப்பேர் ஏரி ஸ்கீம் பக்கம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், முகப்பேர் கபருஸ்தான் பின்புறம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, நம்பர் 1 என்ற இடத்தில் அல்லாஹ்வின் இல்லமாகிய **மஸ்ஜிதுன் நூர் & மதரஸா** கட்டுவதற்காக ¼ கிரவுண்ட் இடத்தை அல்லாஹ்வின் கிருபையால் ரூ. 25 லட்சம் கொடுத்து ரிஜிஸ்டர் செய்து விட்டோம். அல்ஹம்துலில்லாஹ்!

இனி அடுத்த கட்டமாக மஹல்லாவாசிகள், ஸ்கூல் படிப்புடன் கூடிய **அல் மதரஸத்துன் நூரிய்யா** ஹிப்ழு மதரஸா மாணவர்கள், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் சகோதரர்கள் ஆகியோர் பள்ளியில் தங்கி தொழுவதற்காகவும், ஓதுவதற்காகவும் இன்ஷா அல்லாஹ் இந்த பள்ளிவாசலை உருவாக்குகிறோம். அல்லாஹ்வின் நாட்டப்படி கட்டட வேலைகள் ஆரம்பமாகி விட்டன. எனவே, இந்தப் பள்ளிவாசலின் கட்டட வேலைகள் முழுமை பெறுவதற்கு பொருளாகவோ, பணமாகவோ, செக்காகவோ அனுப்பி ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்புள்ளம் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களே! நீங்களும் உங்களின் உதவிகளை அனுப்புவதோடு, உங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களையும் உதவிசெய்யவையுங்கள். அல்லாஹுதஆலா நமக்கு எல்லா நிஅமத்துக்களையும் அளித்து, பரக்கத் செய்தருள்புரிவானாக! நம்முடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வானாக. ஆமீன்.

**மஸ்ஜிது அக்கவுண்ட் விபரம்**

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
Bank : **Karur Vysya Bank** Branch: **Arumbakkam**
A/C.No : **1289135000013292**
Ifsc : **KVBL0001289** Swift Code: **KVBLINBBIND**

**G.Pay : 9444273674**

## மஸ்ஜிதுன் நூர் அண்ட் மதரஸா டிரஸ்ட்

பள்ளிவாசல் காம்ப்ளக்ஸ், 3வது மாடி, 23, முதல் மெயின் ரோடு, ஜெய் நகர், அரும்பாக்கம், சென்னை – 600 106.

**தொடர்புக்கு :** தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ் **G. நூர் முஹம்மது ஆமிரி சிராஜி** அலைபேசி : **9444273674**
செயலாளர் : ஜனாப் **M.காதர் மஸ்தான்** B.A., அலைபேசி : **9962320242**

புக் ஆஃப் ரெக்கார்ட் என்கின்ற அமைப்பு சாதனையாளர் விருதை வழங்கியிருக்கிறது.

பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் M.Sc. பயின்றுள்ள சுல்ஃபிஹா இந்த சாதனையைச் செய்ய இரண்டு மாதங்கள் எடுத்துக் கொண்டார். ஒரு பெயரை செதுக்குவதற்காக அவருக்கு ஐந்து மணிநேரம் தேவைப்படுவதாகக் கூறினார். தந்தை முஹம்மத் ஆஷிக் பாத்திர வியாபாரம் செய்கிறார். தாயார் பர்வீன் பேகம். சகோதரி ரூபினா பேகத்திடமிருந்துதான் இந்தக் கலையை சுல்ஃபிஹா கற்றுக் கொண்டார்.

சுல்ஃபிஹாவின் சகோதரி ருபீனா அல்லாஹ்வின் திருநாமங்களாகிய 99 பெயர்களை பென்சிலில்செதுக்கி உலகசாதனைபடைத்துள்ளார். அவரிடமிருந்து இரண்டு ஆண்டுகளில் சுல்ஃபிஹா இக்கலையைக் கற்று இப்போது சாதனைப் படைத்துள்ளார்.

இந்திய மாணவியர் இஸ்லாமிய அமைப்பு உறுப்பினரான சுல்ஃபிஹா அம்லோர்பவம் மெட்ரிகுலேஷன் பள்ளியில் வரைகலையைச் சிறப்பு வகுப்பாகக் கற்றுத் தருகிறார். பென்சிலில் பெயர் எழுதித் தருவதைப் பகுதி நேரத் தொழிலாகச் செய்து வருமானம்ஈட்டிவரும் சுல்ஃபிஹா இந்த வரை கலையை எல்லாருக்கும் கற்றுத் தருவதிலும் ஆர்வமாக இருக்கின்றார்.

## இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் மகளிரணி மீண்டும் உருவாக்கப்படுகிறது

அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் மகளிரணி உருவாக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அணி சென்ற மாதம் கலைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை தன்னிச்சையானது எனப் பல உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து இந்த மகளிரணியை மீண்டும் உருவாக்க சட்டவாரியம் முடிவு செய்துள்ளது.

இந்த மகளிரணிக்கான சட்டத் திட்டங்களை வகுப்பதற்கான 5 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அமைப்பாளர் எஸ்.க்யூ.ஆர்.இல்யாஸ் உடன்ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் உறுப்பினர் ஆதியா சித்தீக்கா மற்றும் சென்னை மாமன்ற 61வது வார்டு உறுப்பினரும், இந்திய யூனியன் முஸ்லிம் மகளிரணிதேசியத் தலைவியுமான பாத்திமா முஸப்பர் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் அப்போதைய பொதுச் செயலாளர் மவ்லானா வாலி ரஹ்மானி அறிவுரையின்பேரில் முஸ்லிம் பெண்கள் மத்தியில் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்

வதற்காக 2005-ம் ஆண்டு மகளிரணி உருவாக்கப்பட்டது. இஸ்லாம் காட்டும் வழியில் மகளிருக்கு அடிப்படைக் கல்வி, சுய வேலை வாய்ப்புக்கான தொழிற்பயிற்சி அளித்தல் போன்றவை மகளிரணியின் முக்கிய நோக்கமாகும். முத்தலாக் பிரச்சனையில் மகளிரணி முக்கிய அங்கம் வகித்தது. பிஹார், மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் சமூக மேம்பாட்டிற்கான ஆலோசனை கருத்தரங்குகளை மகளிரணி நடத்தியது. கொரோனா தொற்றின்போது ஹெல்ப்லைன் தொலைபேசி மூலம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கு மகளிரணி தீர்வு கண்டது.

**பாரதீய ஜனதாவில் ஒரு முஸ்லிம் எம்.பி.கூட இல்லாத நிலையில் பிரிட்டனிடமிருந்து பாடம் கற்க வேண்டும்**

இனவெறி நிலவிய பிரிட்டனின் பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இந்து மதத்தைப் பின்பற்றும் ரிஷி சுனக் பிரதமராகியுள்ள நிலையில் சோனியாவை புறந்தள்ளிய இந்தியா பிரிட்டனிடமிருந்து பாடம் கற்க வேண்டும் என காங்கிரஸ் எம்.பி. சசிதரூர் கூறியுள்ளார்.

காங்கிரஸ் எம்.பி.சசிதரூர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :

பிரிட்டனில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் பிரதமராகி உள்ளார். இது நல்ல விஷயம் வரவேற்கதக்கது. இதிலிருந்து இந்தியா பாடம் கற்க வேண்டும். இந்தியாவில் இந்து, சீக்கியர், பௌத்தர் அல்லது ஜைனர் அல்லாத ஒருவர் பிரதமராக முடியுமா? இந்தியாவில் சிறுபான்மையினருக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்பது வார்த்தை அளவில் மட்டும்தான் உள்ளது.

இந்தியாவில் முஸ்லிம்கள் குடியரசுத் தலைவர்களாக இருந்துள்ளனர். இருப்பினும், இது சம்பிராதய பொறுப்புதான். இதைக் கூறினால் காங்கிரஸ் கட்சியில் 10 ஆண்டுகளாக மன்மோகன் சிங் பிரதமராக இருந்தாரே அவர் சிறுபான்மை பிரிவைச் சேர்ந்தவர் தானே எனக்கூறுவார்கள். ஆனால், பெரும்பாலான இந்துக்கள் சீக்கியர்களை வித்தியாசப்படுத்தி பார்ப்பதில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது பெரும்பான்மைவாத அரசியல் அதிகரித்து வருகிறது. பாரதீய ஜனதாவில் இந்து, ஜைனர் அல்லது சீக்கியர் அல்லது பௌத்தர் அல்லாத ஒருவர் பிரதமராக வருவதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? தற்போதைய சூழலில் பாரதீய ஜனதாவுக்கு ஒரு முஸ்லிம் எம்.பி. கூட இல்லை. சோனியா காந்தி தேர்தலில்

வெற்றி பெற்றாலும்கூட பிரதமர் பதவிக்கு முயன்றபோது, இத்தாலியைச் சேர்ந்தவர். அவர் பிறப்பால் கிறிஸ்தவர் எனக் கூறினார்கள். இதையடுத்துத் தான் மன்மோகன்சிங் பிரதமரானார்.

பிரிட்டன் பிரதமராக உள்ள ரிஷி சுனக் இந்து மதத்தை வெளிப்படையாகப் பின்பற்றி வருகிறார்.

மேலும் ரிஷி சுனக்கின் வயதும் முக்கியமான ஒன்றாக உள்ளது. 42 வயதில் பிரிட்டனின் இளம் பிரதமராக அவர் உள்ளார். இந்த விஷயத்தில் இந்தியாவில் பாரதீய ஜனதா மட்டுமின்றி, அனைத்து கட்சிகளையும் குற்றம் சாட்டுவேன். இந்தியாவில் வயது குறைந்தவர்கள் இத்தகைய பதவிக்கு வருவது என்பது மிகவும் சிரமமான ஒன்றாகும்" இவ்வாறு சசிதரூர் குறிப்பிட்டுள்ளார்.

## திருகுர்ஆனின் முதல் ஆங்கில மொழியாக்கம்

உலகப் பொதுமறை திருகுர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த முதல் முஸ்லிம் முஹம்மது மர்மடியூக் பிக்தால்.

1875-ல் கிறிஸ்தவப் பாதிரியாருக்கு மகனாகப் பிறந்து, கிறிஸ்தவ மத நம்பிக்கையை சார்ந்து வளர்ந்த மர்மடியூக் வில்லியம் பிக்தால் வாலிப வயதில் நிகழ்ந்த சில சம்பவங்களால் இஸ்லாமிய மார்க்கத்தின் மீதான ஈர்ப்பால் 1917ஆம் ஆண்டு இஸ்லாத்தைத் தழுவினார்.

Bombay Chronicle எனும் பத்திரிகை ஆசிரியராகப் பொறுப்பேற்க இந்தியா வந்து 1924 வரை இங்கு பணியாற்றினார். தொடர்ந்து ஹைதராபாத் நிஜாம் ஆட்சியில் முஹம்மது பிக்தால் ஆசிரியராக இருந்து வெளியிட்ட Islamic Culture எனும் காலாண்டிதழ் உலகம்முழுவதும் அனைத்து பல்கலைக்கழக நூலகங்களுக்கும் சென்று சேர்ந்தது. இதன் மூலம் பல்லாயிரம் பேர் இஸ்லாத்தைக் குறித்துத் தெரிந்து கொள்ள பிக்தால் காரணமாக இருந்தார்.

1927-ஆம் ஆண்டு சென்னையில் பிக்தால் ஆற்றிய உரைகள் தொகுக்கப்பட்டு The Cultural side of Islam எனும் புத்தகமாக வெளியாகி இஸ்லாமிய

---

**நான்கு விஷயங்கள் ரிஜ்கை கொண்டு வந்து சேர்க்கும்.**

1. இரவு வணக்கம்.
2. விடியற்காலையில் இஸ்திஃபாரை அதிகம் செய்தல்.
3. தர்மம் செய்வதில் உறுதியுடன் இருத்தல்.
4. அதி காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வை திக்ரு செய்தல்.

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

## குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

**94433 46313, 98650 48082** Email : kottakkalayurvedapdkt@gmail.com

# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

- முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாம் மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**

Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**

Tel : **+91-7373030-412, (414), (421)**

WhatsApp : **+91-9566247805** https://**oxfordenglishschool.info**

நாகரித்தின் எழுச்சி, வீழ்ச்சியை ஒருசேர எடுத்துரைத்திருந்தது. இஸ்லாமியக் கலைப்பண்புகள் என்ற பெயரில் தமிழிலும் இந்நூல் வெளிவந்துள்ளது.

ஹைதராபாத் நிஜாம் அரசில் பணியிலிருந்து கொண்டே திரு குர்ஆனை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் மகத்தான பணியை 1928-ல் மேற்கொண்ட பிக்தால் 1930-ல் பூர்த்தி செய்தார்.

தனது ஆங்கில மொழிபெயர்ப்பைச் சரி பார்க்கவும், தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் எகிப்து சென்ற பிக்தால் அங்குள்ள மூத்த அறிஞர்கள், அல்அஸ்ஹர் பல்கலைக்கழகக் கல்வியாளர்களின் ஆலோசனை பெற்று லண்டன் திரும்பி The Glorious Quran எனும் பெயரில் வெளியிட்டார். பின்னர் ஹைதராபாத் நிஜாம் நிதியுதவியுடன் அரபி, ஆங்கிலம் இணைந்த பதிப்புகள் வெளியாகின.

பிற்காலத்தில் பல்வேறு அறிஞர்கள் திருகுர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டாலும் முஹம்மது பிக்தாலின் மொழிபெயர்ப்பே முதன்மையானதாக இன்றளவும் காணப்படுகிறது.

தொகுப்பு : **பாவா. ஜே. அப்துஸ் ஸலாம்**


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
**அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)**
அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
**அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)**

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்



**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை-625020.**

**அலுவலக அலைபேசி எண் :**
**94420 56547**
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com



**ஓராண்டு சந்தா ரூ.300/-**
**தனி இதழ் ரூ.25/-**

**விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :**
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
**M.MOHAMED ISMAIL**
S.B. A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003

**சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :**
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
**M.MOHAMED ISMAIL**
S.B. A/c No. 175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name : QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# திப்பு சுல்தான் அவதூறுகளும் பதில்களும்

"வரலாற்றுப் பேரறிஞர்"
செ.திவான் M.A.,M.Phil.,

" கன்னிப் பெண்கள் தம்புரான்களோ, நம்பூதிரிகளோ வருவதற்கு காத்துத் தவமிருந் தார்கள். மானம் பள்ளி அப்பன் நம்பூதிரி நாயர் குடும்பத்தைச் சேர்ந்த அம்மாளுக்குட்டியைக் கண்டு ஆசைப்பட்டார். அப்பன் நம்பூதிரிக்கு நாற்பது வயது தாண்டியிருந்தது. அம்மாளு அம்மாவுக்கோ பதினேழு வயது. (முன் குறிப்பிட்ட ஆங்கில நூல் பக்கம் 24).

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒழுக்கம் கெட்ட வள் என நம்பூதிரிப் பெண் ஒருத்தி விசாரணைக்கு உட்படுத்தப் பட்டாள். கேட்டவர் உள்ளம் திடுக்கிடும் வண்ணம் அவள் தன்னோடு பாலுறவு கொண்ட நம்பூதிரிப் பெரியவர்களின் பட்டி யலைச் சொன்னாள். (முதற் கூறிய ஆங்கில நூல் பக்கம் 59) இருபதாம் நூற்றாண்டின் துவக்கத் தில் நம்பூதிரிகளின் ஒழுக்கக் கேடுகள் இவ்வாறு இருந்தன என்று அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற பெண் எழுத்தாளரே தனது 'அக்னி சாட்சி' நாவலில் அம்பலப்படுத்துகிறார்.

மலையாள இலக்கிய உலகில் தலையாய ஒரு பெரும் புரட்சியை உருவாக்கியவர் சந்து மேனன். கேரளத்தில் உள்ள எடப்பாடி சந்து நாயர் கொடுங்கலூர் பார்வதி அம்மாள் மகளுக்குப் பிறந்தவர். 9.1.1847ல் பிறந்த இவரது வாழ்வு 7.9.1899ல் முடிந்தது.

தலைச்சேரி நீதி மன்றத்தில் ஆறாவது எழுத்தர், 1871ல் கள்ளிக்கோட்டையில் தலைமை முன்சீப். மலபார் மாவட்ட நடை முறை நூல் எழுதிய வில்லியம் லோகானுக்கு உதவி புரிந்தவர். மஞ்சேரி, பாலக்காடு, கள்ளிக் கோட்டை, ஒத்தப்பாலம், பர பனங்காடியில் பணியாற்றியவர். கி.பி.1890ல் மலபார் திருமண ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அதில் சர்.டி.முத்துசாமி அய்யர், சர் சங்கரன் நாயர். தலைசிறந்த இந்த அறிஞர்களுடன் இவரும் நியமிக்கப்பட்டார். அப்போது தான் கேரளத்தில் நாயர் குடும்பங் களின் திருமண முறை பற்றி விரிவாக எழுதி அதில் மாற்றம் தேவை என்று குறிப்பிட்டார்.

அப்புநெடுங்காடு என்ற முதல் மலையாள நாவலை

1887ல் எழுதியவர் குண்டலதா. இது மலையாள மொழியில் எழுதப்பட்ட நூல் அவ்வளவுதான். இதில் வரும் பாத்திரங்கள் மலையாளிகள் அல்லர், கதையும் மலையாளத்திற்கு வெளியே நடந்தது. கி.பி.1890 ஜனவரியில் சந்து மேனனின் 'இந்து லேகா' நாவல் வெளிவந்தது. மார்ச் மாதத்திற்குள் முதல் பதிப்பு விற்றுத் தீர்ந்தது. 1956க்குள் 53 பதிப்புகள் கண்ட இதன் சிறப்பை நீங்களே அறிந்து கொள்ளலாம்.

இந்த நாவல் சுருக்கத்தை பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை 1951ல் 62 பக்கங்களில் வழங்கினார். பின்னர் அதை 224 பக்கங்களில் அவரே விரிவாகத் தந்தார் என்றாலும் இந்த நாவலின் மலையாள மூலத்தை தமிழில் இளம் பாரதி தந்தது. 1994ல் 475 பக்கங்களில் 20 அத்தியாயங்களைக் கொண்ட இந்த நாவலில் 11வது அத்தியாயத்தில் நம்பூதிரிப்பாடைப் பற்றி மக்கள் பேசிக் கொண்டது வருகிறது. இவர் (நம்பூதிரிபாடு) மகா ஏமாத்துப் பேர்வழி, ஒரு இருபது பொம்பளைகளோடு இப்போது தொடர்பு உண்டு. இந்த ரெண்டு மாசத்திலேயே ரெண்டு பொம்பளைங்க (இந்துலேகா, 1994 பக்கம் 194).

நம்பூதிரிபாடு : நான் வந்தப்போ கீழே வந்திருந்தே இல்லே? பார்த்த மாதிரி இருந்தது என்று சொல்லி கன்னம் கவிந்து நீண்டதாக ஒரு புன்னகை புரிந்தார்.

இந்துலேகா: நான் அப்போது கீழே இல்லை 'நான்' என்று பேசத் தொடங்கியதும் நம்பூதிரி பாடு விதிர்த்துப் போனார். ஒரு நாயர் பெண் தன்னுடன் இப்படி சரிக்கு சரி இதுவரை பேசியதில்லை (நூல் பக்கம் 200) இது 1890ல் சந்துமேனன் காட்டும் இந்து லேகா நாவல் தரும் கேரள நாயர் பெண்களின் உரிமையற்ற நிலை. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இதே காலகட்டத்தில் வெளிவந்த நூல் Hindu Manners, customs and ceremonies by Abbe J.A.Dubois. Edited with notes, corrections and biography By Henry K.Beauchamp, Fellow of the University of Madras. Fellow of the Royal Historical Society, Member of the Royal Asiatic Society with a prefatory note by Hon. F.Max mueller and a portrait, Third Edition, Oxford, 1906.

இந்த நூலின் முதல் பதிப்பு 1897ல் வெளிவந்தது. இதே ஆங்கில நூலை ஜி.யூ.போப் சில திருத்தங்களுடன் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். A description of the character, manners and customs of the people of India and their institutions, religious and civil. Abbe J.A.Dubois. Translated from the French manuscript with notes. corrections and additions by Rev.G.U.Pope, Third Edition, AES New Delhi,

1989. 1879ல் சென்னை ஹிக்கின் பாதம்ஸ் இந்த நூலின் மூன்றாவது பதிப்பை வெளியிட்டது. அதன் பிரதியை அப்படியே 1989ல் AES Asian Education Services நிறுவனம் தந்தது.

என்னப்பா ஒரு புத்தகம் வெளி வந்தது பற்றி இப்படி வளவள என்று எழுதுகிறாயே என்று எண்ணி விடாதீர்கள். முதலில் சொன்ன Henry K.Beauchamp நூலில் சில முக்கியப் பகுதிகளை பிந்தைய G.U.Pope நூல் நீக்கி விட்டது என்பதற்காகத்தான் இரண்டு பதிப்புகளைப் பற்றி விளக்கமாகச் சொன்னேன். அந்த நூல் என்ன? எழுதியவர் யார்? சற்று விரிவாகவே பார்ப்போம். இந்திய மக்கள் பழக்க வழக்கங்கள், சடங்குகள், நிறுவனங்கள் அபே.ஜெ.எ. துபுவா விளக்கக் குறிப்புகள், திருத்தல்கள், சேர்க்கைகள், ஜி.யூ.போப். தமிழாக்கம் வி.என். ராகவன். அலைகள் வெளியீட்டகம், சென்னை 2008ல் 454 பக்கங்களில் ரூ.230 விலையில் வெளியிட்டது.

அபே ஜெ.எ.துபுவா பிரஞ்சுப் பாதிரியார். இந்த நூலை ஆங்கில மாக்கியவர் ஹெச்.கே.பீன் காம்ப் இதற்கு உதவியர் சென்னை சி.வி.முனிசாமி ஐயர். 1906ல் மூன்றாவது பதிப்பாக வந்த நூல் 741 பக்கங்களைக் கொண்டது. முதல் பதிப்பு 1807ல் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் வெளியிட்டுள்ளது. ஆனால் ஜி.யூ.போப்பின் மொழிபெயர்ப்பு 1816ல் வெளி வந்தது. 1862ல் இரண்டாவது பதிப்பு. மூன்றாவது பதிப்பு 1879. இந்த நூலில் பல பகுதிகள் நீக்கப் பட்டுள்ளன. இரண்டு பதிப்பகத் தாலும் நீக்கப்படாத பகுதிகள் சொல்கின்ற விஷயங்கள் இதோ.

'நாயர்கள் என்று அழைக்கப் படுவோரை மலபார் மாவட்டம் தவிர வேறெங்கும் காணமுடியாது. இந்த வகுப்பினரின் பெண்கள் பல கணவன்மார்களை திருமணம் செய்ய முடியும். போப் மொழி பெயர்த்த நூலில் இதன் ஆங்கிலம். I am not aware, for example that the very remarkable caste of Naymars or Nayars in which the women enjoy a plurality of husbands is to be found anywhere but in the forest of the coast of Malabar' (Page 3)

Plurality பேரெண்ணிக்கை, கூட்டம், திரள், சென்னை பல்

---

**அல்லாஹ் ஒருவனே நமக்கு பாதுகாவலன்**

அல்லாஹ்வின் தூதர் ( ஸல் ) அவர்கள் கூறினார்கள் : "மண்ணறை நெருக்கும் பண்புடையது. அதனுடைய நெருக்கத்திலிருந்து யாரேனும் ஒருவர் தப்பிப்பதாக இருந்தால்; எனது தோழர் ஸஅத் பின் முஆத் அதிலிருந்து தப்பித்திருப்பார். (ஆனால் அவரையும் மண்ணறை நெருக்கியது.)

அறிவிப்பவர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்,
(நூல் : தஹதீபுல் ஆஸார் – 797)

கலைக்கழகம் அகராதி பக்கம் 748)

Henry K.Beauchamp நூல் பக்கம் 16 முன் சொன்ன போப் மொழிபெயர்த்த நூலில் நீக்கப் பட்ட பகுதி இதோ,

Amongst these same people, again, is another distinct caste called Namboodiri which observes one abominable and revolting custom. The girls of this caste are usually married before the age of puberty, but if a girl who has arrived at an age when the signs of puberty are apparent happens to die before having had intercourse with a man, caste custom rigorously demands that the inanimate corpse of the deceased shall be subjected to a monstrous connexion . For this purpose the girl's parents are obliged to procure by a present of money some wretched fellow willing to consummate such a disgusting form of marriage; for were the marriage not consummated the family would consider itself dishonoured. (Pages 16 & 17)

நம்பூதிரி என்ற ஒரு வகைச் சாதியினர் வெறுக்கத்தகுந்ததும் அதிர்ச்சியூட்டும் ஒரு வழக்கத்தை கடைப்பிடிக்கிறார்கள். இந்தச் சாதியைச் சேர்ந்த பெண்கள் பருவம் அடையும் முன்பே திருமணம் செய்விக்கப்படுகிறார்கள். ஆனால், ஒரு பெண் பருவமடைந்ததற்கான அறிகுறிகள் காணப் படும் வயதுவந்துயாருடனும் உடலுறவு கொள்ளாத நிலையில் இறக்க நேரிட்டால் அந்த இறந்த பெண்ணின் உயிரில்லாத சடலம் அரக்கத்தனமாக தொடர்புக்கு ஆளாக்கப் பட வேண்டும் என்பது அந்த ஜாதியின் கடுமையான வழக்கமாகும். இதற்காக அப்பெண்ணின் பெற்றோர் இந்த வெறுப்பூட்டத்தக்க திருமணத்தை நிறைவேற்ற விருப்பமுள்ள ஏழை எவனையாவது பணம் கொடுத்து வரவழைக்கிறார். ஏனெனில் இந்தத் திருமணம் இப்படி நிறைவேறவில்லையெனில் அவர்களின் குடும்பமே அவமதிப்பிற்குள்ளாகும். (இந்துக்களின் பழக்க வழக்கங்களும் சடங்குகளும், மூலம் அ.பே. டியுபா உரை தமிழ் மணி, சீதை பதிப்பகம் சென்னை, 2012 பக்கம் 7, 8)

அ.பே.டியுபா இன்னும் எழுதுகிறார்.

I have seen Brahman women on the coast of Malabar, who together with the women of other castes of that country, always appeared with their bodies half naked.

மலபார் பிரதேசத்தில் பிராமணப் பெண்களும் வேறு சாதிப் பெண்களும் தங்கள் உடல் பாதி நிர்வாணமாகவே வைத்துள்ளனர். இடுப்பு வரை உடலை மூடுவதில்லை. (டியுபாவின் நூல், வி.என். ராகவன் மொழிபெயர்ப்பு பக்கம்

இறைவன் அருளால்... தொடர்ந்து 15-ஆம் ஆண்டு சேவையில்....

العرفة لخدمات الحج والعمرة

الحج العرفة

ஹஜ் என்றாலே அரஃபா தான்

# அல் அரஃபா ஹஜ் சர்வீஸ்

# AL ARAFAH HAJJ SERVICE

சென்னை, மயிலாடுதுறை, சீர்காழி, திருச்சி, கும்பகோணம், கள்ளக்குறிச்சி, லட்சுமாங்குடி, திருப்பூர்

புனித

# உம்ரா

அல்லாஹ்வின் விருந்தினர்களுக்கு

என்றும் அன்பான உபசரிப்பு

தமிழகத்தின் முன்னணி உலமாக்களின் வழிகாட்டுதலுடன்...

ரூபாய்

89,000/-

மட்டும்

பயணங்களுக்கு முன்பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

நிறுவனர் & வழிகாட்டி : அல்ஹாஜ் எஸ்.முஹம்மது யூசுப்

Vice President : Haj Umrah Pvt., Tour Operators Association

Email : hajjalarafah@gmail.com

எண்.684, (1, மசூதி காம்ப்ளக்ஸ்) பூந்தமல்லி நெடுஞ்சாலை,

அமைந்தகரை, சென்னை - 600 029.

Mobile : 98400 90067

208) அ.பே.டியுபா தனது நூலில் கூறிய செய்திகளை உண்மை என்பதற்கு சான்று திருக்குறளி லேயே உள்ளது.

“பொருட்பெண்டிர் பொய்ம்மை மயக்கம் இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ அற்று” (913)

இந்தக் குறளுக்கு தமிழ் மரபுரைத்த மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் கீழ்க் கண்டவாறு விளக்கம் தருகிறார்.

‘இதே மக்களிடையே இனி அருவருப்பானதும் வெறுப் புண்டு பண்ணுவதுமான ஒரு வழக்கத்தைக் கொண்ட நம்பூதிரி என்னும் ஒரு தனிக்குலமே உள்ளது. இக்குலப்பெண்கள் வழக்கமாக பூப்படையும் முன் மணஞ் செய்து வைக்கப்படு கின்றனர். ஆயின் பூக்குறிகள் வெளிப்படையாகத் தோன்றும் பருவத்தை அடைந்த பெண் ஆடவனோடு கூடுமுன் இறக்க நேரின் அவள் சவ உடம்பைப் பேய்த்தனமாக புணர்ச்சிக்குட் படுத்த வேண்டுமென்பது கண்டிப்பான குலமரபாம். இதன் பொருட்டு அப்பெண்ணின் பெற்றோர் அத்தகைய அருவருப் பான மணவகையை முற்று வித்ததற்கு இசையும் ஒரு வெங்கப்பயலைப் பணப் பரிசு கொடுத்து அமர்த்த வேண்டியுள் ளது. ஏனெனில் அம்மணம் முற்றுவிக்கப்பெறாவிடில் அக் குடும்பம் தன்மானத்தை இழந்து விட்டதாக கருதிக் கொள்ளும் இந்தப் பழக்கம் 20ஆம் நூற்றாண் டின் முற்பகுதியில் நின்று போயிருக்கலாம். ஆனால் 18ஆம் நூற்றாண்டில் 19ஆம் நூற்றாண் டில் அது இருந்திருக்கிறது.

இந்திய ஆரியப் பூசாரியாக முதற்காலத்தில் பல அருவருப் பான சடங்குகளை ஆற்றிவந் தமை சென்ற நூற்றாண்டில் மார்க்க சகாய ஆசாரியர் வெளி யிட்ட சித்தூர் அதாலத்துக் கோர்ட்டுத் தீர்ப்பு என்றுஞ் சுவடியினின்று தெரியவருகிறது என்று நம்பூதிரிகளின் ஒருகுருப் பாரிடம் கொடிய வழக்கம் இருந் ததை தேவநேயப் பாவாணர் உறுதிப்படுத்துவார்.

72 பக்கங்களில் 1818 டிசம் பரில் வெளிவந்த நூல் சித்தூர் ஜில்லா அதாலத்து கோர்ட்டா ருடைய தீர்மான அசலுக்கு சரியான நகல் என்று வந்தது டேக்கர் துரை கொடுத்த தீர்ப்பு இது.

**மதுமாமிச பக்ஷணம்**

லாகிரியிருலே ஸ்மாரகந் தப்பி ஆணும் பெண்ணும் ஏகமாய் விழுந்து கிடப்பார்கள். அந்தச் சமயத்திலே விப்பிர ராகிய குருக்கள் எந்தஸ்திரியை அனுபவித்தாலும் தோஷமில்லை யென்று வியாச பகவான் தர்ம சாஸ்திரத்திற்கு சொல்லியிருக் கிறார் என்று தனக்கு இஷ்டமான ஸ்திரீகளை அனுபவிப்பார்கள் (பழைய நூல் பக்கம் 42) தென் னிந்தியக் குலங்களும் குடிகளும்

என்ற நூலை எழுதியவர் எட்கர் தர்ஸ்டன். ஏழு தொகுதிகளைக் கொண்ட அந்த நூலில் அதில் ஐந்தாவது தொகுதியில் நாயர்கள் நம்பூதிரிகளைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

கி.பி.1885ல் சென்னை அருங்காட்சியகத்தில் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட இவர் தென்னிந்தியாவின் சாதிகள் குறித்து விரிவாகவே எழுதியுள்ளார். 1909களில் அது ஆங்கிலத்தில் வெளிவந்தது. அதனை தமிழில் 1986ல் இருந்து தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடர்ந்து வெளியிட்டது. க.ரத்னம் மொழிபெயர்த்தார். ஆங்கில நூலில் 5வது தொகுதியில் 152வது பக்கம் முதல் 241வது பக்கம் வரை நம்பூதிரிப் பிராமணர் பற்றிய குறிப்புகளும் தமிழ் நூலில் 160வது பக்கம் முதல் 247வது பக்கம் வரையிலும் பார்க்கலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஹாமில்டன் 'நம்பூதிரிகள் சமயம், அரசு ஆகிய இரு துறைகளிலும் மேலாண்மை உடையவர்களாக விளங்குவதோடு, சிலர் சமயத் தலைவர்களாகவும், ஆட்சித்தலைவர்களாகவும் ஒருங்கே செயல்படுகின்றனர் எனக் கூறியுள்ளனர். (A New Account of the East Indies 1744)' மணமாகாதவர்களாக இறக்கும் நம்பூதிரிச் சிறுமியரும் பெண்களும் திருமணத்தின் சாயல் ஏதும் அவர்கள் மீது படாதபடி இவ்வுலகத்தை விட்டுச் சென்று விட அனுமதிக்கப்படுவதில்லை. நம்பூதிரிகளிடையே குழந்தை மணம் வழக்கிலில்லை என்று உறுதியாகக் கூறுவதற்கு இல்லை. நம்பூதிரிச் சிறுமியர் பூப்படையும் முன் திருமணம் செய்விக்கப்படுகின்றனர். ஓரிரு திருமணங்கள் குழந்தைமணங்களாக நடைபெற்றுள்ளன என்று நீதிபதி கே.நாராயணமாரார் கூறியுள்ளார். (Mr.Justice K.Narayan a Marar, Malabar Quarterly Review 1,1,1902)

நம்பூதிரிகள் ஒரு திருமணத்தில் உறுதியாக நிற்பவர்கள் அல்லர். ஓர் ஆண் நான்கு மனைவியர் வரை மணந்து கொள்ளலாம் எனச் சிலர் கூறுகின்றனர். ஒருவன் நாயர் பெண்களுடன் கொள்ளும் உறவிற்கு வரையறை ஏதுமில்லை.

*(தொடரும்)*


**குர்ஆனின் குரல்**

எமது புதிய தபால் பெட்டி எண் : **45,**

மேலமடை, **மதுரை-625020.**

# பள்ளியில் கடைபிடிக்க வேண்டிய முறைகள்!

- முதலில் பள்ளிக்குள் வந்ததும் செல்போனை ஆஃப் (அல்லது) ஸைலன்ஸ் செய்திடுங்கள்.
- ஜமாஅத் தொழுகைக்கு முந்துங்கள்.
- தொழுகையில் நிற்கும் போது தோள், குதிங்கால் (சரி பார்த்து) இடைவெளி இல்லாமல் நெருக்கமாக நில்லுங்கள்.
- தொழுகையில் முன் வரிசையில் நிற்க முந்திச் செல்லுங்கள்.
- தொழுகையில் இமாமை முந்தாதீர்கள்.
- இறையச்சத்தோடு தொழுதிடுங்கள்.
- சுன்னத் தொழுகையை சரிவரக் கடைபிடியுங்கள்.
- பள்ளியில் வீண் பேச்சைத் தவிர்த்து மார்க்கப் பேச்சை மட்டுமே பேசுங்கள்.
- பள்ளியில் தண்ணீரை வீண் விரயம் செய்யாதீர்கள்.
- பாங்கு சொல்லும்போது பேசாதீர்கள்; மாறாக பாங்கிற்கு பதில் சொல்லுங்கள்.
- இகாமத் சொல்வதற்கு முன் தொழுகைக்கு விரைந்து வாருங்கள்.
- தொழுது கொண்டிருக்கும் போது குறுக்கே செல்லாதீர்கள்.
- வரிசையில் இருப்பவரை தாண்டி முன்னே செல்லாதீர்கள்.
- காலணிகள் அணிவதில் (சுன்னத்தை) கவனமாகப் பேணுங்கள்.
- ஜும்ஆ உரை நடக்கும் போது உறங்காதீர்கள்.
- ஜும்ஆ உரை நடக்கும் போது மவுனமாக இருந்து கேளுங்கள்.
- ஜும்ஆ பாங்கு சொல்லுவதற்கு 20 நிமிடத்திற்கு முன்பாகவே பள்ளியில் வந்து 2 ரக்அத் தொழுது விட்டு அமருங்கள்.
- கடமையான தொழுகை முடிந்தவுடன்; ‘சில திக்ர், சூரா’க்கள் உள்ளன. அதை ஓதி விட்டுப் பிறகு துஆ செய்யுங்கள். இது நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த வழிமுறையாகும்.

# "நா"பயணம் நரக சயனம்

நரம்பில்லாத நாக்கு நரகத்திற்கு கூட அழைத்துச் செல்லும்!

ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் தமது அருமைத் தோழர் ஹள்ரத் முஆத் (ரளி) அவர்களிடம் தம் நாவை பிடித்துக் காட்டி "இதனை உன் கட்டுப்பாட்டில் வை" என்றார்கள்.

"நாம் அடையும் தண்டனைக்கு நாவும் காரணமாகுமா?" என்று ஹள்ரத் முஆத் (ரளி) அவர்கள் கேட்டார்கள்!

"மறுமையில் மனிதர்களை நரகில் முகங்குப்புற தள்ளுவதில் நாவு அறுவடை செய்தவைகளின் காரணமும் உண்டு!" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நாவு மனிதனுக்கு அல்லாஹ் அருளிய மிகப்பெரும் பாக்கியமாகும்! அதிலும் தெளிவோடும் விளக்கத்தோடும் பேசுகிற ஆற்றல் மிக்க நாவு அளவில்லாத பாக்கியமாகும்!

அனைத்து ஜீவராசிகளையும் அல்லாஹ் நாவோடுதான் படைத்துள்ளான். ஆனால் அவைகளால் விளங்கும்படி பேச முடியாது. மனிதன் மட்டும் பேசுகிறான். இனிமையாக வசீகரமாக பாடுகிறான்.

**"அவனே மனிதனைப் படைத்தான். அவனே மனிதனுக்கு விளக்கமாக பேசவும் கற்றுக் கொடுத்தான்".**

-அல்குர்ஆன் (55:3.4)

நாவு அரை அங்குலம் தான்! அது ஆறடி மனிதனையும் வீழ்த்தி விடும். நாவு அகிலத்தையும் ஆள வைக்கும் ஆற்றலுடையதாகும். இரு செவிக்கு ஒரு நாவு தான். எனவே பேசுவதை விட கேட்பதையே நாம் விரும்பிட வேண்டும். பேசாமலிருக்கும் வரை சொல்லுக்கு நாம் அரசன்! பேசிவிட்டால் பேச்சுக்கு நாம் அடிமை! எனவே தான் நாவைச் சுற்றி பற்களால் இறுக்கமான அரண் அமைத்து மேலும் கீழும் உறுதியான தாடை கொண்டு அமுக்கி அதற்கு வெளியே வாயை பூட்டப்படுகிறது! அப்படியிருந்தும் இத்தனை பாதுகாப்பு வளையங்களையும் தாண்டி நாக்கு வெளியே வந்து வம்பு பேசுகிறது.

"ஆட்டை அறுத்து அதில் சுவையான பகுதியை எடுத்துக் கொண்டுவா!" என்று எஜமானன் தனது அடியாளிடம் கூறினான்! அந்த எஜமான் சொன்னபடி ஆட்டை அறுத்து அதன் நாவை எடுத்து வந்தான் அடியாள்! பின்னா் "ஒரு ஆட்டை அறுத்து அதில் வெறுப்பான கசப்பான ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு வா" என்று எஜமானன் மீண்டும் சொன்னான். அந்த அடியாளோ மீண்டும் ஆட்டை அறுத்து "நாவை"யே கொண்டு வந்தான்!

அதிர்ச்சியடைந்த எஜமானன் "என்னடா, முதலில் நான் கேட்டபோதும் நாவையே கொண்டு வந்தாய்! மீண்டும் அதுபோலவே நாவைக் கொண்டு வந்திருக்கிறாயே!" என்று கேட்டான்.

அதற்கு "எஜமானரே! நாவு தான் நல்லவற்றையும் சொல்கிறது! நல்லவற்றை கூறிடும் நாவு பொய் பித்தலாட்டங்களையும் சொல்கிறது! எனவே சுவை தரும் நாவே கசப்பையும் தருகிறது.

ஆகவேதான் சுவையானதும் அது தான். கசப்பானதும் வெறுப்பானதும் அதே நாவு தான்" என்றார். அடிமை பெண்களின் ஆயுளில் பாதியையும் நன்மையில் முழுவதையும் நாவு களவாடி விடுகிறது.

பெண்+புறம் = பின்புறம் பேசுதல் என்று அகராதியில் இல்லாத இலக்கணமாக பெண்களின் பேச்சுவுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் தமது அருமை மகளார் பெண்குலம் சிறக்க வந்த வனிதையர் திலகம் அன்னை ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்களிடம் "என் அருமை மகளே! நான் மிஃராஜுக்கு சென்றிருந்த போது நரகில் பெண்கள் அதிகம் வேதனை செய்யப்படுவதைக் கண்டேன்!" என்றார்கள்.

"பெற்ற பிள்ளைகளை திட்டுவதாலும் கணவரிடம் 'உன்னிடம் என்ன பலன் கண்டேன்' என்று கூறுவதே அப்பெண்கள் நரக வேதனையை அனுபவிப்பதின் காரணமாகும்!" என்றும் காருண்ய நாதர் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்.

ஒவ்வொரு ஊரிலும் பள்ளி வாசல் திண்ணைகளிலும் சோம்பேறிகள் மடம் - பித்னா சபை என்று அடிக்கடி கூடி "சுவை"யான தகவல்களை பரிமாறிக் கொள்வார்கள்!

அந்த சபையில் பரிமாறப்படும் கருத்துக்களின் கதாநாயகர்களாக பெரும்பாலும் அப்பள்ளியின் இமாம் - முஅத்தின்-நாட்டாண்மைகள் ஆக்கி

விலாவாரியாக பேசப்படும். சோம்பேறிகளின் நாவு சும்மா இருக்குமா? சொறியனின் கை தான் சும்மா இருக்குமோ?

அறிவின் தலைவாசல் ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறினார்கள்!

உள்ளம் நான்கு விஷயங் களைக் கொண்டு மரணமா கிறது!

1. தேவையின்றி பேசுவது, 2. முட்டாள்களுடன் அமர்ந் திருப்பது, 3. அதிகம் சிரிப்பது, 4. சந்தேகமானவற்றை சாப் பிடுவது!

வெற்றியடைந்த விசுவாசி களை அல்லாஹ் யாரென்று கூறுகிறான் : இதோ "அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் தம் தொழுகையை உள்ளச் சத்தோடு தொழுவார்கள். வீணான (அக்) காரியங்களி லிருந்து விலகி இருப்பார்கள்.

(அல்குர்ஆன் 23:2,3)

ஒருவனுக்கு வாயிலிருந்து தப்புதப்பாக கெட்ட வார்த்தை வருவதற்கு காரணமே கோபம் தான்! கோபம் மிகைத்து விட்டால் என்ன வார்த்தையை பேசுகிறோம் என்பதனைக் கூட உணராமல் ஆகி விடு கிறான்.

"கோபமூட்டப்பட்ட சமயத்திலும் கோபமூட்டிய வரை மன்னிப்பார்கள்".

(அல்குர்ஆன்)

"கோபத்தை அடக்குவது பெரிதல்ல! கோபமூட்டிய வரை மன்னிப்பதே முஃமி னின் அடையாளம்" என்று அல்லாஹ் கூறுகிறான்.

தன்னிடம் கடன்பட்ட ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர் களைப் பார்த்து ஒரு யூதன் வரைமுறையின்றி திட்டிக் கொண்டேயிருந்தான். ஹள் ரத் ரசூலே அக்ரம் (ஸல்) அவர்கள் தன் முகத்தில் புன் னகை பூக்க புன்சிரிப்போடு பார்த்துக் கொண்டேயிருந்தார் கள். இந்நிலையில் யூதனின் பேச்சு அளவு கடந்த போது அமைதி காத்த அண்ணலின் அருந்தோழர் ஹள்ரத் அபூ பக்கர் சித்தீக் (ரளி) அவர் களும் யூதனை திட்டி ஏச ஆரம்பித்தார்கள். அச்சமயம்

## பிறரை கேவலமாக எண்ணாதிருத்தல்!

"தனது சகோதர முஸ்லிம் ஒருவனை கேவலமாக எண்ணுவது அவன் கெட்டவன் என்பதற்கு போதுமான (அடையாளமா)கும்" என நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்,

(ஆதாரம் : முஸ்லிம்)

பெருமானார் (ஸல்) அவர்கள் கடுத்த முகத்துடன் அவ் விடத்தை விட்டு அகன்றார்கள்.

இதனை கூர்ந்தறிந்து கொண்ட ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள் "யா ரசூலல் லாஹ்! என்னை யூதன் திட்டும் போது அமைதியாக காணப்பட் டீர்கள்! நான் அந்த யூதனை திட்ட ஆரம்பித்ததும் அவ் விடத்தை விட்டும் வெறுப் புடன் அகன்றீர்களே! அதற்கு காரணமென்ன?" என்று கேட்ட போது,

"யூதன் உங்களை திட்டிய ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு வானவர் அந்த யூதனை திட்டி சபித்துக் கொண்டே இருந்தார். நீர் யூதனை திட்ட ஆரம்பித்தவுடன் உம்மின் சார்பாக சபித்துக் கொண்டி ருந்த வானவர் சென்று விட் டார்" என்றார்கள்.

உண்மையிலும் உண்மை! வாய் புளித்ததா! மாங்காய் புளித்ததா! என்று வீடுகளில் மாமியார்கள் மருமக்களை திட்டி தீருவதையும் சபிப்பதை யும் மருமக்கள் மாமியாரை திட்டுவதையும் கேள்விப் படுகிறோம். நாம் பேசுகிற ஒவ்வொரு பேச்சும் விடுகின்ற மூச்சும் கிராமுன் - காத்தபீன் என்ற இருமலக்குகளால் பதிவு செய்யப்பட்டுக் கொண்டே யிருக்கிறது. வீணாக யார் யார் பேசினார்களோ திட்டினார் களோ அவர்களின் நன்மைகள் ஏச்சும் திட்டும் பட்டு பொறு மையோடு "யா அல்லாஹ் நீ கேள்" என்று பொறுமை காத் தார்களோ அவர்களிடம் பிடுங்கி கொடுக்கப்படும்! நன்மை களை பறி கொடுத்த பாவிகள் நரகின் எரி கொள்ளிக் கட்டை களாக ஆகி விடுவர் என்று ஹதீஸ் எடுத்துரைக்கிறது.

"உங்களின் நாவுகளை அல்லாஹ்வை திக்ரு செய்வதில் நனையச் செய்யுங்கள்!" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நாவை பேணு வோம்! நரகத்திலிருந்து விடு தலை பெறுவோம்!

---

**சகோதர முஸ்லிமை கேவலமாகக் கருதுவது கெட்ட செயலாகும்!**

"ஒரு முஸ்லிம் (மற்ற முஸ்லிமுக்கு) சகோதரராகும். அந்த சகோதரரை மோசடி, பொய் மூலம் ஏமாற்றாதீர்கள். அவருடைய மானத்தைக் கெடுத்து பொருளை அபகரித்து கொலை செய்வது தடுக்கப்பட்டதாகும். அவரை கேவலமாகவும் மதிப்பது கெட்ட செயலாகும்."

(ஆதாரம் : திர்மிதீ)

# துஆ மஜ்லிஸ்

## குழந்தை பாக்கியம் பெற

என்னுடைய மகனார் **N.M.சிஹாபுதீன் – நஸ்ரீன் நிலோஃபர்** தம்பதியினர் விரைவில் குழந்தை பாக்கியம் பெற்று, சாலிஹான குழந்தை பிறந்து, கவலை நீங்கி, மகிழ்ச்சியுடன் வாழ வல்ல ரஹ்மானிடம் துஆ செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**- எம்.நூர் முஹம்மது**, சென்னை.

சப்ரின் - பெங்களூர்; முஹம்மது யூசுப் - மதுரை; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; நாகூர் மீரான் - மானூர்; கம்பத்து அப்துல் பாரி - பள்ளபட்டி; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; குரல் வாசகி - தஞ்சாவூர்; எம்.சுல்தான் - திருச்சி; எம்.ஷானவாஸ் - சவூதி; எல்.ரேஷ்மா - சவூதி; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, அப்துஸ் ஸலாம் - மதுரை; மும்தாஜ் பேகம் - தஞ்சாவூர்; ஹாஜரா - கர்நாடகா; குரல் வாசகி - கர்நாடகா; சந்தா எண் L 1262 - சக்ரபாட்னா; அ.சம்சாத் - பெங்களூரு; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; எம்.முஹம்மது இப்ராஹீம் - அரவாக்குறிச்சி; சந்தா எண் L 407 - சென்னை; சந்தா எண் H 1731 - கீழ்க்கரை; எல்.எஸ்.கமால் பாட்சா - புதுக்கோட்டை; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; கே.ஏ.முஹம்மது ரபியுதீன் - பள்ளபட்டி; சந்தா எண் F 595 - திருச்சி; ரஷாத் - தஞ்சாவூர்; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா - செட்டியார்பட்டி; குரல் வாசகி - பெரியகுளம்; எம்.சையது - பெரியகலையம்புத்தூர்; எஸ்.நூருன்னிஸா - தஞ்சாவூர்; செல்லபா, எஸ்.கோரிமா, எஸ்.சிக்கந்தர் பாஷா - விராதனூர்; மன்சூர் - புதுஆயக்குடி; பி.சுபைதா - சோழமாதேவி; சல்மா பீவி - நீடாமங்கலம்; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; எஸ்.ஹஸன் பானு - தஞ்சாவூர்; ஏ.மஹபூபுன்னிஸா - தஞ்சாவூர்; அன்சாரி - உடுமலை; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; சபினா ஆஸ்மி, முஹம்மது காமில் - இராமநாதபுரம்;

எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; லைலா பேகம் - இராஜபாளையம்; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; முஹம்மது ரஃபீ, ஷமீமா, அய்மன் முஹம்மது, அர்ஹம் முஹம்மது - சவூதி; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; அஷ்ரஃப் நிஸா, அப்துல் காதர், அப்துல் பாஸித் - R.S.மங்கலம்; ஜவாஹிர் பேகம் - மதுரை;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

என் மகளுக்கு திருமணம் நடைபெற துஆ மஜ்லிஸில் துஆ செய்யக் கேட்டிருந்தேன். வல்ல அல்லாஹ்வின் அருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் அனைத்து நல்லோரின் துஆவினாலும் சிறப்பான முறையில் திருமணம் நடைபெற்றது. அல்ஹம்து லில்லாஹ்! அனைவருக்கும் நன்றி! நன்றி!

**அ.மதீனா பேகம்** - கோவை.

வல்ல ரஹ்மானின் பேரருளால் என் தாயார் வீட்டில் சொந்த ஊரில் சொந்தமாக வீடு வாங்கி விட்டார்கள். மிக்க மகிழ்ச்சி! வீடு வாங்க துஆ செய்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஜஸாக்கல்லாஹு கைரன்!

**கே.எம்.லியாகத் அலீ** - கர்நாடகா.

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி மர்ஹூம் முஹம்மது இப்ராஹீம் (ரஹ்) அவர்களின் அன்பு மனைவியும், மதுரை மஹபூப் பாளையம் ஜனாப் அப்பாஸ் அவர்களின் அருமைத் தாயாருமான ஜனாபா ரோஜா (எ) ஆமினா பீவி அவர்கள் 02.09.22 அன்றும்,

இராமநாதபுரம் மாவட்டம் R.S.மங்கலம் மர்ஹூம் செ.கா.மீ.இஸ்மாயீல் (ரஹ்) அவர்களின் அன்பு மகனார் ஜனாப் இ.சாகுல் ஹமீது அவர்கள் 24.09.22 அன்றும்,

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் ஜாவியா மதரஸாவின் செயலாளர் அல்ஹாஜ் காக்கா அவர்கள் 03.11.22 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி சூலப்புரம் மர்ஹூம் ஹபீபுர் ரஹ்மான் (ரஹ்) அவர்களின் அருமை மகனார் சூலப்புரம் ஜனாப் சித்தீக் அவர்கள் 04.11.22 அன்றும்,

குர்ஆனின் குரலின் நீண்டகால வாசகரும், விருத்தாசலம் டவுன் ஜும்ஆ பள்ளிவாசலின் இமாமுமான மவ்லானா மவ்லவீ V.சவுக்கத் அலீ ஜைனீ ஹள்ரத் அவர்கள் 05.11.22 அன்றும்,

பெங்களூர் பள்ளபட்டி மோதி அல்ஹாஜ் ஹபீபுர் ரஹ்மான் அவர்களின் அருமை தாயாரும், மோதி அல்ஹாஜ் மர்ஹூம் M.M.அப்துர் ரஷீது (ரஹ்) அவர்களின் அன்பு மனைவியுமான அல்ஹாஜ்ஜா கதீஜா பீவி அவர்கள் பெங்களூரில் 06.11.22 அன்றும்,

"அல்முஜய்யன் முதஷாபிஹாத்துல் குர்ஆன்" ஆய்வு நூலின் ஆசிரியரும், தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் அம்பல மரைக்காயர் தெருவைச் சேர்ந்தவருமான மவ்லானா அல்ஹாஃபிழ் சோனா ஏ.ஷேக் அப்துல் காதிர் ஹள்ரத் அவர்கள் 13.11.22 அன்றும்,

சென்னை சித்தாலப்பாக்கம் ஹவுஸிங் போர்டு "மஸ்ஜித் பிலால்" இமாம் மவ்லானா ஸைய்யத் அலீ மிஸ்பாஹி ஹள்ரத் அவர்களின் இரண்டு வயது மகன் முஹம்மது ஆகிஃப் 17.11.22 அன்றும்,

## வல்ல ரஹ்மானே! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

# வாசகர் வட்டம்




குர்ஆனின் குரல் கிடைத்தவுடன் முதலில் படிப்பது கேள்வி - பதில் பகுதியே! வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு தெள்ளத் தெளிவாக விளக்கம் தருகிறார் முஃப்தீ! முஃப்தீ ஹள்ரத் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்! வல்ல அல்லாஹ் அவர்களுக்கு எல்லா நலன்களையும் தந்தருள்வானாக.

**A.ஹஸீனா,**
**திருச்சி.**

நவம்பர் மாத இதழில் மவ்லானா ஜே.எம்.ஜம்பை ஜப்பார் ஹள்ரத் எழுதிய கட்டுரை மிகவும் அருமையாக இருந்தது. ஹள்ரத் அவர்களின் எழுத்தாற்றல் மென்மேலும் சிறக்க துஆ செய்கிறேன்.

**K.முஹம்மது யூனுஸ்**
**மேட்டுப்பாளையம்.**

அரசியலைப் பற்றி ஒன்றுமே தெரியாத எனக்கு, செய்திக்கலவை பகுதியை படிப்பதால் அரசியல் செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மொத்தத்தில் குர்ஆனின் குரல் பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் அரிய பொக்கிஷம்!

**கா.அப்துல் சத்தார்**
**கோயமுத்தூர்.**

ரஞ்சித் லால் மாதவன் மலையாளத்தில் எழுதி, அஷ்ஷைக் முஹம்மது முஹ்யித்தீன் மதனீ தமிழில் தந்த "முஸ்லிம்களை மட்டும் ஏன் உலகமே இவ்வளவு எதிர்க்கிறது?" கட்டுரை சரியான நேரத்தில் வெளியாகியிருந்தது. முஸ்லிம்களை, முஸ்லிம் அல்லாதோர் எதிர்க்கக் காரணம் என்ன? என்பதை மிகத் தெளிவாகக் கட்டுரையில் கோட்டிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

மலையாளத்தில் கட்டுரை எழுதியவருக்கும், தமிழில் மொழியாக்கம் செய்தவருக்கும், வெளியிட்ட குர்ஆனின் குரலுக்கும் நன்றியோ நன்றி!

**ஜே.பிரேம லதா எம்.ஏ.,**
**நாகர் கோவில்.**

## பாரதீய ஜனதா செய்யும் சித்து விளையாட்டுதான் பொது சிவில் சட்டம்!

குஜராத் மாநிலத்தில் டிசம்பர் மாதம் சட்டமன்றத் தேர்தல் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் நடத்தைவிதிகள் நடைமுறைக்கு வந்துவிடும்.

ஆனால், அதற்கு முன்பே பாரதீய ஜனதா தலைமையிலான மாநில அரசு மதப் பகைமையை முடிந்தவரை முடுக்கிவிட்டு விட்டது.

குஜராத்தில் பொது சிவில் சட்டம் கொண்டு வரப்படும் என்றும், இதற்காக குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் அந்த மாநில உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி கூறியுள்ளார்.

பூபேந்திர படேல் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு மீது குஜராத் மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

இதை திசை திருப்ப பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் அந்த மாநிலத்தையே சுற்றிச் சுற்றி வருகின்றனர்.

கடந்த 27 ஆண்டுகளுக்கும் மேலாக குஜராத்தில் பாரதீய ஜனதா ஆட்சிதான் உள்ளது. தங்களது ஆட்சியின் சாதனைகள் என்று அவர்களால் எதையும் கூற முடியவில்லை. மாறாக அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது, ஜம்மு கஷ்மீர் மாநிலத்திற்கான அரசியல் சட்டம் 370வது பிரிவை ரத்து செய்தது போன்றவற்றையே பேசுகின்றனர்.

மாநில பாரதீய ஜனதா அரசு தனது பங்கிற்கு பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவரப் போவதாகக் கூறி அதற்கு குழு அமைக்க உள்ளது.

உத்தரகாண்ட், இமாச்சலப்பிரதேசம், கர்நாடகம் போன்ற மாநிலங்களின் பாரதீய ஜனதா அரசுகளும் இதையே கூறி வருகின்றன. மாநில அரசுகள் பொது சிவில் சட்டத்தை தனித்தனியாகக் கொண்டுவரலாம் என்று பாரதீய ஜனதா கூறுகிறது.

ஒன்றிய அளவில் பொது சிவில் சட்டம் கொண்டு வருவது குறித்தும் பாரதீய ஜனதாவினர் அவ்வப்போது பேசி வருகின்றனர்.

பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவே பொது சிவில் சட்டத்தைத் தாங்கள் கொண்டுவர முயல்வதாக அவர்கள் பேசுவது வெறும் பம்மாத்தேயாகும்.

பெண்கள் குறித்து மிகவும் பிற்போக்கான பழமைவாத கண்ணோட்டத்தையே ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாரதீய ஜனதா

பரிவாரம் கொண்டுள்ளது. பாரதீய ஜனதா ஆளும் மாநிலங்களில் பெண்களின் பாதுகாப்பு மிகப் பெரிய கேள்விக்குறியாகி உள்ளது.

பாபர் மசூதியை இடித்து அயோத்தியில் கோவில் கட்டுவது, ஜம்மு-கஷ்மீர் மாநிலத்திற்கான 370வது பிரிவை ரத்து செய்வது, பொது சிவில் சட்டம் கொண்டு வருவது என்பதெல்லாம் பாரதீய ஜனதாவின் இந்துத்துவா நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதி. இதைத்தான் நடைமுறைப்படுத்த பாரதீய ஜனதா முயல்கிறது.

பணவீக்கம், வேலையின்மை, விலைவாசி உயர்வு, பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வு, ஜி.எஸ்.டி.வரி போன்றவற்றிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப பாரதீய ஜனதா செய்யும் சித்து வேலைகளில் ஒன்றுதான் பொதுசிவில் சட்டம் என்பது.

தேசத்தின் கவனத்தை திசைதிருப்ப மதவெறி அரசியலைத் தொடர்ந்து முன்னெடுக்கும் பாரதீய ஜனதாவை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

## பேச்சில் கவனம்!

ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அறிவிக்கின்றார்கள் : அன்பு நபிகளார் (ஸல்) கூறினார்கள்: ‘இறைவனை நினைவு கூராமல் நிறைய பேசிக் கொண்டே இருந்து விடாதீர்! ஏனெனில் இறைவனை நினைவு கூராமல் வெற்றுப் பேச்சில் ஈடுபடுவது இதயத்தை இறுகச் செய்து விடும். மேலும், நினைவில் வையுங்கள். கடின உள்ளம் கொண்டவன்தான் இறைவனை விட்டு வெகுதொலைவில் இருப்பான்.’ (நூல்: திர்மிதீ)


## *உங்கள் கடிதங்கள் உடனே கவனிக்கப்பட வேண்டுமா?*

குர்ஆனின் குரலுக்கு தாங்கள் கடிதம் எழுதும்போது ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக கடிதம் எழுதுங்கள். நீங்கள் எந்தப் பகுதிக்கு எழுதுகிறீர்களோ அந்த பகுதிக்குள்ள பெயரை முகவரியின் மேலேயே தயவு கூர்ந்து தெளிவாக குறிப்பிட்டுக் காட்டுங்கள்.

- ஆசிரியரின் தனிப்பார்வைக்கு
- ஆசிரியர் குழு கவனத்திற்கு
- வாசகர் வட்டம்
- துஆ மஜ்லிஸ்
- இதயம் பேசுகிறது
- கேள்வி பதில்
- மரணச் செய்தி
- சந்தா விபரம்
- விநியோகப் பிரிவு
- விளம்பரம் பிரிவு

ஒரே கடிதத்தில் பல பகுதிகளுக்குரிய விஷயங்களை எழுதி அனுப்பாமல் ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனி போஸ்ட் கார்டு களாகவே பயன்படுத்துங்கள். அல்லது ஒவ்வொன்றையும் தனித் தனி பேப்பர்களில் எழுதி தனித்தனி தபால்களாக மடித்து ஒரே கவரில் வைத்து அனுப்பி உதவுங்கள்.

– நிர்வாகி “குர்ஆனின் குரல்”

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

# LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS




Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India